சிவமயம்.

குஹப்பிரம்மணேநம:

திருச்சிற்றம்பலம்.

திருப்பா.

தேவையம்பதியெனுந் திருவிராமேச்சரத்தைச்சேர்ந்த

பாம்பன் :

சா - அப்பாவுபிள்ளையவர்களாகிய

ஸ்ரீமத்-குமாரகுருதாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

எழுத்திறைபோ லக்சலந்தெல் காமியக்கா நீர்கு
முழுத்சலகன் மார்க்க முழுதும்—வழுத்திக்
கருப்பா சயகல்ல கண்டக்கைப் போட்டுந்
திருப்பா வினைமதுரத் தீதன்.

இதனை,

சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

சு - இரத்தினவேலுமுதலியாரவர்களது

பண்டித மித்திர யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

முகம்மதியாண்டு ௵ - வது.

1891.

All Rights Reserved

குமாரகுருப்யோநமஃ.

முகவுரை.

பரவைசூழுலகிற் பரகதிநிமித்தம் பன்மதங்களேற் பட்டிருப்பினும் அவற்றுள் அநாதிமுத்த சித்துருவாகிய பரமேச்வரனு லான்மாக்க ளுய்யும்வண்ண மருளிச்செய்த வேதாகம வுடன்பாட்டிலுள்ள வைதிக சைவசித்தாந்த மொன்றே யிகபராநுஷ்டானங்கட் கியைந்து சரியை கிரியை யோக ஞானமெனுஞ் சௌபாகக் கிரமமாக விளங் கற்பால தென்பதைக் கற்றுவல்லார் யாவருமறிவர். அந் நெறிதுலக்கா வெந்நெறிநூலையு மொரு பிரமாணமாக் கோடலொழிந்து முக்கியப் பிரமாணமாய அவ்வேதாகம புராணேதிகாச வாயிலாகவும், சிவஞானச்செருக்கின் மிக் கோங்கிய சைவசமயசித்தாந்தத் திருவருளாளர் திருவாக் குகளின் வாயிலாகவும், அந்நியர்கூறும் விரோதக் கூற் றினைவிலக்கு மாற்றலுடைய அதிநுட்ப விவேக போதக சாமர்த்திய யுக்திவாயிலாகவும், சர்வக்ஞசக்தி - நித்யதிரு ப்திசக்தி - அநாதிபோதசக்தி - அலுப்தசக்தி - சர்வசு தந்தரசக்தி - அநந்தசக்தி யென்னும் ஷாட்குண்ய சம்பூ ரண அவிநாசிப் பொருளாகிய ஸ்ரீமத் குஹப்பிரம்மத்தின் திருவருளாற்கொண்ட துறவுநெறியின் றுணைரு மநுபவ வாயிலாகவு முண்டாகாநின்ற அரிய சிவஞானமொன்றை யே எம்மனோர்க்குத் தெற்றென வெளிதிற் புலப்படுத்து வான் லோகோபகாரமாகத் தம்முகத் தவ்வத் தருணத்து

நிகழ்ந்த ஆழ்ந்த கருத்துக்களை யுட்கொண்டெழுந்த வதீதப்பிரஹ்ம ஸ்தோத்ரரூபமாகவும், வேதாகம பாஷியம் போலவும், பண்டிதர் பற்றும் பல சந்தாமிர்த நிலையமாகவும் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளால் தளிமஞ்சான்ற தண்ணந்தமிழி லினிதருளிச்செய்துள்ள ஸ்ரீமத் திருப்பா ககOC-திருச்செய்யுள்களையும் நுண்ணிதிற் றீட்டிய படங்களையும் பரமனடியார் பலருக்கும் பயன்படுமாறு மெய்ப்பொருளின் மெய்யன்புபாராட்டு மெய்யன்பர்களிற் சிலர் அச்சிட்டுத்தரவென்று நசைஇய வேண்டுகோட்படி புதைபொருளுணர்வா யெழுதுவித்த சில விசேடக் குறிப்புகளுடன் இஞ்ஞான் றச்சிட்டு முடித்தனம்.

மேற்படி சுவாமிக ளருளிச்செய்துள்ள குமரகுருதாசர்பாடல் கஉளள - ம், திருவலங்கற்றிரட்டு முதலிரண்டு கண்டங்களும் பின்னரச்சிடப்படும். அவ்வாறு பரமபதியின் றிருவருண்முன்னின் றருள்புரிக.

இங்ஙனம்:

கு-வே-இராஜாமுத்துக்கிருஷ்ணநாயுடு.
செ - கோவிந்தராஜமுதலியார்.

சிவமயம்.

விருத்தாசலம் தியாகராஜகவிராயர் குமாரர்

வி - கலியாணசுந்தரம்பிள்ளையவர்கள் பாடிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

(குளகம்.)

எப்பொருளு முப்பொருளி லடங்குமென
வெழின்மேமலோ ரியம்ப லாகின
யப்பொருண்மூன் றினையுமையந் திரிபறியா
மைகளீங்கி யகில மெல்லாஞ்
செப்பமுட னறிந்திடவுஞ் சிவஞ்சைவ
மிரண்டையுமே சீர்சால் வேத
மொப்பமுடன் முடிவாக வுணாக்குமென
வுணர்ந்திடவு மொழியா நீர்த்தாம். க.

கருப்பாச யக்குகையிற் கட்டுண்ணல்
கழிந்திடவுங் கலதி வாசப்
பொருப்பாய வேகாண்மப் புரட்டுபொடி
பட்டிடவும் போந்த தான
விருப்பாலே குமரகுரு தாசனுங்
தவமேவுந்தர் வேல வன்மேற்
றிருப்பாவொன் றியற்றினர்கைம் மாறுலகி
லென்கருதிச் சிறப்பு வீர். உ.

திருப்பா அச்சிட முன்பணமளித்த அன்பர்களின் பெயர்.

	ரூபா.
சிதம்பரம் குசவன்பேட்டை கு - வே - இராஜா முத்துக்கிருஷ்ண நாயுடு	50
,, கு - வே - இராமாநுஜ நாயுடு	ரு
,, கு - ரா - அரங்கநாயகலு நாயுடு	ரு
,, வள்ளுவ திருக்கழிப்பாலைச்சித்தர் சிதம்பரபண்டாரங் குமாரன் விசுவலிங்க ஜோஷியன்	50
ஜெயங்கொண்டபட்டணம் தீ - ஆதிமூலப்படையாச்சியார்	50
மேலத்திருக்கழிப்பாலை சு - சொக்கலிங்க முதலியார்	50
சிதம்பரந்தாலூகா வரகூர் - ஆறுமுகபக்தர்	ஏ
,, பெ - மு - சுப்பிரமணியபக்தர்	ரு
தூத்துக்குடிக் கவர்ணமெண்டுத் தந்தியாபீசு ந - சுப்பிரமணியபிள்ளை	ரு
திருநெல்வேலிச் சிக்க நரசையன் கிராமம் சுடலைமுத்துப்பிள்ளை	ரு
,, ந - குப்புசாமிப்பிள்ளை	ரு
,, சரவணப்பெருமாள்பிள்ளை	ரு
,, ஆண்டியப்பபிள்ளை	கூ

	ரூபா.
திருநெல்வேலி தி - மு - வீரபாகுபிள்ளை	க0
சென்னைக் கவர்ணமெண்டுத் தந்தியாபீசு செங்கல்பட்டு சே - கோவிந்தராஜமுதலியார்	க0
சென்னை நெல்வேலி முருகேசமுதலியார்	ரு
,, பா - அ - பக்தவற்சலமுதலியார்	ரு
,, செங்கல்பட்டு அரங்கநாதமுதலியார்	ரு
,, வி - கலியாணசுந்தரம்பிள்ளை	ரூ
,, மண்ணிப்பாக்கம் அப்பாதுரைமுதலியார்	ரு
,, கிரிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஈ - இரத்தினவேலுமுதலியார்	உ
இராமநாதபுரந் தாலூகா பிரப்பன்வலைசக்கிரா மம், தி - உடையநாயகம்பிள்ளை	க0
,, சொ - நமசிவாயம்பிள்ளை	எ
,, கிராமமுன்சீபு சொ - சின்னசாமிப்பிள்ளை	ரு
,, க - துரைசாமிப்பிள்ளை	ரூ
,, உபாத்தியாயர் லெ - கருப்பையாபிள்ளை	உ
,, தாலூகா இருமேனி முத்தரசுபிள்ளை	ரு
,, ,, குஞ்சியார்வலைசு உ - லெ - நல்லுச்சாமி சேர்வை	உ

பிரகடனம்.

		ரூ. அ. பை.
1.	இந்நூலாகிய திருப்பா காலிகா கட்டடம் புத்தகம் 1 - க்கு	1—4—0.
	ஷை மார்பில் ஆப் பைண்டு ,, 1 - க்கு	1—0—0.

இவ்வரியநூல் சென்னை வைத்தியநாதமுதலி வீதி 41 - வது கதவிலக்கமுள்ள கிரகத்தில் செ. கோவிந்தராஜ முதலியார், சிதம்பரம் குசவன்பேட்டை கு. வே. இராஜா முத்துக்கிருஷ்ண நாயுடு, திருநெல்வேலி சிக்கநாசையன் கிராமத்தில் கண்டிராக்டர் சுடலை முத்துப்பிள்ளை, இராமநாதபுரந் தாலூகா உச்சிப்புளிப் போஸ்ட்டுக்குச் சேர்ந்த பிரப்பன்வலசைக் கிராமத்தில் தி. உடையநாயகம் பிள்ளை யிவர்களிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

அடியிற்கண்ட புத்தகங்கள் சென்னை ஷை கோவிந்தராஜ முதலியார், பாம்பன் லெ. து. முத்துக்கருப்பபிள்ளை, ஷையூர் சா. அ. முருகையாபிள்ளை யிவர்களிடத்தில் விலைக்குக் கிடைக்கும். தேவையானோர்தெரிவித்தால் அவர்கள் வி. பி போஸ்டிலு மனுப்புவார்கள். தபாற்கூலி இதிற்கண்டவிலைக்குப் பிரத்தியேகம்.

2.	பரிபூரணானந்தபோதம் புத்தகம்	1-க்கு	0—4—0.
3.	தகராலயரகசியம்	,,	0—2—0.
4.	கந்தரொலியலந்தாதியுங் குகப்பிரமவருட் பத்தும்	,,	0—1—0.
5.	சிவஞான தேசிகம் தமிழ்வசனம் 1 - வது வியாசம் 3 - படங்களுடன்	,,	0—3—0.
6.	ஷை 2, 3 - ம் வியாசங்கள்	,,	0—3—0.
7.	சிவஞான தீபம் தமிழ் வசனம் பைண்டு வித்தியாசத்தால்	,,	அணா 4-முதல் 6வரைக்கும்.
8.	இராமசேதுமான்மியம் தமிழ் வசனம் 2-வது பதிப்பு	,,	0—5—0.
9.	திருவலங்கற்றிரட்டு முதற்கண்டத்தில் 111 - பாட்டுமட்டும்	,,	0—2—0.
10.	திருத்தொடையல் 30 - செய்யுள்	,,	0—0—9.
11.	சண்முக சகஸ்திரநாமம் தமிழுரை	,,	0—3—0.
12	சண்முக கவசம்	,,	0—0—9.
13.	பரபரிபூஜனபஞ்சாமிர்தவண்ணம்	,,	0—0—9

உ

சிவமயம்.

குஹப்பிரம்மணேநமஃ

திருச்சிற்றம்பலம்.

திருப்பா.

கடவுள் வணக்கம்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாராதி யைம்பூத மல்லாத தாயண்ட
பகிரண்ட மூலமான
பரவிந்து பரநாத நிலையைக் கடந்தரும்
பாவன வருபவிரிவே
நாராக நிற்குமா மாயையை யகன்றதாய்
நாப்பணடி யீறற்றதாய்
* நானென தெனுநெறிச் செல்வர்க்கம் பிரமாய்
நந்தறிரி பில்லாததாய்
நேராய வுவமான வுவமேய நீத்ததாய்
நின்மல வசங்கரபமாய்
நித்யபரி பூரண வகண்டதத் துவஞான
நிஷ்டையில் விளங்குநிலவாய்த்
தாராள மாய்முதிய முதலு லிரண்டுமொரு
சம்மதங் கொண்டுமூய்விற்

---

* நானெனப்படுவது ஞாதிரு. எனதெனப்படுவது ஞானரூபக்கள். இவைகளை முறையே சண்டாசட்சி சட்சிப்பொருளாக திரிபுடியென்ப.

சாற்றுநற் சச்சிதா நந்தமா யுள்ளசிவ
சாமியைச் சிந்தைசெய்வாம். க.

பன்மதத் தொறுவெலா மறுதியிட் டறைதரும்
பலபேத தெய்வமாகிப்
பகருமத மதங்கட் கதீதநிலை யாகியொரு
பரிசின்றி நிகழ்வதாகிப்
புன்மதி யணுக்களுறழ் வுக்குறழ்வ தாகியெதிர்
போக்குவர வற்றதாகிப்
புகறரிய வண்டகோ டித்திரள்க ளோத்தனது
பூர்த்திநில வருள்வெளியிலே
வன்மையொடு வதியவைத் தைந்தொழிலு மவ்வரு
வலியா னடத்தியுனலு [ளின்
மறதியு மிலாதமலி சூனிய சிதாகாச
வஸ்துவா யநவரதமு
மென்மனதி லுள்ளகுரு தெய்வமா யெக்காலு
மேசற்ற வின்பமாகி
யெங்குநிறை வாயவிர் குகப்பிர மென்பதை
யெணுதெணி யிறைஞ்சல்செய்வாம். உ.

தூர்த்தகுண மூள்ளவப சாரிநடை யன்னவொரு
துறையன் றநந்தசெய்வந்
தொழுவழு வுறுதொருவ னுடலிலொரு ஜீவனே
தோய்ந்துநின் றிடுநீர்மைபோற்
சீர்த்தியுக மெங்கணும் பூர்த்திநிதி யாகவே
சின்மய வியோமவடிவாத்
திகழகண் டாகார சத்யசை தந்யபர
தெய்வத்தை யுய்யுமெல்லா

மூர்த்திகளு மேத்துபரி பக்குவங் கண்டவர்கண்
முன்னுமா றருளுமருளின்
மூலமுத லாயிணையில் வைதிகசை வத்தினாளிர்
முதற்கடவு ளாயபொருளை
வார்த்தைமன தாலளவி டற்கொணு வத்துவித
வாசா மகோசரத்தை
மாசற்ற சுத்தசிவ சுப்ரமணி யத்தைநாம்
வந்தித்து வாழ்த்திவாழ்வாம். ஈ.

கருணைக்குகப்பிரமம்.

சுருதியின் றிறமான கருமாதி மூன்றினுந்
துகளற்ற சைவதந்த்ரஞ்
சொன்மிக்க சரிதாதி நான்கினுங் கடையிற்
றுலக்குசன் மார்க்கமென்னும்
பொருவின்மெய்ஞ் ஞானவத ரொன்றுமே யேழையேன்
புந்திக் கியைந்தததிலே
புனையற நடந்தசி பதப்பொலிசை யெய்தாது
புன்செயலி னின்றவெற்குத்
திருவரு ளலாதத்தை யுறுவதின் றென்றுனது
திவ்யசமு கத்தைநாடச்
சிந்தைதந் திதுகாறு மாண்டநீ முற்றினுந்
திருவுள முவந்துநெய்தைக்
கருணைகூர்ந் தென்னுட் கலந்தருள வேண்டுமே
கங்குல்பக னீத்தநிலையில்
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. க.

எழுமொரு குணக்கினு மிறங்கொரு குடக்கினு
மிலாதுச்சி தன்னிலொளிசெய்
யினனிற்கி னிழலற்ற நீர்மைபோன் முதனூ
லிரண்டினக டாகநிமிரும்
வழுவில் * வே தாந்தசித் தாந்தசம ரசசாத
மார்க்கத்தி னிற்கிலுபய
வாதமுந் தோன்றற் கிலக்கற்ற தீர்வையா
மௌனமது தோன்றுமதுவே
முழுமுதற் பரமான நுன்னகண் டாகார
மூலமெய்ஞ் ஞாநவானுய்
மொழிசிதா காசதே ஜோமயா நந்தமாய்
முடிகின்ற வுண்மையுணராக்
கழுதன்ன வின்னமுஞ் சுலவுகுண மெய்தினுன்
கருணைக்கு மாளாவமே
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. உ.

கற்றவர்கள் கற்றவப் போனடக் காதிந
கர்மவா தத்திலாடி
கறங்கெனச் சுலவவுங் கல்லார்க ணல்லநிஷ்
காமமுற்றுஞ் சிதடர்போற்
றெற்றுடைய வேதாந்த சித்தாந்த சமரசந்
தேராத புன்மையதனுற்
சிந்தைபுடை கொண்டுநிர்ச் சிந்தைநிலை கூடாது
திரிபுறவு மாடலுன்றன்
கொற்றவா ணைக்குளுள மாயையி னியற்கையோ
கொடுவினைத் தொடர்பின்வலியோ

* வேதாந்த சித்தாந்த சமரசசாத மார்க்கமென்பது வேதமுடிவும் ஆகமமுடிவும் சமமென்கொள்ளுஞ் சத்தியமான நெறியென்று பொருளாம்.

குற்சித மலச்சீவ சுபாவமோ கற்றுமென்
கொள்கைநன் காகவிலேயே
கற்றைச் சடாடவிக் கடவுள்கல் லாலகங்
கைவைத்த ரகசியத்தே
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. கூ.

புன்மனப் புன்மையே பொதுளுமதி யீனனேன்
புத்திக் கியைந்தவாறுப்
புகலவுள முரணத்து விதமார்க்க மொன்றையே
பூர்த்தியுர மானமுடிபாய்
வன்மையொடு கொண்டிச்சை யாற்செய்யும் வழுவெலாம்
வஸ்துவா மெற்கின்றனு
வாய்ப்பறை யறைந்துநின் ரூலுமம் மட்டிலார்
மனத்தெளிவு கூடுமதுவு
மின்மைபட * நல்லத்து விதமான வருண்ஞான
மில்லாது முத்தியிலையென்
றேசற விளக்குசித் தாந்தமுங் கற்றுநா
னிழிவாக வென்கண்விளையுங்
கன்மங்க ளுக்குட்கி யல்லலுவ ரமிழ்கிறேன்
காப்பதுனை யன்றியாவர்
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. ச.

இதுகாறு மீயென் பொருட்டையர்ந் துளசெய
லியாவுநன் குய்த்துநோக்கி

---

* இந்த நல்லத்துவிதம் இந்நூலுள் பல்லிடங்களில் விளக்கியிருப்பினும் பரம்பரனென்னும் பதிதத்திலும் வேதப்பதிதத்திலுமே யினிது விளக்கப்பட்டிருக்கிறது.

லெப்படியு நானுன் னடித்தொண்ட னென்பதுவு
மென்கடவு ணீயென்பதூஉம்
விதியாகு மல்லாது பிசியாவ தன்றென்
விவேகசூ ழத்தினந்தும்
வியர்த்தவினை யசுசிகண் டென்னைநீ விடினுநான்
விடுவதின் றமிதப் பொலாச்
சுதனெனினு மன்னருட் டாதைதள வன்மையுந்
தோன்றநடு வுண்டுகொல்லோ
சூரற்கு மைத்திமிர நீக்கப்ர யாசமுஞ்
சொலலாமோ வையவெனது
கதழ்வாவு மனமாசு நின்னருண்மு னிற்குமோ
கபடொன் றிலாதபெரியோய்
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. ரு.

தடவைமா டாடில்ல மனமுகா ருறவுபொன்
றழிழில்குலப் பெருமைமன்மைத்
தொடர்பாதி யோம்புவிவ காரத்தி லதிமுரண்
டோன்றுநெறி நின்றநானுன்
படர்தகவு வலியாலவ் விவகார நீத்துனது
பதவுத்தி பெறுதலுங்குப்
பவுள்சென வலித்துநிற் கின்றவிக் கானீ
பராமுகம் பணுவதெனினுன்
றீடவருட் டிறமோது சட்டநன் னீதியுஞ்
செல்லுங்கொ லென்வழக்குந்
தோயுங்கொல் விவகார மோயுங்கொ லையவொரு
திட்டமில் லாதநந்தங்
கடவைக்கு நானிலக் காயினு மளப்பிலுடல்
கண்டாலு நுன்னடிமைகாண்

கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. கூ.

உயிர்களை யநாதிமல பந்தத்தி னின்றுள
முவந்துவிடு தலைசெய்வதுன்
னுரனதுக் கிரகவரு ளுக்கே யுரித்தென்ப
துறுதிநா னுள்ளதடியாப்
பயிறுமிது தாறும்வன் பாசபந் தத்திடர்ப்
படுமென்னை விடுதலைக்காம்
பரமநெறி நேடும் படிக்கிந்த ஞான்றெனுட்
பதிவாய வருள்வல்லபஞ்
சயமுடைப் பூரணந் தாராது மந்தநடை
தருவதால் வலிகுறைந்த
தரமா யிருக்குமோ வலதென்க ணுளமலத்
தளமட்டு மதிவன்மைசால்
கயமா யிருக்குமோ வுள்ளபடி யோதெனது
காதற் கியைந்தகண்ணை
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. எ.

முண்டமுண் டநமுமொண் கிளுடையு மிலகவென்
முன்வந்து சொற்றவொருசொன்
முடிவைநன் குய்த்துணர மூலநா டிச்செயலை
முன்னிடும் படரலாதாய்த்
துண்டநுதி முதலாய காட்சிகளொ டக்கரஞ்
சொன்னெறிக ளல்லாததாய்ச்
சுகிர்தகன் மம்விரத மூர்த்திதல நீர்நிலைக
டொழுறுய்த வில்வாரியா

யெண்டிகையு மப்பாலு நிறையுமொரு நீர்மையர்
யேசிலா மோனமுத்னா
யென்றகை காட்டான தகராலயப்பே
ரிராசியச் சுகமார்க்கமாக்
கண்டேனவ் வணநிலாப் பேதைக்கு நுன்னருட்
கலிதாயு மாக்கழுறுமோ
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. அ.

யாப்பூரி னின்றுனடி நாட்டமெனும் வங்கத்தி
லேயெக்கி யழுதநகர
யாத்திரையை நீப்பெனுஞ் சிந்தகஞ் செய்யிரா
ளியானென வெழும்புமூல
மாப்போத மோகாதி கனவிண் டெழீஇயறை
வலிதனக் கஞ்சுதமியேன்
வந்தவதர் சென்றேறு துறைசெல்லி னக்கணும்
வழுத்திய மோகாதிசுசன
மூப்பான கோரத்தி லுலல்ல லலமிக்கு
மோதிமோ டேற்றிநைத்தே
முழுவின்ன றருமாக லாலென்ன புன்கணினி
மூசினும் பின்செலாதுன்
காப்பா லிறங்குதுறை காண்பதே சுகமிக்
கருத்தின் படிக்கருள்செயாய்
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. கூ.

தோலென்பு நெய்த்தோர் புலான்மச்சை யெசமாய
தொக்கது தணந்தபின்னர்த்

தொல்லவா சிச்சூரின் வன்சிலதர் நோக்கியட
துப்பிலி சுசிலமில்லி
ஞாலமிசை யல்லவைச் சுமையா யிருந்துளாய்
ஞானப் படிற்றுநடையோய்
நன்னிலை யிலாதோ யெனச்சுளித் திருகவுளு
நையவெனை யறையினஞ்ஞான்
றேலமிடி னும்வாயி லறைவமொனு முருமுற்
றுளுக்குளே யுலைவதல்லா
னுத்தரம் பரவிவிடு தலைகொளற் கியலுமோ
வுன்றஞ்ச முன்றஞ்சமே
காலனதி காரங் கடந்தவிரு மருணகிரி
காண்டவொரு பெரியபொருளே
கரிசற விளங்கவரு சின்மயா நந்தமே
கருணைக் குகப்பிரமமே. ௬0.

ஆநந்தபூர்த்தியுரம்.

உலகாக மல்கசர சரமென்ப வற்றுளோ
ருழின் றநந்தமாக
வுளசுகத மொடுசுஜா திவிஜாதி பேதங்க
ளொதிடற் கேதுவாய
மலபாச நீக்கமா யப்பாச விரிவெலா
மயிர்நுனையு நாட்டுதற்கு
வயினன் றளாவிநிறை வுற்றவுன் னுற்றலில்
வழுத்துதமி யேன்புறம்பா
விலகேனு னன்பர்கா ரணமா விகைக்குமோர்
வியனரு ளெனக்கும்வேண்டி

வெய்துறல் கொளும்பட. ரொழிக்குமா றென்னுளே
வெளியாவ தெக்கால்கொலோ
வலகிலா மாக்கருணை யுள்ளுவந் தருளுமின்
னருள்கூர் குகக்கடவுளா
மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய ககநமே
யாநந்த பூர்த்தியுரமே. க.

கருப்பாச யப்பிணிப் புக்குட் கிடந்தல்ல
கண்டமுறல் போலியற்கைக்
கருண்மலக் கட்டுளஞர் கொள்ளுயிர்க் கொவ்வுதநு
கரணுதி களைநல்கிநல்
லருப்பெற்ற வணுபகூக மொடுசம்பு பகூகமெனு
முண்மைநிலை யோர்ந்தறிந்தின்
புறவெனத் தெண்ணூல் விரித்துநடை காட்டிமெ
யுணர்த்தியுள வுன்றகைமைசா
லிரக்கமறி யாதார் பிறர்க்கிடர் விளைத்தபோ
திச்சையா லல்லலுறுபோ
தெய்யாமை யாற்செய்த கன்மபலநுகர்போ
தெமைப்பகவ னென்பணினனென்
றரற்றுமட மென்கண்ணு மாருங்கொ லினியைய
வருள்கூர் குகக்கடவுளா
மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய ககநமே
யாநந்த பூர்த்தியுரமே. உ.

கண்டெரியு நீர்மையு நாவுருசி கணலுங்
கடந்திவளல் காணுடைமையுங்
காதுறற் புழுகசி கேட்டுமுகர் தன்மையுங்
தால்கர நடந்துதொடலுந்

தொண்டைவாய் பயிறலும் பாயுமல நீக்கலுங்
தொள்ளையங் கத்துபல்தஞ்
சுகமதர்ப் புறலுமுள் ளளவுமார் வத்தாலே
தோம்விளையு மன்றுறுதிசால்
பண்டமதும் விளையுமோ பரமசுக மணையுமோ
படியிலவை யின்றென்னினும்
பயனற்ற முழுமூட மாமவைக ணல்வினைப்
பலனுளர் கட்கியாண
ரண்டுதுணை யாநிற்கும் விதியிலே னென்செய்வே
னருள்கூர் குகக்கடவுளா
மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய ககநமே
யானந்த பூர்த்தியுரமே. ஈ.

உனர்வுவினை யாநிகழ் தசேந்திய முகையையு
முளத்தினையு முற்றுநோக்க
வுறுநன்று தீதெனு மிரண்டிற்கு முபயோக
முளகா செழுத்தன்னவே
யுள்ளதெனு நன்னடுத் தோன்றலா னவைகளா
லண்டாகு மிருவினைக்கு.
மனலா யிருந்தபிணை யான்மாவே பாத்திய
மலாதுநீ யாவதன்றென்
ருசங்கை யறவறிகி றேனிரா வெல்லையுற
முவ்வினைக ளெஜந்மமு
மநிமாலி னமுமாக மேமன்மெலு மாமெனலு
மாணையிவை யோய்வதற்கென்
னணுபக்கூ முன்பக்கூ மாகவே யுள்ளினை
னருள்கூர் குகக்கடவுளா

மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய ககநமே
யாநந்த பூர்த்தியுரமே. சு.

புவநமெவை புஞ்செறிந் துயிர்தொறுங் காரண
புரத்துளே விரவிநிற்கும்
பொல்லாவல் லாணவத் திமிரமது தன்சத்தி
போய்க்கெடா மற்கெடற்கூ
மிவர்போத விந்துவுங் கரணதி பங்களு
மிலக்கம திழந்திடற்கூ
மேசற்ற நுன்னருட் பாநுத னியற்கையா
மெற்கற்றை பலபரப்பி
யவிர்பாணி யெனோநா னறிந்ததையு மநனறிந்
தருள்யோக சுகபோகமா
மநுபவத் தின்மே லதீதத்தை யெய்துதற்
காகுநா ளாகுநாள்வே
றவதியுள நாளெலா மாகாத நாட்களே
யருள்கூர் குகக்கடவுளா
மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய ககநமே
யாநந்த பூர்த்தியுரமே. நு.

பாசமென் றேறுதத் துவகணத் துள்ளுயிர்ப்
பாங்காக நின்றுழிதரும்
பரிசுடைய மனதையன் றப்பாச முளதென்று
பயிறவும் வளாகமுண்டோ
வாசையே வடிவமா யுள்ளவது வேமாயை
யையவிது தன்வசத்தே
யாகாத காலமே பெத்தநிசை முத்திநிசை
யாங்கால மெவ்வாறெனிற்

காசினின் னருடனைத் தேதடிடற் குரியவக்
கனமனக் கதவிவினைதான்
காமர்வதி யோடே கலந்தவணு வுணர்வுக்
கயத்தைதனி லிதளிவித்தமே
லாசுறுமவ் வதியோடு தாழுமம் மனதுதந்
தருள்கூர் குகக்கடவுளா
மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய ககநமே
யாநந்த பூர்த்தியுரமே. சு.

பார்வைகட் கெட்டாத தாயத்த மதுகொண்டு
பற்றிடற் கொண்ணுததாய்ப்
பவநமுந் தூமமும் புகுதா விடத்திலும்
பாடின்றி நுழைநுண்ணிதாய்க்
கார்விழிக் குப்புலப் பட்டவெலை மட்டுமோர்
கணத்துளே போய்மீள்வதாய்க்
கண்பாலு மந்நிய பதார்த்தமன் றித்தனைக்
காணுத வுட்கண்ணதாய்ச்
சோர்வுமிங் கிதமுமுற் றொன்றைவிட் டொன்றினைத்
தொட்டுநிற் கும்பண்பியாய்ச்
சுசநமது போலவே சலநமே சுவாபமாச்
சுலவவுள நெஞ்சைவசமா
யார்வொடு செயாதாரு முணையறிய வல்லரோ
வருள்கூர் குகக்கடவுளா
மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய ககநமே
யாநந்த பூர்த்தியுரமே. எ.

இந்திரிய முதலான நெஞ்சுவய மாயினரு
ளென்றபொருள் வயமாகுமன்

றெங்கணும் விகாதமென் பதுசிறி துமில்லா
தியாவுந்தன் வயமாமந்தைச்
சொந்தப் படுத்துமா றேயுபா யங்கள்பல
சோர்வற விதித்தவைகளைச்
சோபாந முறைகொண்டு சரிதைமுதன் மூன்றினைச்
சொற்றவுங் கைவந்ததைப்
பந்தகமில் சன்மார்க்க ஞானமென வும்பாகு
பாடுசெய் துளதிலடியேன்
பாழ்த்தநெஞ் சென்வயப் படவேரு பாயவினை
பற்றவென் ரூலுமவைகட்
கந்தமதை யேகருத வைத்ததா லினியோவா
தருள்கூர் குகக்கடவுளா
மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய கனமே
யானந்த பூர்த்திபுரமே. அ.

தாமத மிராஜத மெனுந்திற விருத்தியைச்
சார்மனம் புலவுபழைய
சாதமதி யுண்டிமா டங்கரிய தேதுவின்
றதியிவை துறந்திருந்து
நேமநிறை யாலே தமோகுணமும் வெங்கார
நீத்துண்ணு நேர்மையதனு
னிகழ்கின்ற விராஜதமு நீங்குபண் பானுமுன்
னீலத் தடுப்பதானு
மோமுதல வரிகளை விடாதுச்ச ரித்திடு
முரப்பானு முன்னுநினைவு
யொருசேர முத்தைகளில் வைப்பதா னுஞ்சிறி
துரங்குறைந் தேமயக்க
மாமன்றி யருள்வெளியி லடையுமோ வடையுமா
றருள்கூர் குகக்கடவுளா

மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய சகநமே
யாநந்த பூர்த்தியுரமே. கூ.

மானவ னுடற்குநிழ லன்னவா சாமூல
மலவுயிர்க் குள்ளமேபாத
வானிடை யெழும்புமன மானதுவு மப்மேபாத
வானமு மொடுங்கவரிய
ஞானமய மானமே பருளிலே தனதுசெய
னந்தநின் றிடல்கடனெனு
நவில்சரத சித்தாந்த நேரறிகி லார்க்கிந்த
ஞாயமோ துவதல்லவே
யூனமில் லாதவிந் நிலையையுன் னடியனே
னுணருமா றருள்செய்தநீ
புற்றுய்ய வருளாது விடுவையோ நானும்விட்
டுழனெறி யினிச்சேர்வமே
வானுசா லருணகிரி நாதனு ளுவந்தவா
ரருள்கூர் குகக்கடவுளா
மமலநிர்ச் சங்கசிவ சைதந்ய சகநமே
யாநந்த பூர்த்தியுரமே. கஎ.

திவ்யசுப்ரமண்யம்.

சீரா ரருட்குரவ னுயுமிறை யாயுநார்
செய்பவர்க் கெளிஞனுயுந்
திகழுன்னை முன்னிட்ட மார்க்கத்தி னிற்கின்முற்
றீயவினை யான்மடமையாற்
சாரூறு களையவ்வவ் வமயத்தி னூறிநெறி
தந்தருளி லேநடத்தித்

தன்மயம தாமாறு கூடிக் கலப்பையது
தவறிடினு மறநிலைச்சீர்
சோரா தளித்தருள்வை யிவ்வதர் விடுத்தருட்
டுணையின்றி நாம்பரமெனச்
சொல்பதக ரெண்ணமெவ் வண்ணநிறை வேறுமவர்
துஞ்சில்வீழ் கதியானதுஞ்
சேராது போகுமோ போகாதிந் நெறியைய
செத்திலா முழுமோசமே
சிற்ககந வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. க.

நின்மல நிராகார பூரணசை தந்யமா
நின்ற வொன்றுயநீயே
நினவுமற தியுமலா காரகண் டிதமுமா
நிற்கின்ற வுயிர்களாக
வன்மலக் கொடுமாயை யாலான தாநுவல்
வழக்கிழுக் காமன்றியும்
வழுத்துமா நின்மலப் பொருளழுக் காகுமேன்
மாசற்ற ஞானமதனற்
றன்மயப் பட்டஜீ வன்பின்னு முன்னெனத்
தண்ணிய வசுத்தமாகத்
தான்வரற் கோர்தடையு மின்றுக லாலீது
தகுதிசா றீர்வையன்று
சின்மயப் படுமுனே பசுவென்று பயிறுமோர்
தீர்வையே தக்கதீர்வை
சிற்ககந வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. உ.

உயிர்நிலை யடங்கலு மலிந்தவுணர் வான்மாவை
யுறழுவெங் கணுநிறைந்தே
யுள்ளபொரு ணீயெனவு மவ்வுடலி லறிவிக்க
வுணர்கருவி போலுயிர்களும்
பயிலந்த வுடலிலறி வித்தாலு மறியாத
பரிசுள்ள வென்பெசந்தால்
பாடலச் செந்நீர் புலாலாதி போலவே
பாசமா கியமாயையு
மயர்வின்றி யுளவென்று மறியலா முடலொப்ப
வவியுமோ பாசமென்னி
னுதவன் முன்றிமிர மவியா தவிந்தமுறை
யாமிந்த வாளிகொண்டே
செயிரற்ற முத்தியினு முப்பொருள்க ளுண்டென்று
சித்தாந்த நூன்முறையிடுஞ்
சிற்சுக வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. ௩.

ஆரணத் துபநிடத மாயையைச் சத்தியமு
மன்றசத் தியமுமன்றென்
றறைமுடிவி லேசத்தி யும்மன் றெனச்சொற்ற
தானதுவே பாசவிரிவின்
காரியக் கேடா மசத்தியமு மன்றெனக்
கழறினது வேயந்தமா
காரியக் காரண விருக்கையா மாகலிற்
கதிகூறு மிருபகுதியு
நேரவை சமரச சுபாவமே யாமிந்த
நிஜமறி கிலாரிரண்டா

நிகழ்த்தியே பொய்மெய் பிதற்றிவா தித்தலிவர்
நிகமத்து முத்தியின்பந்
தீரமா நித்தமென் றறைதலா லநுபவச்
சீவனுண் டெனலுமொப்பாஞ்
சிற்சுக வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. ச.

முன்னிலை யிருக்கிலே காகார மாயிலகு
மோனபர நிஷ்டைகூட
முடியா தெனுங்கட்டு நடுவைமுன் னிட்டுள்ள
முப்புடி பொடிந்துபோமா
றுன்னையன் றிருவுவஸ்து வின்றதுவே நீயென்
றுரைத்தவே தத்தின்முடிவை
யுணராத வெளிறருஞ் செடிவினைக் கஞ்சா
வரங்கொண்ட வுள்ளுடையரு
மென்னவிட வதுவில்லை யெங்காளு நானிமல
னென்செய்கை யென்செய்கையன்
றென்றே தனித்தனி பிதற்றியா தொருநூலி
லேற்றகவி யும்படித்துச்
சென்னிவலி வந்தான் மருந்துதே டித்திரிவர்
செப்புமிவர் சூழ்ச்சியவமே
சிற்சுக வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. ரு.

தாம்புரண மாமுனே நாம்பிரம மெனுமுரண்
சாற்றுவெற் றுரையருன்னைத்
தாழ்ந்தறிவ னைப்பத்தி காண்டியென் றுந்தமைத்
தடஞாந காண்டியென்று

மேம்பட மிழற்றுவா ரங்ஙனே யென்போல்வர்
மெய்யடிய ராயவப்பர்
மேதகச் சீகாழி வள்ளன்முத லாயினோர்
மெய்யறிஞ ரன்றேவெனி
னும்பகரு மாறவர்க ளும்பத்தி காண்டியென
நவிலுவா ரிந்தவாய
நந்துமவி சாரிபதி விரதையை யபசார
நாரியென் றெள்கலொக்குந்
தேம்பெருகு மின்னமுத வநுபவத் தடியார்க
டோர்பரம நிஷ்டைமுதலே
சிற்சுக வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. ௫.

அத்துவித நூற்கருத் தோராது மோசமுர
ணத்துவித மோதுவார்பா
லருமறைச் சென்னியின் றுணிவாக வுளவாக
மாந்தநூல் பார்த்ததுண்டோ
புத்தியுடை யீரெரு வினவிலந் நூல்சொனர்
பூதலத் தேதவர்த்துவிதப்
போக்கா யிருக்குமோ வெனவினவு வாரினோர்
போல்பவரோ வொன்றிரண்டாக்
கத்துவள் ளரிசியுங் குழைதலுமி னற்பதக்
கதழ்வாய மெளநமுடிவைக்
காணுநர்செ லுமுசு நேரவே தாமுனங்
கற்றமுரண் விடுவதரிதால்
சித்தசம யசமுற்ற பக்குவர்கள் சமரசத்
தீர்வையில் விளங்குதெளிவே
சிற்சுக வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. ௬.

முந்தைதா னிற்சாரு வாகனுல காயிதன்
முதலியோர் ஜீவசுரர்
முக்காலு மின்றுலகு மெய்யென்ற தாற்பொருண்
மூன்றனு ளிரண்டுகூறு
மிந்தநா னிற்கலா மானது விளைத்தணங்
கின்றதுவே நாமென்பர்தா
மியமான னேப்பந்த † பாசத்தை யுண்டென்
றிசைப்பதான் மூன்றிலொருகூ
றுந்தமசு மலிசுத்த நாஸ்திகமே யாவர்தா
னுள்ளபடி யோர்ந்தமட்டி
லோவாத வுன்னமுன் னிட்டுளவெம் மார்க்கமு
முத்தமமே சாலுமெந்தன்
சிந்தைகுடி கொண்டபர தெய்வமே யெங்குமொரு
தீர்வையா யுள்ளமுடிவே
சிற்சுகந வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. அ.

நூலெனும் பெயர்கொண்ட முறைகள்பல வுளுநன்
னுவற்சிசான் முதனூல்களா
நுவல்சைவ தந்திரமு மறையுமே பிரதாந
நூல்களா மறையினுட்பஞ்
சாலவெளி யாமாறு சாற்றுபிர சந்நமே
* சைவசித் தாந்தமாகுஞ்
சற்சனர்க ளிதையொப்பி யுய்வதற் கைந்துவய
தாகிடும் வரைக்குமுங்கை

† ஆன்மவாதிகள் அஞ்ஞானம் வந்தவழி தெரியாதென்பதால் பாசத்தையுமுண்டென ஒப்புகின்றனரென்பது கருத்து * இவ்வுண்மையைக் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரருளிய சிவப்பிரகாசப்பாயிரம் ஏ-ல் "வேதாந்தத்தெளிவாஞ் சைவசித்தாந்தம்" எனவருவது மினிதுணர்த்தும். இதனுற் சித்தாந்தம், வேதாந்தமரென்றும்,

போலவாய் பேசா திருந்துளோ னுன்னருட்
பொலிவிலுல் வாய்மலர்ந்தே
புகன்றசெந் தூர்க்கந்தர் கலிவெண் டிருச்செயுட்
பொருளாக மாந்தமுடிவின்
சிலமல் லாதுமூர ணத்துவித மின்றெனத்
திகழல்கிழ மைக்கரியரோ
சிற்ககந வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. ८८

ஒன்றெனு மேபதமு மிரண்டெனும் பேதமு
முறுமெளந சாந்தவோய்வா
யோதொண்மை யத்துவித மோதாது முரணுநி
யுலகைக் கெடுக்கும்வினைஞர்
நன்றுசால் சித்தாந்த மார்க்கத்தை யுள்ளுக்கு
ணுடிநாம் நிற்பதாலே
நமனுணை செல்லா தெனுந்துணிபு கொண்ணடையை
ஞாலத்தி னன்குதீநாக்கின்
வென்றியை விரும்பரவ கேதநன் சூழ்ச்சியையும்
வேட்கையையு மொக்குமிந்த
வீணைய புள்ளுவ மகம்புறனு மொத்துள்ள
மெய்யர்கணு முண்டுகொல்லோ
சென்றுவர வில்லெந்தை யருணகிரி யடிகளை
திவைகருணை யின்பவலையே
சிற்ககந வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்யசுப் பிரமண்யமே. ८०.

பரிபூரணாநந்தம்.

உததிவலை மண்டலியின் மாவளங் கிளர்சன்பை
யுறையுளி லுதித்துநல்ல
வுபநிடத வேதாந்த சித்தாந்த சமரசத்
துண்மையிற் றெனவிளக்கா
மிதமிலற் புதவருட் பாமாலை யாலருகர்
மிடல்வீய வடியர்வாழ
மிகையற்ற வபரசுப் பிரமணிய மதினின்றும்
வெளிவந்த பிள்ளையாராய்
முதமல்கு பரசுப்ர மணியமாய் முழுமைக்கு
மூலமா யுள்ளநுன்பான்
முறையிட்ட வெனதுவின் ணப்பங்க ளிக்கால
முடிவுக்கு வாராவிடிற்
பதநம்பு மடியனே னுய்யும்வகை யுண்டோ
பரிந்துதயை செய்தல்கடன்மை
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. க.

புரிவுநனி தூண்டவே பாடெனது பாடலின்
பொருடெரிந் தருண்முதலியாய்ப்
பூரணம் பெறுவா னழுங்குமடி யேனரும்
புரிவிற் கியைந்தகண்ணு
யரியதிரு வருளேயே நாடுமென தன்பாயெ
னறிவா யுளும்புறத்து

மாமெனது நாட்டமாய் நாட்டமது மோய்ந்தநிலை
யாயுள்ள * வெந்தையேயினின்
பெரியதிரு வருளொடுங் கூடியுனை நீங்காவொர்
பேறுற விலந்துறந்துன்
பிள்ளையா நிற்குமெனை விடுதியே லினியாவர்
பேணியருள் புரிவரன்றே
பரிவுடன் பெரியதிரு வுளமது கனிந்துசொன
படிகருணை புரியவேண்டும்
பகனிசா வின்னடிவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. ௨.

வஞ்சவினை கண்டஞ்சி டாநெஞ்சு ணாகவிம்
மகிமிசையிருப்பினரிலார்
மாபாத கங்கள்பல புரியினுங் கருண்மாமை
மகிடமுது கின்றாவல்போற்
கிஞ்சிலை னுஞ்சஞ்ச லத்தினை விலக்காத
கிழமையைச் சிவணுமாணர்
கிருபைபெரி தென்றக வினைக்கஞ்சு நான்பாப
கிர்த்தியமே தேனும்வினையிற்
கஞ்சநய நத்துளொரு நுண்மண் கிடப்பினுங்
கனவேதை கோடன்மானக்
கைதவங் கோடற் கியாதுதடை யாகலிற்
கறையற்ற நெஞ்சமருளிப்
பஞ்சமக திக்குநற் பாங்காகு மாறுகண்
பாரிப் சதாகாலமும்

---

* இங்கு என்தையே என்றதனால், தன்னைக்குமாரனென்றல் சொல்லாமலேயமையும். பரமசுவரிய முழுதுஞ் சுதந்தாமயறபவிக்குஞ்சித்தாக ஆன்மா விளங்கத்தக்கவனுதலின் அவனைக்கடவுள் குமரனென்னலாமென வறிக.

பகனிசா வின்னடிவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. கூ.

பூவுழி விசேடகப டங்கூறு மாஷாட
பூதிகுண மென்கணில்லை
பொல்லா னெனும்பே தொடுக்கமன மிலையுன்
பொருட்டுவா தங்கணிரிற்
ருவற விரிக்குமோ ரன்புண்டு கண்ணீர்
ததும்பநின் றேறங்களுண்டு
சகஜநிலை நாடியொரு நாட்டமுற வுண்டருட்
டகவினைப் புகழ்வதுண்டு
கூவுமறை யிற்பொய்யெழாமற் புரக்குமொரு
கொள்கைக்கும் விழைவதுண்டு
கூறுமிக் குணமெலா முளவேனு முன்னுடு
கூடாம லின்பமுறுமோ
பாவனத் திருவுள மகிழ்ந்திந்த வமயமருள்
பாலிக்க வேண்டுமெந்தாய்
பகனிசா வின்னடிவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. சு.

நீயெமுடை மேனம்பல் வைத்ததற் காகவே
நீணிலந் தனிலுனக்கா
னித்தமு ணுடையாதி யருள்கின்ரு மாகலா
னீயெனக் கருளருளெனப்
பேயென வலட்டுவதி யாதென்பை யேலுனைப்
பேணுத பேர்க்கும் வெண்மைப்
பிணியாலொர் தெய்வமிலை யென்பவர்க் குஞ்சொன்ன
பிரகார மிகசௌக்ய

மாயுளள வும்பகுக் கின்றனை யலாமலு
மநந்தமேப தங்களாய
வம்மிணைப் பூதங்க ளுக்குமருள் கின்றிய தை
னுலடிமை கோரிக்கைவம்
பாயுள தெனற்குவழி யில்லையென் கண்ணை
பகுக்குதி விசேடவருளைப்
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. ரு.

இழுதையா கியவெற்கு நீதந்த வித்தையா
லிணையினுன் னருளொன்றையே
யேற்கும்வண நான்பாடு பாவெலாம்வெண்மடலி
லெழுதியா நந்தமெய்தாத்
தொழுதெண்டர் முன்னம் படித்துறழ்வு பேசிச்
சுகோதயந் தன்னைநினைவேன்
சுத்தநிலை கிட்டாது பற்றியங னுள்ளுலைவு
தோன்றவே தேம்பிநிற்பேன்
வழுவுள்ள செயல்களைக் கண்ணிமுகம் வாடுவேன்
மதியையும் வைதுகொள்வேன்
மாசிலா வெந்தையே யாளென் றரற்றுவேன்
வாயையு மடக்குவேனுன்
பழுதற்ற திருவரு ளிரங்கிடா தேதலென்ன
பண்ணுவே னையவருளே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. சு.

எம்பேரி லேபாட வெம்முண்மை கூறவிதி
யென்றவொர் பிராரத்துவ

மிந்நாளி லுண்டஃது தீர்தாறு மருள்செயோ
மென்றமுடி வேதுமுண்டோ
கம்பீர வுறழ்விலே னறிகிலே னன்னணங்
கடவுளா முணவியக்குங்
கதழ்வாய பிராரத்து வங்குறுகி லமிழ்திலே
கனிநழுவி வீழ்தல்பொருவுஞ்
செம்பாய யானுநற் றங்கமா வேன்வேறு
திறமாய தீயவிதியாற்
றெள்ளரு ளகன்றுநின் ரூலென்ன செய்குவேன்
சிந்திக்கி லிதணவெந்நோய்
பம்பாது போமோ பராநந்த வெள்ளமே
பகுதிமெப் படியும்வேண்டும்
பகனிசா வின்னடிவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. எ.

தொட்டதுவே பற்றுக நிற்குமன மாய்த்தருட்
டீவெளியை யெவ்விதத்துஞ்
சொந்தப் படுத்தவென வீரமுற் றிதன்முனோர்
சுரமதி லேகாந்தமாக
நிட்டைசா தித்தகா னிற்குநிலை காட்டுமா
நிறைகருணை மேனிகொண்டங்
நின்மலப் பொருளையுன் னெஞ்சினிற் றங்கவொரு
நிலைமைசெய் தாய்கொலென்னைச்
சுட்டிவின விப்போய பின்னரடி யேனச்
சுரத்திடை யிருந்துன்கனை
சுகமளக நாட்டமா நின்றது பொறுமலோர்
சூழ்ச்சிகொண் டெழுவித்தாய்
பட்டபா டெல்லாம் வியர்த்தமா மோவெங்கள்
பகுதிமுள பரதெய்வமே

பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. அ.

அவிவேக மாயைக் களுபதுவ லின்விடய
மண்ணுமன மென்பதேதயா
மங்குனே யுருவஞ் சொலிற்குரங் கக்கணு
ரானபைந் தொடியமோயாந்
துவிதமுங் கொண்டமிசி ரங்கூறி னத்தொடியர்
சொல்லிதச் சொல்லுமவர்கள்
சூடுசும வாசமுந் திமிர்களப மோதமுஞ்
சுரதவச நங்கண்மலிய
விவிதமா கப்பாடு சங்கீத சல்லாப
மெல்லுனையு மேயாகுமான்
மேதினியி லிம்மாயை யறவெனக் கருதினுன்
மேன்மைப்ர தாபவருளாம்
பவிடிய மிலாதுவாய்ப் பேச்சினு லாவதோ
பற்றிப் பிடிக்கவுளதோ
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. கூ.

குத்திமிசை வாழுநன் மைந்தர்களி லேசிலவர்
கூருறு கருக்குமட்டை
கொண்டுமலை லெட்டமுயல் கின்றதற் றேதமது
குற்சிதப் புன்மதிகாடே
முத்திற மகங்கார மாயையை மடித்தரிய
முல்லுமிபற் றுய்வதாக
மூச்சைப் பிடித்துமல மூத்திர மருந்தியுனை
முன்னு துழன்றுசாவா

ரத்தன்மை யாவுமென் புத்திக் கொவாதேக
வருணெறியை நேடவைத்த
வப்பனே யென்னெண்ண மபலமா தற்கிடனு
மாமோ சொலாய்நலஞ்சால்
பத்திமைக் காரர்க்கு மருளருண கிரிபரா
பரமேமய னன்பினிறைவே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணாநந்தமே. கஎ.

பரமபதி.

திருவாத வூரடிகள் சொற்றவா றடிசிரசு
செப்பிபாணு ஞானவின்ணுய்ச்
செறிநூனக் கடிவினவி லேழ்பாத லங்களுஞ்
செல்லான நிலையிலென்றும்
பொருளாரு முடிவினவி லுணையிறந் தேதின்ற
புலமான நிலையிலென்றும்
பூதபௌ ஷியவர்த்த மாநவுர லுலுநல
போதமறை மறைகளாலுங்
தெருளான வாகம புராணங்க ளாலுமணி
சேரேணு முறைகளாலுங்
திட்டப் படுத்தவொரு குணமுளனு மல்லையிச்
சிறியேனன் மனதுவாக்கா
லொருதாறு செய்தேதாத வமைவையோ வெணையாள
வுள்ளவா நந்தவிளைவே
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. க.

இருள்வலி நிழற்போது மறிவுமய மென்னநீ
யெங்குமொரு பூர்த்தியாக
வினையின் றிருந்தாது மந்தவிருள் வலிதுணி
யிலங்குபடி கத்திலொளிர்தல்
பொருவவான் மாக்களில் விசேஷமா நிகழ்வையெனல்
பொய்யன்றிவ் வண்மையுணராப்
புல்லறிவு ருனையறிய வல்லரன் றெனறிணம்
புன்னெஞ்ச முடையபேயேன்
றிருவருட் குப்புறம் பாகநின் ரூபசாற்ற
தெளிவுகண் டெங்குநிறையோர்
செல்வப்பெரும்பே றுறப்போ கிறனுனது
திருவுள வுரித்தென்றுகூ
றருருகிருபை யென்பகூ மாவதெக் கால்கொலோ
வொள்ளருட் பிரவாகமா
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. ௨.

பசுபாச மென்றறை யிரண்டுமவை கனியருட்
பாங்கிற் றழிற்படுத்தும்
பதிபான தெய்வமு மநாதிநித் தியமெனும்
பசுமைத் திறத்திலுனு
மசலவுல காரம்ப மின்னகா லென்னவோ
ராளையில் லாமையாலு
மகிலத்தி லுள்ளவெவ் வநுபவமு மெத்தனையோ
வயநங்க டோறுமலமேபோல்
விசனமுங் கடியுமா வந்தமதான் றருமிவ்
விதிநள் குணர்ந்தவென்றன்
விவேகமன தும்புநமை யாயின்னு முளுமெனின்
விவேகிக ணகைத்திடாரோ

வசிதவுள் ளினையுதவி யிருவினைச் சமநிலையி
லுறையவைத் தருளியணைவ
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. க.

போதல்வர லாயுள்ள தநுவா யநாதிப்
புணர்க்கையாய் மூலமலமாய்ப்
புகல்பாச மாகிய வசித்தையும் போதமுள
புருஷனு கியசித்தையும்
பேதப் படுத்திப் பிரிக்கின்ற வீரமும்
பேதமி லபேதமாகப்
பிறங்கவைக் கின்றவொர் சுபாவமும் பரமவுன்
பேரருளி னுக்கலாதி
யாதொருவ ருக்குள்ள தோவிந்த வூராண்மை
யாக்கைவிழு முன்னென்கணை
யாணரோ டெய்தநீ யருள்செயா யெலிங்கி
யாளையொரு தஞ்சமென்பே
னேதரிய தேதேஜா மயாநந்தமே யெந்த
னுள்ளுக்கு ணிமிருமன்பே
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. க.

பாசனா னத்தினி லிருந்துகொண் டேயண்ட
பகிரண்ட மெங்குமலரும்
பதிஞான வுயிர்முத்தர் நாமென்று தம்மையும்
பதியையுந் தெரியாமலே
பேசியினி வருகின்ற புதைநீக்க மரணமே
பெரிதெனும் விதேகமுத்திப்

பேறென்று கொன்னுறுதி கொண்டுதிரி பவனெனப்
பேரருட் பொலிசைநேடுந்
தாசனுங் கோடற்கெ னல்லுள்ள மொப்புமோ
சகஜசன் மார்க்கநுவலுஞ்
சைவசித் தாந்தமு மிடங்கொடுக் குங்கொலோ
தண்ணளி புரிந்துமனமா
மூசலி லிருக்குமெனை யுன்னருட் பீடிகையி
லுறையவைத் தணையருளே
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. நு.

அரியவிர தச்சூர பதுமனை வலாரியை
யருச்சுனை வெள்ளிபொன்மே
னலகைமூலை யுண்டோனி யாதே ருபாயத்தி
னுலாள மயக்கியதுபோல்
விரிகருணை யதனாலே நம்பிநிற் கின்றவென்
விவேகவுணர் வையுமயக்க
மேதினியி லொருவரா லாவதோ வாகாதுன்
மேதக வருட்பெருக்கா
லிரிபுமல விருளின்மின் மினிபோ லிருக்குமென்
னிறையறிவை விண்ணின்மணிபோ
லிலகவனை யாமலும் பொருளை யறியாமலு
மிரண்டறப் புல்கலெனுமோ
ருரிமையுடை யாமலும் போவதுண் டோகருணை
யுள்ளவா நந்தவிண்ணே
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. சு.

எவ்வுயிர்த் திரளினு மெலாவுலோ கங்களினு
மேகநிறை வாயிருந்தே
யிக்கால மக்கால மென்பதன் றெக்காலு
மியாவையு மறிந்துகொண்ணுன்
செவ்விய பெருந்திரு வுளத்தினுக் கறியாது
செய்கரும மொன்றின்றெனுத்
திட்டமா யோர்ந்தவென் னுன்னமது தனையொத்த
சிற்றறிவு றியாமலே
யிவ்வுலகில் யாதோர் சழக்கிழைத் திடல்போல
வெம்பிரா முனக்கூஉ
மெட்டா திழைக்கவெணு மாயினிப் புன்மைக்கு
மேற்றமுள தென்றுகூறற்
கொவ்வுமோ வையவிவ் வாறுன்ற னடிமைநா
னுறழ்வின்றி மருள்வதென்னே
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. எ.

பூர்வகா லத்துநன் முனிவரிறை முதலியோர்
போற்சொலுஞ் சொற்பலிதமும்
புனிதயக் யங்களிற் சேதந சிருஷ்டியும்
புணர்திரத் தேதபெறுகையுஞ்
சீர்மல்கு மந்த்ரவலி யாற்சொல்லு மாறுரு
சிலீமுகம் புரிசமர்த்துந்
திவ்யதவர் வாக்கொன்றி னுலஷ்ட சித்தியுந்
தெவ்வற நடக்குமணியும்
பார்மறுடர் முனிலையிற் றேறவதைக ணைக்கீர்
பணிப்பதுவு மிந்தநாளிற்
பட்டப் பகற்சூன்ய மாயிருத் தலினுலே
பாவியே னுக்கிங்ஙனே

யோர்கிருபை பெரிதாக வருளவழி யில்லையோ
வொப்பிலா வான்மையுடையோ
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. ௮.

பொற்கலச முலைமினு ரின்பமே சுகமெனப்
புத்திசெய் கின்றபேரும்
புரிகருமை மேருவந் தருவதா யுள்ளியப்
போக்கினின் றுழிதருவரு
நற்களியை நல்குவது நற்கால மிக்கால
நாஞ்செய்வ தேதென்பரு
நல்லுயிர் படக்கமெந் திரமந்த்ர மௌஷத
நமக்குறுதி யெனநிற்பருஞ்
சிற்கடவு ளன்றென வறைந்திடா தேதனுமிவர்
தெருளற்ற வுலகாயிதர்
செய்கருமை வாதிமுத லோரொனு மனீச்சுரச்
செப்பவா திகளிறைருசா
ருற்சாக மாகப் பொருந்துபவ ரல்லா
ஞனக்கன்ப ராவரலோ
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. ௩.

சன்மநில னைத்துறந் தரியதே வைத்தலந்
தனில்வசித் திறைமைசாலுந்
தபமேவஷ தாரியாய் விண்டுபத் திமையோடு
தண்டுழாய் கொண்டுநல்குங்
கன்மமுந லந்தம் படைக்கின்ற தன்மமுங்
கைக்கொண்டு நின்றவிவருவர்

கடுவமர விஷபேதி யான்மரித் தார்வண்மை
கழுமுதென் கேரளத்தே
நன்மவுரி யாமூன்று வற்சர மியாதேனு
நானிறுக ராதவொருவர்
நசித்தனர் விசைப்புளவை யாலாத ரெட்டுவிசை
நசியாது னருளில்லையே
லுன்முருக னெனனந்த வருளலா துய்வதே
வரவருண கிரியடிகளே
யுயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. கo.

சுப்ரமணியப்பரமம்.

கடல்கோலு நிலையிலுன் கருணையொன் றுண்டெனிற்
காசும் பெறுததுகளுங்
கைலைவை குந்தமம ராவதியு மெச்சவே
கநமேரு வாகுமிலதேற்
றடமஹா மேரன்ன வுளதுஞ் சணத்திலே
தண்ணியவொர் திரணமாகுஞ்
சரதமுள வெந்தையே யிவ்வுண்மை யறியாது
தன்சத்தி கொண்டுழிதரும்
படருளா ரதரோஜப் பற்ற தகற்றிநற்
பரிவோ டெனக்குமெற்கும்
பற்றிருக் கும்படி புரிந்தவருண் முற்றிலும்
பகரம்வைத் தருள்செயாதே
சுடர்களைச் சுடரவே செய்பரஞ் சுடரோ
சுகாதீத முக்திமுதலே

துங்கபரி பூரண கண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. ௧.

கத்தாவை நாம்பிரிய விலையென் றியாதோர்
களங்கற் றனைக்கழுத்திற்
கட்டியே தூங்கவைத் ததுபோல வளபடி-
கருத்தில கட்டவறியார்
வித்தார ஞானதூ லெப்பெட்ட கத்துளே
மேன்மையா வைத்துமூடி-
விகமிட் டதுபோர வட்பொருளை யுள்ளுளே
மெய்யாக வைக்கவறியார்
சுத்தான தெய்வமொன் றுண்டென்று கூறுவார்
சுத்தித்த நீக்கமறியார்
தமியனி னிந்தவப லங்களுக் கயல்படத்
தண்ணளி புரிந்தவன்றன்
சொத்துவச் சித்தமெம் பாக்கிய மலால்வேறு
சொல்லவொரு சிறிதுமுண்டோ
துங்கபரி பூரண கண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. ௨.

பிறர்நயந மறியாது தய்த்தலைப் புல்லர்நுகர்
பிழியூன் விலக்கியுணலைப்
பிரபாவ மானகன்ம மணிமாலை யேயமம்
பெருக்கவவர் நிமத்தினைச்
சிறுமையர் தமைப்பரிச நஞ்சையா வழுவலைத்
திவ்யசிவ சம்பந்தமாச்
செப்புநற் சைவசம யத்தோளி யென்றணுஞ்
சிந்தையர் சிதாகாசமாய்

நிறுவுமுன் னேடுமல மற்றநல் லாவியது
நீகா னெனுமமலொன்றாய்
நிகழ்தல்சிவ சம்பந்த மென்றுமது வேறாவ
தெறியந்த மென்றுமரிய
துறவரா லுணர்நிசா தனமறிதல் சுலபமோ
சுகவின்ப வம்போதியே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. கூ.

சிவகா ருண்யமின் றுயிர்வதைப் பவருந்
தெருட்சியா சாரமின்றித்
தீப்புடை யிலாகரி புலாலுண் சழக்கருஞ்
சிவமந்த்ர முச்சரிக்கப்
பாவன விலிங்கதா ரணமென்ப தைக்கொளப்
பாத்திய முளாரன்றனைப்
பகர்சைவ தந்திரந் தீணமீறு பவரும்
பசுந்துளவ மணிபவற்குக்
கூவிய விலாகரி புலால்படைத் துண்ணுங்
குணுங்குகளு மிறுதிகாளிற்
கொடியபூ தப் * பிசா சின்கதியை யடைதல்சூர்
கூர்தல்கட் டென்றுமிக்க
தாவுடைய முதனூல் விளக்கல்பொய் யல்லமேவ
துகளிலார் நெறியில்வருமேவாய்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. சு.

---

* பிசிதம் - ஊன். இதையுண்ணுமுயிர் பிசாசமெனப் பெயர்பெறுமென்று பட்டோசி விபாகரணம் பகராநிற்கும். அதனால் பிசிதமுண்ணு முயிரெல்லாம் பிசாசமாமென்க.

அக்கரொரி வுழியெழுங் கானலைப் பார்வையா
லம்புலியை யாதித்தனை
யவிர்கின்ற தீபிகையை நோக்கியே பாவிக்கு
மகவினையி னுன்மனத்தே
சொக்குறத் தோன்றுளிக ளைத்தெவுளு மசபையிற்
சுடரொளியை விந்துநாதச்
சோதியைச் சுத்தபர மாயையின் காந்தியைத்
துரியச் சுயஞ்சோதியா
யெக்கணு மியங்குநீ யென்றெண்ணி மெய்ச்சோதி
யினையறிந் திலகுபேரியோ
னென்பர்நா மென்றஹங் காரமுறு மூடமிவ்
வேழைக்கும் வருவதுண்டோ
துக்கமில் லாதபரி சுத்தசுக வாழ்வையென்
சொந்தப் படுத்துமரசே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. ௫.

வெகுஜனத் தொறுவொன்று சேரநன் மாமக
விழாவங் குடந்தையின்கண்
வியப்பா நடக்கவருள் செய்தனையு மாண்டுற
விதித்தநான் மீளுமமயந்
தகுதிசா லித்திருப் பாவெனும் புத்தகந்
தனின்முதற் செய்யுளெனவே
சாற்றுபா ராதிகொட் டக்கரொரி வென்றெழு
தனிப்பாடல் வரையம்பதும்
மிகுமெட்டு முள்ளவொரு பிரதியையு னன்பினர்
விலாசநங் கட்குமறவாய்
வெறொருவர் கைக்கொள வமைத்தையிங னேயுனது
மதைக் கருத்தென்கொலோ

சுகுணவரர் முதல்வவென் மனதுறுவல் கூராது
சொல்லியருள் புரியவேண்டுந்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. சு.

நின்பூர ணத்துவ வியாபகத் துண்மையை
நிரப்பின்றி யுற்றுநோக்கி
னித்தமு மநித்தமுஞ் சுத்தமு மசுத்தமு
நிராகார வாகாரமு
மன்போடு கடிநமுஞ் சஞ்சல வசஞ்சலமு
மாண்பெண் ணெனும்பேதமு
மந்தரமு மாதபமு மாநந்த மூந்துயரு
மாசையு நிராசைநிலையு
மென்போல விழுதையு மெலாந்தெரி விவேகியு
மிரண்டொன் றெனப்பிதற்றற்
கிசைந்தநூல் கற்றுளா ரோடுகல் லாதவரு
மின்னுமற் றுள்ளவெவையுந்
துன்பது மற்றநீ யேயென்றே யாமிதிற்
சொல்லுமெற் கிடனெங்ஙனே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. எ.

எல்லாஞ் சிவன்செய லெனுந்தகைமை தனையுணரி
னிரவுபக லற்றநிலைய
மெட்டாது போமோ பிராணசல மும்போத
மென்றகுடி லச்சலநமுஞ்
சொல்லாக ரங்கருதி யுபயவினை யென்னுமலை
தொட்டிலி லிருந்துதுவளுஞ்
சூர்மனமு மம்மனஞ் சென்றுவரு மிந்தியத்
தொழுவுமவை பற்றிநிற்கற்

கில்லான படிவமு மப்படிவ மேவாம்பலா
னெழுகின்ற வபிமானமு
மிரிபாய காமாதி யாறுபெற் றியுமா
யிராநின்ற ஜீவச்செயல்
சொல்லாம லோடுமல் லாதுபின் றொடருமோ
தூரியவிவ் வுணர்வையருளே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. அ.

பையண்ட மண்கரிவு மாநச மெனச்சொலும்
பாலுழி யுதித்தவெல்லாப்
பசுக்களுக் கும்பிரா னென்பதை விளக்கிடப்
பசுபதிப் பெயருடையனுய்
மெய்கண்ட தேவர்முத லோருமரு ளாதிக்ய
மெய்க்குரவர் நான்குபேரு
மெய்யா விரித்ததிரு வாக்குகட் குண்ணின்ற
மெய்வஸ்து வாய்விரியுமென்
னையநின் பெரியதிரு வருளையே முன்னிட்
டுகாரதமு நிற்குமிந்த
வடிமைகா ரியமிநான் மலைகல்லி யெலிபிடிப்
பதுபோ லிருப்பதென்னிற்
றொய்யன்மரு வாதவுன் றொண்டர்க ளடைந்தவொரு
தொய்யலெவ் வாறுகுறுகுந்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பரமணி யப்பரமமே. கூ.

பரமதா தாவாய நீயெனை யணைத்தருள்
பணிக்காது விடுவதென்னிற்
பாலித்து நல்லருள் புரப்பதா யருள்செய்த
பகூஉமுள தந்தன்வசநந்

தரமிலா மற்பழுது படுமெந்த னெஞ்சுமதி
சஞ்சலப் படுமின்னணஞ்
சாருமே மலென்னெண்ண மெவ்வண்ண முற்றுறுஞ்
சஞ்சிதத் தாலெடுத்த
புரமளவு முள்ளவா ணுளைப்ப டிச்செலும்
புகலுன்னை யன்றியிலையே
புங்கவர்கள் கடவுளே புரிவுடையர் செம்மலே
புனிறுமர பற்றபொருளே
சுரர்புகழ வுளவெந்தை யருணகிரி பிரசந்த
சுவாநுபூ திச்செல்வமே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்ரமணி யப்பரமமே. கo.

இன்பப்ரவாகசிவம்.

சந்திர ஜடாசூட ணுய்நின்று சகாதி
தாபதர்க ணுல்வருணரச்
சாற்றுது சாற்றிய சயக்குறிப் பும்பரா
சரன்மக்க ளாறுபேர்க்குச்
சுந்தர வயிற்கடவு ளாய்நின்றவ் வண்ணமே
சொல்லாது சொன்னபொருளுஞ்
சோமசே கரனெயாரு சீடனு கக்கொண்டு
சொற்றவுப தேசவுணர்வு
மெந்தவகை யானும்விப ரீதப் படாதவொ
ரெதார்த்தமதி மார்க்கமுடிவா
யெம்மதங் கட்குமெட் டாதவதி ரகசிய
மெனப்புகற வுள்ளவன்றே

விந்தநிலை யைத்தானே நானெய்த நினைவது
னிரங்கியருள் புரியவேண்டு
மேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. க.

சிவபோ தத்தரள முள்ளளவு நத்தந்
திவாப்போலு மாறிமாறித்
தேய்ந்தெழு மறப்பொடு நினைப்புமறு மோபெரிது
சிறிதெனும் விகற்பும்விடுமோ
கேவல வபேதைகூடியு முபேதைகூடியு மொடுங்குமோ
கெழுமுபவ புண்யமிறுமோ
கிரமமுறை யாயெய்து ஜநநமர ணங்களுங்
கிட்டாமல் விட்டொழியுமோ
பாவலர்க ளாலும்விவ ரிக்கரிய கைவல்ய
பரமசுக மதுவும்வருமோ
பரமகரு ணைகரப் பெரியதிரு வளமெங்கள்
பகூமா நின்றுகருதற்
கேவல்கொளு மாயினப் போதசல நங்கெடற்
கென்னதடை யென்னதடையே
யேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. உ.

இப்பியு னிடைநல்ல முத்தமது பூத்தன்ன
விதரப் புலாலுடற்கு
ளியமான னேத்தங்க வைத்தந்த வுடலிலே
யிட்டபல துளையிருந்து
மொப்புடன் விதித்தவெல் வைக்குமுனம் விட்டேக
வொட்டாம லதிரூகூழ

வுபாயபந் தம்புரிந் தவ்வுடம் போரில்லி
னுட்கிடந் தானுமாதன்
றுப்புடை வியாபியா கப்பல விடங்களிற்
றுரிதத்தி லெய்திமீட்டுக்
துவக்குவி லடங்கின்றுணர்வும் விதித்தவுன்
சூக்கூமவருட்சத்துவ
மெப்படியு மெனையெனக் குக்கொடுத் தருளா
திருக்கவலி யற்றதலவே
யேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. ங.

* கேட்டல்சிந் தித்தலா யுளவபர ஞானமது
கிட்டியுள் ளாருமதன்மேற்
கேடற்ற தெளிதல்பர நிஷ்டையா யுளநலங்
கெழுவுபர ஞானமுளருங்
காட்டுமு னருட்கடிமை யேயாவர் பந்தக்
கசட்டுமெஞ் சுடையநாயேன்
கனமுள்ள வன்னெஞ்சி லொருவ னாவனே
கருணைக் குரித்திலார்க்குங்
கோட்டமில் லாதநின் னடிமைப் பெயர்ப்பெருமை
கூறநடு வண்டுகொல்லோ
கூறரிய திருவருட் பாங்காக வேயெனது
கொள்கைகனி பெருகவடியா
ரீட்டநடு வேயிருந் துய்யவொரு சித்தமு
மிருக்கவருள் புரியவேண்டு
மேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்பிர வாகசிவமே. ச.

---

* கேட்டல் - ஞானத்திற் சரியை, சிந்தித்தல் - ஞானத்திற் கிரியை, தெளிதல் - ஞானத்தில் யோகம், நிட்டை - ஞானத்தின் ஞானம் என்றும்.

மோட்டுவெம் பசிவந்த காலுண் விரும்பிநன்
மோடது புடைக்கமிக்க
மோகமுற் றுண்டவுட னவ்விருப் பின்விளரி
மூசியு ளடங்குமதுதான்
மீட்டுமவ்வி னவ்விருப் பானதுவு மெழுமிவ்
விதம்போலு முண்ணுமுனைவான்
விளர்மேதை மீக்கொண்டு விந்தூறி லுலந்த
வேலைபென் விழைவுவந்து
வாட்டுமது தீரினதில் வேண்டாமை யெய்துமது
மறுபடியு மூறினந்த
மயலது மெழும்புமிவ் வாதையறு மாறுண்டி
மட்டுப் படுத்தியுறழ்வே
யீட்டுமடி யார்சங்க மதிலு னிருக்கவுமா
ணெண்ணைமருள் புரியவேண்டு
மேசற்ற பரமசிவ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. ரு.

வேண்டா மெனத்துறந் தவர்கணு மிளம்பிடியர்
வேட்கைமயன் மீண்டுமுண்டாய்
வெதுப்பலா னதுவுண்டி யாலுற்ற தென்பதும்
விருத்தரொடு பேடியர்க்கும்
நீண்டகுறி யோங்கலில் லாதிருந் தும்வஞ்ச
நியைத் தழீஇமகிழ
நெஞ்சமுண் டாவதா லதுமன திடத்திலே
நின்றிறழ் விடாயென்பதுங்
காண்டகஞ் செறியிந்த மகியின்மிக வுறுதியிக்
காமமோ வாயதுன்பங்
கைதொடு புசிப்புமன துங்குறைந் தாலது
கடுகளவு மிறுவதில்லையா

லீண்டுநா னிற்கவுன் னின்னருட் பேருவகை
யெக்காலம் வாய்க்குமையே
பேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. சு.

இதயார விந்தத்தின் மனமது வியாபார
மிடுகால் குணைக்கிலுள்ள
விந்த்ரதள மாதியா யீசாந தளம்வரை
யியம்பென் டளங்களினுமே .
* பதவாளி யாநல்ல சுகிர்தசிந் தனைகொடிய
பண்பாய கடிநசிந்தை
பாபசிந் தனைகெட்ட கோபசிந் தனைமாசு
படிசமு சயச்சிந்தனை
துதமாய சலநசிந் தனைதரும சிந்தனை
துளக்கவயி ராக்யசிந்தை
சூழ்கருணி கைதனிற் கனவக்ர நடுவிற்
சுழுத்தியென நிற்குமிதனை
யிதவான நுன்றகவி லார்வயஞ் செய்துய்ய
வெளிதாவெ னந்தாதியே .
பேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. எ.

தோடகப் போதுபோல் யாதொரு சுகங்கண்டு
துண்டமா னதுமலர்வதுந்
துக்கமது கண்டது சுருங்குவது முண்டெனிற்
றுகளற்ற நிருவிகற்பங்
கூடுமோ கூடாத தேதலசங் கதமான
குணரகித பரமவின்பங்

* பதவாளி = வரிசைக்கிரமம்.

குறுகுவது மெப்படி புனைத்தஞ்ச மென்பார்கள்
கொள்கைக் குவந்துநித்ய
வீடருளு மடிகளை வெதவே தாந்தநெறி
மிளிரவரு பரமபதியே
விபுலமதி லேபணஞ் சேர்றறனு மிரண்டுமே
மெய்யென் றிருந்துவிளிவா
சோடலுக் கெட்டா விராசிய விலாசமே
யாதினும் வல்லவிறலா
யேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. அ.

புண்ணியம் பொருளின்பம் வீடெனப் பெரியார்நூல்
புகறுநால் விதமுமேமார்ந்து
புரணகுரு தந்தவொரு மொழிபெற் றதற்காய
போக்கில்வினை நன்னடைகளுந்
தண்ணிய சுகோதய விருத்தியுமா ரற்பமுந்
தன்னையக லாமலங்நன்
றணவிட்ட கன்றதவ றெவ்வளவும் வந்துபின்
சாராம னிற்குமிக்கார்
கண்ணிலுள கடவுளை யிந்தமன் மார்க்கமுங்
காசுடைய வென்போலுக்
காமமோ யாளர்க்கும் வருமோ வரற்கொரு
களங்கமில் லுபலாளன
வெண்ணம் பகுத்தந்த வெண்ணமு மிறக்குமோ
சொல்லையினி லென்னவைத்தா
லேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. கூ.

பிதாவெளவை மனமகா ரிகுளோநட் பில்லமன்
பீதக மெலாம்வெறுத்துப்

பிரிதலுஞ் சுகமழகு வேண்டாமை கோரியுள
பித்தையை நிமர்த்துவிட்டி-
மதாபிமா நஞ்சாதி பேதந் துறந்துவாய்
வாளாமை கொண்டுபசிநோ
வரிணைய மேற்றுண்டு மிருகரா ஜன்போல்
வலப்பார்வை யாகிற்றலுஞ்
சதாசாது சங்கத்தை நீங்கா திருத்தலுஞ்
சருகாதி யுண்டடவியிற்
சஞ்சரித் திடலுநல் லார்சலந மனமசஞ்
சலமாக நிறுவவன்றே
இதாகிதமில் சுத்தவிந் நிலையையெற் கருளெந்தை
யெனுமருணை கிரியடிகளே
யேசற்ற பரமநிஷ் டாநுபவ வருளாள
ரின்பப்ர வாகசிவமே. கo.

ஆநந்தமானபொருள்.

பொன்போலு மேனிபிறழ் சித்தர்கட வுளர்பரவு
புநிதபதி யாகியெனது
புந்தியைக் கவர்கின்ற வன்பாகி யவ்வன்பு
பொதுளுமுதன் மூலமாகி
மின்போ லுதித்தழுங் கெப்பொருள் களுக்குமோர்
விழுப்பொருள் விபோமமாகி
மிளிர்பரஞ் சோதிமய மாயுள வுனக்கெங்கும்
விகலமில் கால்கரங்க
ளின்பாய சங்கதந் தருநா வருஞ்செவிக
ளேதமில் லாதகண்க

ளென்பன விருத்தலா லென்னெண்ண மென்சொல்வீனை
யெல்லா மறிந்தென்முனே
யன்போ டுரைப்பன வுரைத்துநல் குவநல்கி
யருளல்பிர யாசமன்றே
யத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. க.

துணிவுசான் முதனூல்க ளின்சம்ம தத்தையுந்
தொல்லறிஞர் வெகுதெள்ளிதிற்
சொற்றிய நடுக்களையு மவமதித் துத்தனது
சொற்பவறி வுக்கிணங்கக்
கணிதமிட வுளநூத நக்கருத் தாலுனது
கணிதமில் லாதபெரிய
காரியங் களினன்று தீதுபோ லப்பரர்
கருத்திலே தோன்றியையப்
பிணிதரற் கானசில வற்றையிற் றெனமுடிவு
பேசிடத் துணிதல்சிதடர்
பெருமாவை யித்தகைய தென்றறுதி செய்யுமொரு
பெற்றியைச் சிவணுமல்லா
லனிமல்கு தீர்வைக்கும் வருமோ வராதேயெ
னந்தரங் கச்செருக்கே
யத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. உ.

வெருமுந்த யாமிந்த வுலகிலுள் ளாகாத
விவகார மெதுவுமில்லை
விளைந்தவிவ காரங்க ளுக்குரிய நாயமும்
விளையாது போனதிலையென்

உகல்சிந்தை யோடுமோ ராதிந்த நாளிலொ
ரபூர்வவிவ காரமதுநம்
மகத்தே ஜனித்துள்ள தித்தைமுன் னேனொவரு
மறியார் வகுக்குநடிவுந்
தகவந்த தில்லையென் றெணுபஞ்ஞை போலுமித்
தரணியிலொ ரஞ்ஞைசாலவே
சகலசந் தேதகமு மிறந்துதெளி வுளபரம
சாதுக்கள் சரதவன்பி
னகவின்ப வமிர்தப்ர வாகமே யேழுயே
னஞ்சலிக் குங்கடவுளே
யத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. கூ.

இத்தகரி லன்னியுத ரத்தினி லிருந்துதிக்
கின்றகா லத்திலேயே
யெவருக்கு நுதலாதி தானங்க ளிற்றவள
வேமமுப் புண்டரம்பா
லொத்ததிரு மண்ணூர்த்த புண்டரந் தீட்டியு
முலோகித வுடுக்கையிட்டு
முயர்சிலுவை யைக்கையி லேதந்து முடிமழித்
துறுலிங்க வுரியறுத்து
மத்தனு கியநீ யனுப்பினு யேற்றமிழி
வறைவதற் கெம்மதத்தி
லம்புலியை யுறழ்த்துக்க சுகமில்லை யுண்டெலா
வவதியும் பொதுவாகவே
யத்துவித வாணைக்கு ளுளவித்தை யுணரா
ரபேதவுணர் வுணர்வதுண்டோ
வத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. சு.

சுதரிசநம் வண்டாதி குறிகளை யுடம்பிலே
சுட்டிவிஷ யக்கடற்கட்
டோய்பவர்கள் பாஞ மிறந்தவுட னற்பரம
சுகமண்ணு மென்றிருக்கு
மிதயங்க ளக்குறிக ளிட்டவுடல் விடுமென்னி
னெஞனவை தமக்குரிமையென்
றெண்ணுத தும்புநித ஞானமில் லாதுகதி
யின்றென்ற சுருதிமுடிவின்
விதியையுண ராததும் பேதைமை யெனற்கிந்த
விபுலமிசை யையமென்னை [மொர்
மெய்ப்பொருள் விரும்புவார் பொய்ப்பொருள் விரும்பவு
விதியுண்டோ வையவிதனை
யதரிசநர் கண்ணைறைந் தாவிதென் பற்றிலா
ரரசேயெ னறிவினரசே
யத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. நு.

மாயா விகாரமா யுள்ளமத விவகார
மாயா திருப்பளவுமான்
மனமசங் கத்துவ மிலாதுசங் கேதமயன்
மருவியம் மாயையென்னும்
பேயா லலைப்புண்டு திரிமக்க ளும்விவித
பேதமில் சிவோதயத்தைப்
பெறுவதுண் டோவிவ் விபூதியுமு னடிமையைப்
பின்பற்றி நிற்பதுண்டோ
தேயாத செல்வமே தெள்ளமுதி னின்பத்
திரட்சியே சினிதெய்பால்
சேர்ந்தமது ரக்குழம் பேகரும் பேறுந்
தேனெ யெனக்கயலதா

யாய்மா லென்னகத் தேவலிய வந்தநல்
லறிவேயெ னன்பின்விரிவே
யத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. கூ.

உதித்தொடுங் கிடுபெற்றி யுள்ளபுன் மைப்பொருள்க
ளுலகிலுள் ளனவாயிவ்
வுபயவகை கட்குமுத லாயுள்ள மேன்பொருளு
முண்டென்ற லுறுதியதுவே
துதிக்கவுள பரதெய்வ மென்றும்யா தொருவனித்
தொன்றுகம் வஹனந்ததெய்வந்
தோற்றும லெங்கிருக் கிறதெனி னுனக்கெஞன்
றேற்றவிலை யோவங்கெணு
விதிக்கவுள தென்றுமுணர் றிவாளர் நெஞ்சிடை
விளங்குமறி வானநீயென்
மெல்வைத்த வன்பா லியானுமுன் மேலன்பு
மெய்யாக வைத்திங்ஙனே
யதிர்க்கும்விண் ணப்பமெல் லாநன்ன ராமா
றநுக்ரகஞ் செய்தாளரோ
வத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. எ.

மெய்யன்பி லாருன்னை நினையா தவாவென்னும்
வேழநுக ருங்கவளமாய்
மேதினியி லுளதொப்ப நானிரா திதுதாறு
மெய்யன்பை யானமட்டும்
பையுளில் லாதநனி நாடிநா டிப்பெறும்
பவுள்சையெய் தாதிருக்கும்

பரிசையோ சிக்கினனே நாடாத வர்க்கிருட்
படலமாய் நாடியன்பு
செய்யடிய வர்க்குநற் றேஜசாய் நின்றருட்
செல்வத்தை நல்குமுன்றன்
றிவ்யதிரு வருளெனுமொ ராதிசக் திக்குரிய
செயல்வலி பிறழ்ந்தமீதாவென்
றையமுறு கிறதெனது மநமைய நிற்பிரிந்
தடியேனும் வாழ்வதுண்டோ
வத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. அ.

வலியவென் ணைவ மதாவளந் தன்னையுன்
வாளருட் காளியறைய
வருகின்ற காலமெக் காலமக் காலமுள
மதிநனி துளங்கியென்றன்
றுலிதமில் லாநிலையை யோர்ந்தங்க ணறிவித்த
சுத்தவரு ளையுமறிந்தீதார்
துரிசற்ற பரையோகி லேநின்று நன்னகைச்
சுகமுற்ற நிலையின்மேமேல
நலினில்சிவ மெனுநினைத் தரிசநஞ் செய்துநீ
நானெனும் விகற்பிலாது
நற்சுகா தீதசிவ சாயுஜ்ய முறவொரோ
நாட்டமா நிற்கநினையா
யலியணு கிடாதடிய வர்க்கென்று மருள்புரிந்
தாளுங் குகப்பிரமமே
யத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. கூ.

கேவல மெனும்பெரிய வந்தகா ரத்தின்மதி
கெட்டுநித் திரைபுரிவதுங்
கிஞ்சின்மதி விளைசகல மென்னுந் திவாவிலக்
கேவலத் தைத்தணந்து
கூவதனை நோக்குநன வாவிழிப் பதுமுள்ள
கொன்னளவு மறதிநினைவுங்
குறுகாத லத்துவித சுத்தசிவ யோகமுங்
குறுகா தெனுந்தீர்வையைச்
சிவனு கியயா னுணர்ந்ததற் கேற்பவென்
சீர்மதியு மொப்பியதிலோர்
செத்தில்லை யாயினுமு னற்கருணை யன்றே
சிறந்துகை கொடுக்கவேண்டு
மாவலோ டுரொண் சகஸ்திரப் புகழ்சொற்ற
வருணகிரி யிதயமுதலே
யத்துவித சத்திய சிதாகாச வடிவான
வாநந்த மானபொருளே. கடு.

ஆநந்தநடநசிவம்.

பருதியெனு மோர்ஜடப் பொருளிந்த வுலகெலாம்
பரவுவெயி லாய்விழியிறற்
பார்க்கின்ற வெப்பொருள்க ளுக்குமதி விம்மிதப்
பண்டமா யுவமமிலதாய்ப்
பருவமோ ராறுக்கு முதலியா யுளவிதைப்
பண்ணிய நிமித்தமூல
பரனு யநாதியா யஜடமா யறிவெனப்
பகரகண் டாகாசமா

யிருளொளி யெனுமேவா தொதார்த்தவொளி மயமா
யிராநின்ற வுன்னைமனவாக்
கென்பவை களைக்கொண் டளப்பதெவ் வாறந்த
விருவகையு மாகநிகழு
மருமுறைக ளறைகின்ற வுவமங்க ளும்போலி
யாமன்றெ ரணுவுமிமாவுமோ
வன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. க.

எடுக்கா வுடம்பிலை நடக்காத நடையில்லை
யெண்ணுத வெண்ணமில்லை
யிழையாத தொழிலில்லை யேற்காத வேச்சில்லை
யீறுத தாயுமில்லை
படுக்காத பாயிலை யுடுக்காத வுடையில்லை
பாராத தேயமில்லை
பருகாத வுண்டியிலை யணியாத கலனில்லை
படியாத பாஷையில்லை
தொடுக்காத பகையிலை யடுக்காத வுறவில்லை
தொடராத துன்புமில்லை
தூயருட் கடவுளே யினியேனு முன்னருட்
சுகநிலையில் வைத்தாளெனை
வடக்கமில் லாதவென் னெஞ்சமு மடங்கியழ
லானதே கொள்ளொணாதோ
வன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. உ.

இருவினைத் தொடருமோ ரறுவகைக் குற்றமு
மினக்கமில் லந்துபொறியு
மெழுகின்ற நான்குவகை வாக்குமவ்வி குன்றும
லெதிர்மும் மலச்செருக்கு

மொருசிறிது மில்லாத காலையன் மேருமுதுக்
குறைவாய முற்றுணர்வுதா
னெளிவீசு மக்கால முன்னையறி வேனங்க
ணுபயவா தமுமிறந்த
பெருவெளி மயாநந்த மயமா யிருக்குமொரு
பேருற்று வாழ்வனெங்கள்
பெருமவுன் றிருவுள்ள மெக்கா லிரங்குமோ
பிழையுளே னறிகிலேனே
யருண்மௌன ஞானஞா நாதீத ககநமே
யமலவின் பப்பரப்பே
யன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. ந.

ஓதிநூல் சாமிமொழி சாதக மெனச்சொல்ல
வுள்ளவொரு மூன்றின்கணு
முண்மையா நின்றுதி யந்தநடு கீழ்மே
லுலப்போ டுதிப்புவிகிர்தஞ்
சாதியெழி லூழுருவ மருவநா மஞ்சலந
சங்காத மாற்றமேமதஞ்
சாராத தாய்வசந மாநசந் தாண்டியொரு
சமமின்றி யறிவாகிய
சோதியா யாநந்த மயமாக மலருமுன்
சுத்தவீ டடைதலென்போற்
றாய்மைமதி யூற்றமில் லாவொந்த வாறடைவர்
தொண்டர்கம் பலிசிக்குமெம்
மாதிர நிரந்தர முனக்கடிமை யல்லாம
லார்க்கடிமை யாங்களருளே
யன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. சு.

பச்சிலைக் கீடநடை போலோ ருடம்பினைப்
பற்றியுள யாக்கைநீக்கும்
பண்பியறி வான்மா வெனப்பண்டை யோர்சொற்ற
பழமொழிக் குரியவத்த
மிச்சையுடை யான்மவர்க் கத்துளிரு வினைநிலத்
* தெய்தவுள பூதசார
மேற்காத சிலவந்த வாறுவினை யளவா
யெடுத்திடு முடம்பென்னவே
மச்சறக் கோடாது செத்தவுட னெருகாய
மருவுமத னன்மத்தியில்
வருமென்னு நரககற் பங்களிலை நமனென்ற
மறலியு மவத்தமென்றே
ரச்சமில் லாதறையு மவிவேக ரதிநுட்ப
வறிவுநெறி யுந்தீர்வரோ
வன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே ரு.

தவமகிமை யான்மநுடர் சுரர்முனிவர் கட்குநற்
சத்யசா பாநுக்ரக
சாமார்த்ய முளவென்று மதுசுத்த வறிவான
தடஞாநி கட்கற்பமு
மெவணுமுண் டாவதின் றென்றுமொழி தந்துசில
ரிட்டநடு † நினைநன்னரு
வீந் ‡ தலரி யீயவிலை யென்பதை நிகர்க்குமீ
தெக்காலு மொவ்வாதெலாச்
சிவமும் பர்க்ரமச் செல்வமுந் திருவருட்
சிவஞாநி கட்கெநாளுஞ்

---

* இவ்விவரம் தன்னையர்சுவாமி யென்னும் பதிகத்துணர்க.

† நினை=அரும்பு. ‡ அலரி=மலர்ச்சது.

சிங்காம லுண்டென்று மிச்செல்வ முன்னருட்
டிரமெறி யொரீஇநிற்கு
மவளூர வாய்ளூரி கட்கடா தென்றுமுர
சறையலா மெந்தநாளு
மன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. சு.

மண்ணின்மிசை யாதொரு நலத்தினைக் கருதியே
மனிதரை வணங்குமனிதன்
மகத்தாய நினைவணங் கொண்ணு தெனச்சொல்லன்
மலமுணுங் கிருமியமிர்த
முண்ணெணு தென்பதைப் பொருவுமுன் னடியர்தம்
முள்ளுக்கு ளநவரதநீ
யுள்ளதா லவர்வடிவ மெல்லாமு னிலயமென்
றுள்ளாரு மனிதவடிவென்
றெண்ணியிகழ் பதகன்மதி வஜ்ரமுங் கஞ்சனமு
மேமகமென் றெண்ணுமூட
வீநமதி யேயா மெலாவும்பர் முனிவர்களு
மேத்திவந் திக்குமிறையா
ரண்ணலே நின்னடிய ருக்கடிமை யாவமே
யாசற்ற பூதிபூதி
யன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. எ.

சடமாக வுளதத்வ ரூபமதி னுடையதரி
சநம்வால் பெறுஞ்சுத்தியுஞ்
சைதந்ய முளவான்ம ரூபமதி னுடையதரி
சநமுமுயர் வுளசுத்தியுந்

திடமான சிவரூப முந்தெருள் சிறந்தசிவ
தெரிசநமு மலிவிகந்த
சிவமேயாக முந்திவ்ய சிவமேபாக முங்கண்டு
சின்மய விலாசமாகச்
சுடருமொரு பெரியபே றுன்னன்ப ருக்கலது
சொலமற்றை யர்க்கொவ்வுமோ
துரியவெளி மயசிதா காசகுக தெய்வமே
சுகவருட் கருவூலமே
யடமான வானவ வராவைவிறல் கெடவே
யகைக்கவரு பேரொகரமே
யன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. அ.

இருபத்து நான்காய வான்மதத் துவமா
யிராநின்ற வசுசிமாயை
யென்னுமொரு * பாழுமே ழாயவித் யாதத்வ
மென்றுள்ள வசுசிசுசியு
மருவுற்ற மாயையெனு மொருபாழு மைந்தாய
மாண்கொண்ட சிவதத்வமாய்
வழுத்துற்ற சுசிமாயை யென்னுமொரு பாழுமுறை
வரிசையா யகியிரஜிதம்
முருகுற்ற பொன்போலு முளவேனு மங்ஙனே
மூன்றுமண் ணென்றுணர்தல்போன்
முப்பாழு மறிவற்ற ஜடமெனக் கண்டுதளி
மூன்றிற்கு மப்பாலிலே
யருவப் பெரும்பரம வானென் றளாவுபவ
ரன்றோவு ணக்கமுள்ளா

---

* பாழ் - அபாவம், இல்பொருள் என்றும். இவ்விவரம் சருவேசுரபதி சு - எ - வது செப்புள் விளக்கிச. இம்மனம் சொதபூதிப் பெருஞ்சித்தின் முன் அசித்தானமாயை மறையுமென்பதுகருத்து.

ர்ன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. கூ.

மெய்புடைமை யீதல்பகை யின்மையின் சொல்பொறுமை
மெய்புடைய வெவ்வுயிரி னும்
விலகாத காருண்ய மனமொரு வழிப்படல்
விகாரமின் றுள்ளுக்குளே
தொய்யலா நிற்குமுட் கரணசங் கோசநற்
சுத்தவறி வென்றுசொல்லுங்
துணையின்மா நததீர்த்த மாடிநடு நின்றுள்ள
சுப்ரதக ராலயத்திற்
பையுளில் லாதுணைக் கண்டுகளி கூருமோர்
பாக்கிய மூளார்தம்மருட்
பார்வைக் கிலக்காகு நாளலோ நலநாள்
பரிந்துதயை குயிறல்வேண்டு
மையனே யருணகிரி மெய்யனே யெனையாளு
மப்பனே யொப்பிலானே
யன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தாநந்த நடநசிவமே. கo.

நின்மலாநந்தபரம்.

ஆடகந் தன்னிற் பதித்தமணி யணிகல
னலங்கார மாயியங்க
வதிநரு நாறுநறு மலர்மிலைந் தத்தர்முரு
காதிகள பங்கள்கமழ
நீடழகு மல்குநல் லுடையசைத் திளநகை
நிலாநிலவ வன்னமதனை

நேர்நடையு மஞ்ஞையின் சாயலுங் கோகில
நிகர்த்தவின் னிசைமதருந்
தோடகம் போன்முகத் திலகுபசு மஞ்சளுந்
துத்திபடர் தனபாரமுஞ்
சுவர்ணமய மேனியு முடைத்தாயொர் நங்கைமுற்
றுன்றினும் பேரின்பமே
நேடறிவு ளார்கள்சிற் றின்பப் பொருட்டம்பர்
நெஞ்சைவிடு வாரோவெனு
நிச்சய முணர்ந்துமதை நானச்ச னன்றுரு வெ
னின்மலா நந்தபரமே. க.

பொறையடக் கந்தயா வின்சொல்சி வபத்திமைப்
புண்ணியம் புநிதமாகூ
பூரண மிவற்றைநச் சிடுமெனது நன்மனப்
புத்திக்கும் வக்ரம்வெகுளிக்
கறைவன்மை கொடுமொழி யதன்மமவ பத்திமைக்
கட்டுடைமை கண்டத்துவங்
கருதுமட மனசுக்கு முண்டாகு கலகக்
கலாங்களைக் காண்கின்றயான்
மிறையற்ற நடுவனு நின்றடிக் கடிஞாயம்
விவரிக்க வுள்ளவொழியா
வினைதனக் காற்றிலே றுற்றிலே னந்தோவென்
மெய்க்கடவு ளாயநீயோர்
நிறைகருணை செய்யினிவ் வண்ணமு மடுக்குமோ
நிகரிலா வாற்றலுடையோய்
நித்யபரி பூர்ணப் பரசுப்ர மணியமே
நின்மலா நந்தபரமே. உ.

என்கருத் தறியா வினைப்பேத வாதியென்
றிழிமொழி தரற்கிங்ஙனே

யெய்திற்றவ் வாறுமொழி தந்துளார் நந்தீர்வை
யேகான்ம வாதமான
தென்மலி யபேதவா தமெனப்ப றைந்துஜக
ஜீவபர மெக்காலமுஞ்
செத்தற்ற மித்தையவை சத்தான வஸ்துவைச்
சேர்ந்தன வலால்வேறெனச்
சொன்மொழி பொருந்தாது பன்னுமொரு மூன்றெனத்
தோன்றித் திகைத்தொடுங்குஞ்
சுவாபமா யுள்ளதுவு மப்பிரம மேயென்று
சொற்றியொரு போக்குவரவில்
நின்மலப் பொருளாய வுனையே விகாரமாய்
நெஞ்சமஞ் சாதுதீர்க்கு
நெறி * வழுவை யுஞ்சுத்த சன்மார்க்க மொப்புமோ
நின்மலா நந்தபரமே. கூ.

சத்திய சிவாநுபவ வறிவாளர் திரிபுடி
தணந்தநன் னிலைதன்னிலே
தாமது வெனற்குமது நாமிலை யெனற்குமொரு
சார்பில்லை யிதுவேமனஞ்
செத்தறிவு மயமான மூத்தர்நிலை யாமிதைச்
சிவபர வைக்கியமாகுஞ்
செப்பரிய வாசா மகோசர மெனச்சுருதி
தெற்றெனச் சொனதையுணரா
மத்தர்மன வாக்கிறு லொன்றிரண் டென்னுமொரு
வரையறை விதித்துநிற்கும்
மதங்கட் கிணங்கப் பிதற்றுதல் சதாசார
மார்க்கமுடி வுக்கொவ்வுமோ

---

* இந்த வழுவான் உண்மைக்குப் பேதகமாக ஏகான்மவாதஞ் சாதிக்குநரே பேதவாதிகள் நாமல்லவென்றல் நூலாசிரியர் கருத்தாக இங்ஙனம் பொருள் முறைந்து கிடக்கின்றது காண்க.

நித்திய சுகாநந்த வாரியே தமியனே
னெஞ்சிருளே யுண்ணுநிழலே
நிறைவான திருவருட் கருவூல மேயெங்க
ணின்மலா நந்தபரமே. ச.

நோக்கின்ற நயநங்கண் மூடுற்ற காலந்த
நோக்கிலே நின்றதிட்ப
நுட்பங்க ளாயவுரு வெல்லா மறைந்தன்ன
நொய்யவுணர் வாயநெஞ்சம்
போக்கின்றி யிரிகின்ற துரியநித் திரையிலே
புவநமுந் தானென்பதும்
பொய்யென மறைந்ததா லில்லாத பொய்யெனப்
போமோ சிவாநுபூதி
யாக்கமொன் றுள்ளார்கண் மட்டிலவை யழியாம
லழிவுற் றிருக்குமென்னு
மையமில் லாதநடு வேநல்ல நடுவென்
றதிர்க்கலா மெக்காலமு
நீக்கம்வம் பில்லரிய சிற்பர விலாசமே
நிகரிலின் பப்பிழம்பே
நிஜாதிக்ய பரசுப்ர மணியமே யென்னையா
ணின்மலா நந்தபரமே. கு.

விகாரமொன் றில்வாச நாகூயம் பிரசந்த
மீக்கொண்ட தத்வஞாநம்
விலகாத நன்மநோ லயமென்ற மூன்றுமே
வீடாகு மென்றநாதி
மகாமறையி னந்தநூ லெல்லாம் வழுத்துமிவ்
வகையுணர்ந் துள்ளநல்லோர்

வாதத்தி லொன்றுமிலை நாதத்தின் மேனிற்கும்
வழிபிடித் திந்தநத்தே
மிகாதுமறை வுற்றுக் கிடக்குமழ லேய்ப்பவே
விறன்மலத் துள்ளமிழ்ந்தி
மேதையில் லாதிருக் கின்றவுட் பொருளையவ்
விறகைக் கடைந்தறிதல்போ
னிகாசமற் றுளதிரு வருட்டகவி னற்பரம
நிஷ்டையிற் கண்டுகொளலே
நியாயமென நிற்பர்மற் றோர்க்கிதனை யோதிலென்
னின்மலா நந்தபரமே. சூ.

இந்தநத் துள்ளெரி மறைந்திருப் பளவுமதை
யிந்தன மெனப்புகல்வதன்
றெரியென் றியாருமறை யாததைப் புனையமல
மென்றபா சத்தினிற்கு
மந்தரம் வனைக்குமறி யாதபசு வென்றுமே
லமலபர மென்றுமதுவே
யத்துவித வாழ்வென்று மறியாத பேதைகட்
கறிவிக்க முயலினுற்ற
பந்தச் சழக்குள மதாபிமா நச்சவம்
பற்றவொட் டாதகற்றிப்
பகைதந்து பொய்த்தநெறி யேமெய்த்த நெறியெனப்
பண்ணுவதி லென்னதடையோர்
நிந்தையின் றுய்யுநிலை தந்தென்னை யாளவுள
நிஷ்களா நந்தசிவமா
நிகழ்கின்ற திவ்யதே ஜோமயா நந்தநிஜ
நின்மலா நந்தபரமே. எ.

அறிவுநடை யைப்பிரதி பாதிக்கு மறையென்னு
மாரணந் துவிதமுளதா
லல்லவோ * வத்துவித நீத்தவசி பதகதிக்
கத்துவித மென்றவொருசொன்
னெறியொடு விளக்கிற் றலாலொன் றெனுந்தன்மை
நிகழுமா றேகமென்றே
நிகழ்த்தா திராதென வியக்தமா கச்சுகிர்த
நெஞ்சுடையர் பகூபாத
வெறிதின்றி நன்னடுவி னின்றறிந் திதுவேமெய்
வேதத்தி னுச்சியுணர்வாய்
மிளிர்சைவ நூன்முடிவு மென்றுணர்ந் தழியா
விழுத்தவந் தன்னிலுயர்வார்
நெறியிலா ரித்தையறி யாதுமுறை மாறியொரு
நிலையின்றி யுழல்வரன்றே
நிச்சய † திவோதய சிதாகாச தெய்வமே
நின்மலா நந்தபரமே. அ.

திமிரங் கடுக்குமடர் பாசமல மெக்கணுஞ்
செறியிற் பெரும்பதியினைத்
தெரியவொட் டாதாவ ரிக்காதே வொளியாய
தெய்வத்தின் முன்றிமிரமாம்
விமலமில் லாதமல பாசமு மிருக்குமோ
மிக்கசித் தாந்திகாண்மெய்
விளக்குவீ ரென்றுரைவன் வினவில்வெரு குக்கண்ணை
விரியிருண் மறைக்காதுபோ
லமலபதி தனையுமல மாவரிக் காதென்று
மறிவான வாத்துமாவை

---

* அத்துவிதம்=அந்தத்துவிதம். † திவோதயம்=ஒளியுதயம். ஞானோதயமென்றும்.

யண்மிவள ராக்கைபோ லத்தெய்வ முன்பாச
மதுவுமுண் டென்றுமறிவு
நிமிருமெய் யாயவறு பூதிக்க ணப்பாச
நிகழ் * பருதி முன்னிருட்போ
னீங்காம னீங்குமென் றும்பிறர்சொ லாரோவெ
னின்மலா நந்தபரமே. சு.

மலசத்தி விட்டகற் சைதந்ய மெல்லாநின்
மலசிவந் தன்னைமருவி
மடியா திருப்பதெனி னச்சிவ மதற்கீநம்
வாராதே தாவென்பருணர
வுலகத்தி லேபெத்த ராநின்ற வுயிர்தோறு
முபயமின் றேகமாக
வுள்ளும் புறம்புநின் றுளசிவ மளப்பிலா
வுயிர்கடன் னைக்கூடுகாற்
கிலமுற்று நிற்கநடு வின்று † சத் தாகக்
கிளக்குமப் பொருடன்னுடைக்
கிறியற்ற சித்தொடான் மாவையு மதர்ப்போடு
கிளர் ‡ சுத்த பாசத்தையு
நிலவுற்ற முத்தியிற் சச்சிதா நந்தமா
நிற்கவே கூட்டுமென்பார்

---

* பகற்காலத்தினும் யாதொரு சடபதார்த்தத்திற் சூரியனெளி தடையுண்டவளவிலுள்ள இரு ளே அப்பதார்த்த நிழலாக விருத்தலினல் அவ்விருளுண்டென்பதூஉம், அவ்வனைத் தடையுண்ணு விடத்திலுள்ள இருளும் அறியாமற் றன்சத்திமாத்திர மிழந்திருக்கின்றதென்பதூஉம் பருதிமுன்னி ருள் நீங்காமனீங்குமென்றதை யுணர்த்துமென்க.

† இவ்வனம் வருகின்ற முத்திநமுடிவு, சைவசித்தாந்த சாத்திரம் கசடல் ஒன்றுய மனவாசகக் கடந்தார் உண்மைவிளக்கத்தின் "முத்திதனின்" எனுந்தொடக்கத்து வெண்பாவின் கருத்தையுஞ் சார்த்து நிற்பது காண்க.

‡ சுத்தபாசமென்னலால் ஆணவமலமை மாற்றிய நிரோதாவை சத்தியென்றறிக.

நிஜநெறிய னொந்தையரு ளருணகிரி யடிகளே
நின்மலா நந்தபரமே. ௬0.

ஆ திருப்பா - ௬0௯.

பேசாவாழ்வு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னுலகு மண்ணுலகும் போற்று ஞான
பூரணமே யாரணமே புகற வொண்ணு
நன்னிலையே யென்னினுமே நலியா வாதி
நாயகமே தாயினைய நட்பே யெற்கீண்
டுன்னிலையெல் லாமோர வுணர்வீந் தாய்மற்
றொருருகுறையை நீத்தில்லை யுனையே யல்லாற்
பின்னொருவர் தமியேற்கு முண்டோ வெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. ௧.

குத்தியகத் துளநிட்சே பத்தைக் காணக்
கூரலகால் வெட்டுவதே வழியல் லால்வே
றுத்தியிலா தொப்பமலத் துள்ளே நாளு
மொளியின்றி நிற்பவனைக் காண்பா னுன்றன்
முத்தியரு ளல்லாமற் பிறிதின் றென்னு
மொழியுமொழி பெட்டிலையே முன்னும் பின்னும்
பெத்தர்களுக் கருளிறையே யருளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. ௨.

பொருபினிக்கு மெரிபசிக்கு முரிய பாழ்த்த
புலையுடம்பைச் சுமந்துதிரி புன்னெஞ் சேற்குன்
றிருவருடா னில்லாக்காற் கணக்கா லேனுஞ்
சிந்தையொரு வழிப்படுமோ சீர்மை யாமோ

குருவடிவாய் வந்தினிய வமிர்தம் போலக்
குயின்றுவிரு வியவாய்மை யெவ்வா றென்னைப்
பெருவெளியாச் செய்யுமருட் பேறே யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. கூ.

உன்னருளா லுனைக்கருதி யிருக்கு மிஞ்ஞான்
றுறுநோயுங் கலிப்பேயும் வருத்து மாயி
னென்னசுக மடைகுவலுன் பெரிய வீர
மெளியேன்பா லின்னணமோ விருந்த தச்சோ
சொன்னவணை மருள்வையென்ற தீர்வை யொன்றே
தொழும்பன்வெளி மலியிலக்காக் கொண்ட தற்கோர்
பின்னமெய்தா தருள்பாலித் தாளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. சு.

பேடிபெண்ணைக் காமுறல்போற் கல்வி யில்லான்
பெருங்கழகம் புகவெணல்போற் றிருவில் லாதான்
பாடிபுகழ் வள்ளலெனும் பெயரொன் றேற்கப்
படிமீது சூழ்வதுபோற் பதியா முன்னே
நேடிநிற்கும் பேரளியில் லாத நாயே
னீடருள்வாழ் வடையநினைக் கின்றே னின்பப்
பீடிகைமே னீவைத்தால் வாழ்வே னெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. நு.

வீதலில்லாப் பெருமவுன்னை யடைவே னுயின்
மிகக்குறளற் குயர்தருத்தே னெட்டஞ் போலு
மாதுலற்கு நிட்சேபம் வாய்த்தாற் போலு
மந்தகற்குக் கண்பிராப்தி யாறற் போலு
மேதமறக் குணிக்குவாக் குற்றுற் போலு
மெனவலிக்க யாதுதடை யெந்தா யெந்தாய்

பேதமிறக் கருணைசிறந் தருளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. ௬.

மாயின்மிப் பனித்திடுநின் கருணை வான
மாணடியா ராம்பைங்கூழ்க் கிரங்கா தாயி
லுயின்றித் தழைப்பதெங்ங னக்கோ வக்கோ
வுன்னையல்லாற் புகல்சிறிதுந் தனியேற் குண்டோ
காயின்றிக் கசடுபல செய்தே னெனுங்
கருணையுளாய் நுன்னடிமை யாகா நின்றேன்
பேறண்டுந் தனியருள்செய் தாளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. ௭.

தரணிவதி புருடார்குண மேது மில்லாத்
தனிப்பிரமப் பொருளாய பெரியோ யுன்னைப்
புரணிபொலி புருடார்குணப் புல்லர் யாங்நன்
புகரறவே தானறிவார் பூர்த்தி யாய
கிரணவருள் கிடைத்தாருன் வாழ்வே னல்லாற்
கிஞ்சித்தும் வாழேனென் கிழமைக் காய
பிரணவசு வாமியருள் புரியா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. ௮.

அரசத்தாட்டு நுன்செயலா லடியே னுன்ற
னருள்வேண்டி யேமுயலா விடினு மப்போன்
முசுப்பிடியா முயலினுமுன் கிருபை யாங்கே
முன்னிருந்து முடிக்காதேற் பயனென் னெந்தாய்
தசத்திகையுந் தொழுமோளிக் கெனைத்தா னைக்கிச்
சத்யசுகம் பெறவுளத்தி னினைத்தல் வேண்டும்
பிசிப்போதஞ் செருத்துனர்வார் பேறே யெங்கள்
பேரரசே பாரமுதே பேசா வாழ்வே. ௯.

நன்றில்லேன் [illegible] சைமிக் குள்ளேன்
ஞானமில்லே னூனமுள்ளே னல்லார் கொள்கை
யொன்றுமில்லே னுண்மையில்லே னின்மை யுள்ளே
னுணரசைதிக் கறையிகந்து பரமா நந்த
மென்றுமுறப் படர்ந்தனிங் கெந்தா யெந்தா
யிரமிகுத் தருள்சமந்தப் புகழ்சொற் ருற்குப்
பின்றையெனு தாண்டபர குகேசா வெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. கூ.

---

* குகப்பரமம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வார்சாலு கத்திலெனை மனுவாய் வகுத்தவருண்
மதியாயி ருக்கு நலருள்
சீர்சால வுற்றகரு வியெலாம சைக்குமருள்
சிவநாட வைத்த மெயரு
ளூர்பேர்கு ணத்திரய மணவாத சுத்தவரு
ளொளியாக நிற்கு மொரருள்
பார்மீத னக்கருளு மருளாகு மித்தையுள
பதியேகு கப்ப ரமமே. சு.

அடியார்த மக்குறுக ணணுகாத வினக்குமிறை
யடலுழ்வி னைத்தெ டர்பிலுன்
மடியார்வெ றுப்புறினு மினிதாய வருத்துமிறை
மறலூரி ருத்து மறமே
குடியாயி ழைத்திடினு நமனுனை பெற்றவர்கள்
கொடுபோக விட்ட மிலிறை

---

* இப்பதிகச்செய்யுள்களோறும் கடைச்சீரில் வருகிற ஏகாரத்தை ஈற்றசையாகக் கொள்க.

படிமீதெ வர்க்குமிறை யெனவேயி ருக்குமொரு
பதியேயு கப்ப ரமமே. ௨.

தேவாதி கட்கரிய முதலாய ரக்கர்நரர்
செறிபூதர் மற்று முயிர்தாங்
காவாவெ னச்சொலவ தமாதரிக்கவுள
கருணைக ரக்க டவுளாய்
மூவாசை செற்றபொறை யுடையாரு ளத்திலவிர்
முழுமாம ணிச்ச டரதாய்ப்
பாவால்வ ழுத்துமென தறிவாயி ருக்குமொரு
பதியேயு கப்ப ரமமே. ௩.

நிலனுள்ப வர்க்குமதி மிடியோர்த மக்குமணி
நிறைபாவ லர்க்கு மடமே
சொலுமூட ருக்குமுயர் குலமாத யர்க்குமதி
சுழல்பூரி யர்க்கும் விடமே
கலனுபு ளர்க்குமற நலனேயு ளர்க்குமலல்
கடிவானி னைத்த வடலும்
பலனீய ருட்சலதி யெனநானி னைக்கவுள
பதியேயு கப்ப ரமமே. ௪.

பெருவான ருட்குயிரெ னநினவெ னமத்தர்மருள்
பிணிகாள ரக்கர் நிலநாண்
மிருகாதி பகர்நரர் வலிவேறு மச்சவுரு
மிடலோடு ழைப்பி னநனம்
வெருவிவில னக்குரியை வெருவேவில னக்கருண
விலைவால்வி லக்கி யருளும்
பரிவேசி றக்குநிற பிரியோவெ னச்சொலொரு
பதியேயு கப்ப ரமமே. ௫.

அணிநாய கந்துரிய மணிநாய கங்குசல
ரவைநாய கங்கு றைவறு
திணிநாய கங்கவிஞர் புகழ்நாய கம்பெரிய
திருநாய கங்க ருடைறு
துணிநாய கம்பரம குருநாய கம்பிரம
சுபநாய கந்த மியனேன்
பணிநாய கம்பிரம மெனமேவி ளங்குமொரு
பதியேகு கப்ப ரமமே. சு.

இகழ்பாவ மென்றவினை யதனல்வி லங்ககம
மெனமேவி ளங்கு யிர்களும்
புகழ்சில மென்றவினை யதனலு யர்ந்துளவி
புதராயி லங்கு யிர்களுந்
தொகையாமி ரண்டும்விர வியகூவின் மைந்தருமொர்
சுகமேவ வென்றி ருநடம்
பகமாயி டுங்கடவு ளெனநானி னைந்துதொழு
பதியேகு கப்ப ரமமே. எ.

எழிலாயி யங்கும்விழி யிமைபோல னந்தநசை
யினர்தாமி ருந்தி டினுமவ்
விழியாத வன்கிரண மிலதேல்வி ளங்குவதெவ்
விதமாக லின்ப லுயிராய்
மொழிசேத நங்களுழி யொளியாயி ருந்தமுதன்
முதவீர மங்கி னலனில்
பழியேயெ ழும்புமென நினைவாரி றைஞ்செனைரு
பதியேகு கப்ப ரமமே. அ.

கனிநேய வன்பொனு முருகார ருங்குழவி
களெலாநி னைந்த வமய

மினிதாய ருந்துவண முலையாயி றங்குமரு
ளெனுமாட நந்த முடைய
தனியீச னந்தநடு வடிபேத மென்பவைகள்
சமையாத வன்ற னியனேன்
பனியாவு மங்கவருள் புரிதேவ னென்றவொரு
பதியேகு கப்ப ரமமே. கூ.

நயமேகி ளர்ந்துபர சடியாரை யெந்தநில
நகமாதி கண்க ளினுமல்
வெயிலேலவி ரிந்தபக லினுநா கருங்குமரம்
வினைசோரி ருஞ்சை யினுங்
தயவோட கம்புறனு முறையேபு ரந்தருள்செய்
தகையார்பெ ருங்க ருணையின்
பயனேவி ரும்பருண கிரியார்பு கழ்ந்தவொரு
பதியேகு கப்ப ரமமே. கo.

பரசுப்ரமணிய வாழ்வு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருஞானந் தனையடையத் தவம்புரிய
வென்னவுமத் திருஞா னத்தாற்
பெருஞானப் பிரமத்தை யறிந்திடலா
மென்னவுநற் பெருமை வாய்ந்து
தெருளான தைத்திரிய வுபநிடத
மறைந்திடுமத் தீர்வைக் கேனு
மருளீனை விடுத்ததுண்டோ வெனையாளும்
பரசுப்ர மணிய வாழ்வே. கூ.

உடம்புமுத லாநந்தம் வனையொன்றுக்
கொன்றுள்ளே யுளவேவா னைந்து
சடஞ்சொலிடு மைங்கோசச் குகைக்கப்பா
வுளகுகனைத் தரிசித் திட்டா
லடங்கடந்த முத்தியெனத் தைத்திரிய
வுபநிடத மதிர்க்கு மத்தை
மடஞ்செறிந்த யானடைவ தென்றெனையாள்
பரசுப்ர மணிய வாழ்வே. உ.

எம்மூர்த்தி களுமற்று மெல்லாமும்
பரசிவனே யிணையி லந்தப்
பெம்மானே பறிந்தவனே மிருத்துவினைத்
தாண்டுகிறன் பெரிய வீட்டுக்
கிம்மார்க்க மலதில்லை யெனுமெசுரின்*
கைவல்ய மிசைத்த வாறு
மம்மருளே னறிந்துய்வ தெக்காலென்
பரசுப்ர மணிய வாழ்வே. ஈ.

சிரத்தையருந் பத்திதியா நம்மியாகங்
காரணமாச் சிவஞா னந்தா
னிரப்பறவே வாய்க்குமெனு யசுரின்கை
வல்யவுப நிடதங் கூறு
முரப்பில்லை னுக்கவைதா மெந்தவா
றமைவுறுமன் புடையர்க் கீநல்
வரத்தரசே யருள்புரியா யெனையாளும்
பரசுப்ர மணிய வாழ்வே. ச.

---

* இது எசர்வேதத்திற்குச் சேர்ந்த ஒருபநிடதமேயல்லாமல், கைவல்ய நவநீதமெனும் ஒரு சாஸ்மாத்த நூலன்று.

ஈச்சுரசா கூதாத்காரத் தான்மோக்க
மென்றதர்வ சிரசு கூறும்
பூச்சாரு நீத்தாரொல் லார்க்குமிது
பூர்த்திதரும் பொருத்த மென்னுப்
பேச்சறையத் தடையேதீ தடியேற்குக்
கிட்டாது பின்னிட் டாக்கான்
மாச்சிரம மாமன்றே வெனையாளும்
பரசுப்ர மணிய வாழ்வே. ரு.

சித்தநிரோ தந்தானே சமாதியென்று
மதுவேசாத் தியமா மென்று
மித்தைசொலா வழுதவிர்தா முபநிடதந்
தெற்றெனவே விளக்கா நிற்கு
மத்தையிந்தப் பேதைமையி னடையொழுங்கு
நீபணித்தா லன்றே மங்கா
மத்துடையோ யுய்வே னெனையாளும்
பரசுப்ர மணிய வாழ்வே. சு.

இனியசமா திக்குரித்தா மேகாக்ர
சித்தமருத வீச்சு ரன்றன்
கனிவுகிள ருபாசனையா லாமென *வைம்
மூன்றுபிர காரத்துள் ளே
நனிபகரத் திருப்திதீ பங்கிவத்த
லானுமந்தா னடையுள் ளாரும்
† வனமிதுவன் றெனவே வுளமேதா வென்
பரசுப்ர மணிய வாழ்வே. எ.

எசில்சித்தி யார்சுபக்ஷ மிரண்டாஞ்சூத்
திரமிருபத் தெட்டி லென்று

---

* பஞ்சாசப்பிரகாரமென்னுமென்பது வாதநூல். † வனம் = வழி.

மாசில்சுத்த மானதமாம் பூஜைமகத்
தென்றுமணங் கான்மேரு வண்மை
பேசுபத்தி ஞானனெதன் னுஞ்செருக்கை
மாய்ப்பனிறை பெறுமென் றுஞ்சொன்
மாசினித்த நெறியெற்கு மென்றுறுமென்
பரசுப்ர மணிய வாழ்வே. அ.

கன்மமுயர் யாகத்தும் புண்ணியமா
நதிகண்முழுக் காதி யாய
தன்மதபோ யாகமுமவ் வியாகத்துஞ்
சற்சபமுஞ் சபயா கத்தும்
புன்மையின்மா னசமாகுந் திபாநயா
கமுமுறையே புகலொண் ணுத
மன்னனச்*னை வப்புராணஞ் சொலுமெனையாள்
பரசுப்ர மணிய வாழ்வே. கூ.

திராவிடவோத் தாமுறைத்தெள் ளேணத்திற்
சொனபோதச் சிதைவுஞ் சைவ
புராணவளிச் சங்கிதையின் ஞானநிலை
யுரைத்தகோண புகன்ற வண்ணை
மராகமல மாயைமிகடிற் சிவனுவன்
சிவனென்னு மமைவு மெற்கு
வராமலுமுப் பேவனூற்றப் புதன்புகழுன்
பரசுப்ர மணிய வாழ்வே. கூ

---

* இஃது சைவபுராணம் ஞானசங்கிதை உசு - வது அத்தியாயம்.

குகசம்பு.

அருணகிரிநாதர் சிரியவிருத்தம்.

புகழ்மலி சண்பையி லும்பரும்
புகழவி ருந்தரு ளுண்ட வேள்
திகழ்மறை மந்திர வந்தரந்
திரிபுடை யொன்றொடி ரண்டெனப்
புகறலொ ழிந்துள டங்கிடும்
பொறைமவு நம்பிடி யென்றுதந்
துகளறு தொண்டர்சு கம்பெறச்
சொனதில்லை யென்குக சம்புவே. க.

வசுதைதொ டங்கிய ருஞ்சிவம்
வரைசது வொன்பது மின்றியொன்
சுசிசுட ருஞ்சிவ நின்றிடுந்
துவிதம கன்றதை யண்டுத
லுசிதவ ருஞ்சிவ மென்றுநன்
குளவரு ணர்ந்திப கர்ந்ததிற்
கசிவுடை யென்றனை யென்றும்வை
களிகிள ரென்குக சம்புவே. உ.

அவதித ருந்தலை யைந்தையு
மகலவ யர்ந்தவர் துன்பறு
சிவமென நின்றன ரென்றுநன்
றெவுடிரு மந்த்ரம றைந்தவர்
தவனிலை கொண்டிய வன்புசெய்
நுளையில்சி தம்பர வங்கணன்
பவமற நன்றரு டந்ததண்
பரிவுடை யென்குக சம்புவே.

எனதாழில் கொண்டுக றங்கினு
மிறையரு ளின்பரு ளஞ்சிகாக்
கனமவு நந்தனி லென்றுபேய்க்
கனன்மது ரந்தர வுண்டகோன்
சொனதுரி யந்தனி னின்றிரு
சுகமடை யும்படி யின்றெனை
மனதுக னிந்துக லந்திடாய்
வரர்பர சென்குக சம்புவே. சு.

மலமழி வின்றிய ருந்திரு
மறைபுக ழும்பதி யென்பதிற்
கலவலி கந்தவிவார் தந்திர
கதிவர லென்றென வஞ்சிர
மலையர னின்பெபர் கொண்டுளன்
மனதுக னிந்துமொ ழிந்தவர்
நலனுற வின்றுக லந்தரு
ணவிலரு மென்குக சம்புவே ரு.

உருவெளி யாம்படி யோங்கிய
வொருவனி ரந்தர வுண்மையை
மருவியிம் மாண்பய னீண்டிவர்
மருவுவ தென்றறி விம்மிதம்
பெருகிய வான்சுக வீங்கலிற்
பிரிவற விங்கெனை நன்குவை
கருணையி னீண்டம காம்பரக்
களிகிள தென்குக சம்புவே. சூ.

நீயெனை நற்புரி வான்முவர்
நிகழுரு வங்கொடு வந்துநன்

னேயம தர்ப்புற வேசொன
நிலையினி னின்றுப யன்பெறத்
தாயினு மிக்கத யாவினைத்
தருவது முன்கட னுன்கடன்
றாயவ ருட்கரு வூலமே
சுபகர வென்குக சம்புவே. ஏ.

நால்வர்ந டப்படி நின்றிது
நாள்வரை யின்புய ருஞ்சுகஞ்
சால்கதி பெற்றுள ரன்பது
தாழ்வற விங்கெனை யண்டிநுன்
பால்வதி யத்தடை யென்கொலென்
பாலதை நெஞ்சமு வந்தரு
ணூல்க டிதிக்கவ யங்குமோர்
நூனமி லென்குக சம்புவே. அ.

சிந்தையி றந்துசி றந்தவர்
சென்றவ ரம்புணு ழைந்துவெம்
பந்தம கன்றிட வென்றுனும்
பண்புடை நெஞ்சம டங்கலு
மெந்தைக ளென்றுகு ரங்குமன்
பென்பதை யுந்தர லுன்கட
னந்தமி லந்தணர் சந்தத
மன்புசெய் யென்குக சம்புவே. கூ.

அசைவறு நன்மவ நந்தனி
லமொன லும்பொரு ளொன்றையுந்
திசையொடு கண்டில னென்றுசெந்
திருவுள நம்பந டந்துளன்

வசையற வண்டிய வின்புழை
வழிபடு மென்றனை யுந்தனை
பசையருண் மைந்தர்க ளெங்கணும்
பரவிடு மென்குக சம்புவே. ௧0.

பெரிய சாமி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கங்கை வார்சடைக் கடவுள் சேயெனுங்
கந்த வேள்சய கீய சவ்வியப்
புங்கன் மாணவக் கரிலம் பாதகம்
புரிந்த வோர்மறு டற் *கி ரங்கியப்
பங்கம் வீட்டியாட் கொண்ட துண்டெனப்
பகரன் மெய்யெனி லெளிய னேனமு
மங்க மாய்த்தருள் புரிவை யேயருள்
வரத சாகரப் பெரிய சாமியே. ௧.

சிந்திற் குந்தனு வாவிக் குந்தடச்
சிகரிக் குஞ்சிறு திடருக் குங்கடத்
தந்திக் குங்குழைப் பன்றிக் கும்வியன்
ருழ்வெம் மட்டமட் டெற்கு நின்னருள்
சிந்திக் கும்பெரி யர்க்கு முண்டிதிற்
சிறிய னுய்யுமா றெங்ங னெற்கினி
வந்திக் கும்முனை யன்றித் திக்கிலை
வரத சாகரப் பெரிய சாமியே. ௨.

அனலிக் குஞ்சிறை யலகுக் கும்மலை
யசத்துக் குங்குழை யளக்கர்க் குஞ்சக

* இஃது சைசலத்தில்.

மனுவுக் கும்பிற மறைகட் கும்முள
மாற்ற மெம்மடங் கம்ம டங்கருட்
டனுவர்க் குஞ்சிறி யவனுக் குஞ்சொலச்
சகடொ ரற்பமு மிலையு னைப்பணி
மனமுற் றுங்கொனை தளர்வுற் றேயுய்வனே
வரத சாகரப் பெரிய சாமியே. கூ.

அரிய புத்தியின் மிருக மொப்பவிங்
கருந்த லும்பொருந் தலுமே கன்மமாத்
திரியுன் மத்தரைப் பொருவ நிற்பணி
சிறிய னுந்திரிந் திடின ருட்டிறன்
விரிம தர்ப்பினர் பொலிசை யுத்தியெவ்
விதமு றுஞ்சுக முதவு நன்கருள்
வரிய ளித்தருள் புரிதி யொப்பிலென்
வரத சாகரப் பெரிய சாமியே. சு.

சுடரின் மேலுமே லுந்துப் பாச்சியஞ்
சொரிய வஃதவிந் திடுவ துண்டெனின்
விடய மோகமுந் தமசு ளேற்கறும்
விதியுண் டாமெனப் புகற லாமைய
கடவு ளாயநுன் கருணை நோக்கமென்
கண்ணி னுந்தடை யாகு மேற்றொடர்
மடமை விடவு மிடனுண் டோசொலாய்
வரத சாகரப் பெரிய சாமியே. டு.

தக்க னற்றனங் கொழித்து ளுற்றுநற்
சபல கன்மமுங் கவலை யேதரும்
பக்க மிக்குடைத் தண்டி போலரும்
பரத்தை யேமுனிட் டுளுற்று பாவமும்

பொக்க மின்னலன் றருமென் றூலருட்
புரிவி யாதினும் பெரிது நல்லருண்
மக்க ளுக்கெலா முரிய வத்தைபீ
வரத சாகரப் பெரிய சாமியே. ச.

சகுன மானெழின் மீன்மண் டகமஞ்
சலிகை போல்வினிற் சரித்துங் கானலி
மிகும றன்மகிப் புடைவ திந்துமுவ்
வியத மாநித நான்று நிற்றலிற்
றகுதி யாயநின் றனைய றிந்துபுஞ்
சரத வின்பிலோ ரிறையு மெய்துமோ
மகுட வானவர் முதல்வ வென்னையாள்
வரத சாகரப் பெரிய சாமியே. எ.

ஊன்பு ரத்தொரு வற்குன் மெய்யரு
ளூறுமெ னிற்பிற வொருவ னேத்தொடல்
தேன்க டக்குநன் மொழியு லோசநஞ்
சிந்தை கொண்டிருள் போக்கி யாள்வலி
தான்பெ ருக்குமேன் முதலி யாயவுன்
றரிச நத்திலே பாச நீக்கமும்
வான்க ளிப்புநன் கெய்தற் கையமென்
வரத சாகரப் பெரிய சாமியே. அ.

சோக மென்றசொற் சொனதி லுடற்
சுமையு ளோரெரு வனருந் தேவுமே
டேக மாங்கதி யெய்து வேனென
வெனலி னுஞ்சம னிருணி லத்துளே
போக னீங்குமேற் பெரிதெ னத்தனுட்
புந்தி செய்தனன் கென்றிவ் வாறிய

மாக ரிப்புறு வேணைக் காவுதி
வரத சாகரப் பெரிய சாமியே. கூ.

சச போற்றிநன் னேச போற்றியெம்
மிறைவ போற்றியெம்பெரும போற்றிசூர்
நாச போற்றிமெய்ப் போச போற்றியொர்
நாத போற்றியென் ரூதெ மாப்புடைத்
தாச சேத்தரு ணைச லப்பெயர்ச்
சாது பாத்தலை வாறு னைப்புணர்
மாசி லாக்கமே வேண்டு மாண்டருள்
வரத சாகரப் பெரிய சாமியே. கo.

திருவருட்கடல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகடங் கலும்பனி யிறையவன் சேவைய
தொழிற்றுளர் பணும்விணைப் பலணைத்
தலமிசை * யநுபவித் தாவது பரிகரித்
தாவது சரிசெய வேண்டு
மிலையெனி னதுபுரிப் பவத்துறு மெனவிர
னியன்முளை † சொனநடுப் படியுன்
னலணுடைச் சேவையி லாதுயும் வழியெங
னுன்ரூழுந் திருவருட் கடலே. க.

நன்னெலைக் கவர்ந்துவைக் கோல்விடுத் திடலன
ஞான நூற் பொருளிணைக் கிரகித்

---

* அநுபவம்=வினையின் தாரதம்மியப்படி, பல காலவளவைகளிற் பொருந்தும். திருட்டாந்தம்.—பின் கரு - ஆண்டன்மேலும், (பிரகதி)கத்தரி உ - மாதத்திலும், நோ கரு-எனிலும் பலன் நல்போல இம்மையிலு மறுமையிலும் கூடுமென்க.

† இஃது ஞானசம்பந்தரைச் சொல்லியுளது.

தந்நெறி நூல்விடித் தாரிய னுரைப்படி
யநுதிநஞ் சாதனை புரிந்துன்
னின்னரு ளடைந்தன நறிருநொல் லாருமிங்
கிழிநசை சூழ்ந்துகெட் டேனுன்
முன்னிய வணமினி முயங்கிநல் லருள்செயென்
முழுமுதற் றிருவருட் கடலே. உ.

ஆரிய னுவற்சிநம் பாதசந் தேதகமு
மகிலமு மாக்கையு நாமென்
றோரிடை யூறற விழைவிப ரீதமு
முறழ்வுடைப் பொருண்மறைத் தோவாக்
காரிரு ளாயது மிலையெனி னுனதருட்
களியினை யடைவகை புண்டாஞ்
சீரிய நடையிலெற் கெதுவரு மடியனைத்
தெருட்டுநற் றிருவருட் கடலே. ங.

தந்தைதாய் மனமக வாதிய ரியாதொரு
தருணமை விழிமறை வாயிற்
சிந்தைதான் வருந்தியம் பகத்தலர் வடிப்பரித்
திணைக்கொரு மூலமா யாதி
யந்தமின் றுளசிவ மறைந்துள நிலைகுறித்
தழுகிலர் நரரிதை யாயி
னிந்தைசான் மடமையென் றுமிதைக் கடந்துய
நினைவுசெய் திருவருட் கடலே. ச.

ஆண்டைய ராயுளொர் நூற்றினு மேலிலை
யதிலனைக் கூறுநித் திரைக்காங்
காண்டிற மதிற்பதி னைந்துள மையிற்போங்
கதிதளர் சரைக்குமவ் விதம்போந்

தூண்டுமற் றிருபதி னெய்முத லாயவை
தொடர்வுறு மிதற்குளெண் ணறுநூ
லேண்டர வுணர்வதெங் கறிவதெங் கடைவதெங்
கெனைக்கொளுந் திருவருட் கடலே. ரு.

உரியவ ரவைபுகுந் தமிழ்துறழ் கேள்வியி
னுருசிகன் கறிந்துயு மேதைப்
பிரியமின் றளியென வாய்ருசி யறிந்துயிர்
பிழைத்தலி னின்றுமெய் விடுத்தல்
பரிநல னுகலி னுரியவர் வதியொரு
பதியிடை யநுதிந மிருத்தி
யரியவுன் னருட்கெனை யீதிபின் கோடியென்
னுதரத் திருவருட் கடலே. கு.

ஆணவத் திமிரமு மாயையந் தீபமு
மகவினை மலமயக் கறிவுங்
காணுயி ரெனும்விழிக் கொளியருள் சிவமெனுங்
கதிரவ னுதித்தவிர் காலங்
கிணமுற் றருளினி லடங்கிடு முயிர்நலங்
கிளர்சிவ மதையடைந் திடுமிவ்
வேணமெற் குறுவதென் றுனக்கருள் புரிவமென்
னிசைத்துள திருவருட் கடலே. எ.

கேவல விருட்டினின் மாயையந் தீபமுங்
கிருத்திய மலமயக் குணர்வு
மேவினின் றிடுமிவன் குரம்பையே மாயையும்
வினைகளொ ரிரண்டுமே சுவர்க்கந்
தீவிர மாயுள கருமமு மாமிவை
திமிரநந் திடுவண மருளா

லீவதென் றுணைனெனக் குணையல தெவரரு
ளிகைக்குநர் திருவருட் கடலே ல. அ.

உயிரினைக் கீழ்நிலை யரணிய தாகவு
முனதிருந் தாரக மநுவைச்
செயிரறு மேனிலை யரணிய தாகவுந்
சேர்த்தும தித்திடு தியாந
மயர்பொழு தெழுமறி வாகிய கனலியவ்
வரணிமு முதுமதன் மயமாக்
குயிறுமொ ரருந்தொழி லளிசான வாறனைக்
கொளுமொரு திருவருட் கடலே ல. கூ.

இப்படி மிசைமிறை யேநித நான்புரிந்
திருப்பினு மென்னிறை யாமுற்
கெப்படி யேனுமென் றனைக்கொடுத் ததிற்சக
டிலையிலை யணைப்புதெப் படியோ
வப்படி யிழைப்பதுன் பாரமெந் தாயரு
ணைசலப் பெயரிய வொருவன்
செப்பருட் கவிப்பொரு ளெயெனை யாள்குக
தெய்வமே திருவருட் கடலே ல. கo.

பராபரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமிசை யம்மிணை யாதனைப் போற்புரி
யாதுயர் நோக்கமுடை
மாமனு வாய்வகுத் துள்ளநற் காத்திரம்
ஒளவியு மெங்கெறிக்கு

மோமெனுஞ் சைவசித் தாந்தசன் மார்க்கமுற்
றுன்னினே வேபோந்து
மேமுற லின்றெனி னென்னுறழ் தோஷிமற்
றேவர்ப ராபரமே. க.

நின்பரி வானுனக் கஞ்சுவி வேகமென்
னெஞ்சில மர்ந்தமுதன்
மன்பதை பல்வகை யாகவி றைஞ்சுதெய்
வங்களெ லாமுதலா
முன்பரி பூரணத் துள்ளவென் றுன்னையே
யுள்கெளி யேனையிந்நா
ளன்பொடு நீயரி யாவிடு ரைத்துணை
யாவர்ப ராபரமே. உ.

பாரிம காருற வாகர மாதிய
பந்தமெ லாமுயிர்த்துன்
பேரரு ளேதுணை யென்றுதி ரிந்திடு
பெற்றியு ளேனையீனத்
தோரரு ணீபுரி கில்லைய னிற்புரி
வோடெறு ளங்கருதி
யாரரு ணல்குவ ரார்துணை யாகுவ
ரையப ராபரமே. ங.

தூங்கிவி ழித்நிட லொத்தவு லப்பொடு
தோற்றர வுக்களியே
னீங்கிநி ரந்தர முன்னெடு தோய்ந்துய
நித்தமு னைக்கருதென்
பாங்குணர் வாரொவர் பண்டைவி னைக்கடை
பைதலி னின்றுமெனைத்

தாங்குவ ராருனை யன்றிய ருட்பிர
சாதப ராபரமே. சு.

ஒன்றும றிந்தில னுக்குமெல் லாமறிந்
தோற்கும நந்தையுழை
நன்றிது தீதிது வென்றுணர் தர்மமெஞ்
ஞான்றுமின் றுன்னடியா
னென்றுள நானிடை யாதலி னுன்னரு
ளின்றியெவ் வண்ணமுய்வே
னன்றறை தந்தவ ணம்புரி யென்னறி
வாயப ராபரமே. ரு.

நீயெனை யாண்முறை யாயளி காட்டியென்
னெஞ்சையு முன்வயமா
யீயவ லித்திது காறுமை நேகவெல்
லென்னைம றந்ததனாற்
றாயவ னன்றிவன் றீயவ னென்று
துறந்தனை யோவெனவிங்
கேயக நைந்துக லங்குகின் றேன்புக
லேதுப ராபரமே. சு.

இப்படி மற்றுரு வப்பொருள் கட்கெலா
மெப்படி யாதரவோ
வப்படி யெப்பொரு ளுக்குநீ யாதர
வாமதி லின்புதரா
முப்புடி விட்டருள் பெற்றனை வர்க்கெலா
முக்கிய வாதரவா
யெப்பொழு துங்களர் நீயெனை நீங்குவ
தென்னைப ராபரமே. எ.

இத்தரு ணத்தினை யாண்டருள் செய்கிலை
யேன்மன மிக்குலைவா
யெத்துணை யுஞ்சுக மின்றிய ழுங்கிட
வெய்துவ தாடனையே
யொத்தவ ரும்பினி லும்படி யாமைய
வோகைகி றந்தருளா
மத்தமு றும்படி செய்சிவ சுப்பிர
மண்யப ராபரமே. அ.

கேட்டனி னைத்தெ றளிந்திட லென்பன
சீனையின் ஞானமதை
யீட்டிடு மார்க்கம தாகும லாலுதிப்
பென்பத கற்றிடுமோ
காட்டிக நிட்டையி லைத கன்றிடல்
சத்திய மாதலினை
வாட்டமி லந்நிலை தன்னில்வை சுப்பிர
மண்யப ராபரமே. கூ.

நிட்டைநி மித்தம தாகமு னற்றவென்
னீர்மையெ லாநழுவ
நட்டந டுத்தக ரணய மானதி
லுட்டமி டும்படிநீ
யிட்டவ னம்பணி நானுய நல்லரு
ளென்பதை யீதியருள்
வட்டைவி ளக்குபு கழ்க்கவி நன்னிரு
வாணப ராபரமே. கo.

பரம்பொருள்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வார்முந் நீர்வளை நிலனுழை நானன்
மதுவு டம்பெடுத் துங் * கரி வலமா
யார்வ மல்கவந் துளகர்க் கரிக்கு
மால வாய்க்கரிக் குருவிவெண் ணைக்குஞ்
சீர்ம யேந்திரப் பள்ளியி னெலிக்குந்
திருவொ மாம்புலி யூர்ப்புலி தனக்கும்
பார்த னின்மிகக் கடையவ னுமேன்
பரிவு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. க.

பண்டைப் புண்ணியத் தானர னுமெய்
படைத்து மானவி நாசிநற் கொடிக்கு
மிண்டை நீர்நிலை மல்குமா டரீன
யீரத் துள்ளலுக் குந்திரு வாலூர்
வண்டி றேனுவுக் கும்புலிப் பாறை
வல்லி யத்தினுக் குங்கடை யாயுன்
றிருண்ட னேனுளன் மேம்படு வானீ
தொடர்பு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. உ.

எம்பி ரானுனைக் கருத்துழி யிருத்தா
வேத்து கல்லுருப் படைத்துமிந் ஞான்று
லும்ப ரோத்தொரு கழுக்குவ டிருந்த
வுவணங் கட்குந கேச்சுர வகிக்குஞ்
சம்பு கேச்சுரச் சிலம்பியிம் மடிக்குந்
தகுதி ருந்துதே வன்குடி யசுவஞ்
செம்பொ னண்டினுக் குங்கடை யாளன்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. ங.

* கரிவலம்வந்த கல்லூர்.

அளப்பி லாற்றனன் குடைச்சிவ மாமுன்
னடிமை யாப்புட லேற்றுநெல் வேலிக்
களிற்றுக் குங்களை யண்டச மதற்குங்
காலி லாத்திரு வான்மியூர்ச் * சுனைக்கு
ளெளிப்பொன் வாவிபல் லுள்ளவெள் ளருணை
நாவிப் பிள்ளையென் பதற்குமே கநகந்
தளர்ச்சி சாற்றிட வுளகடை யானென்
றகவு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. சு.

தெய்வ ரத்தின மாமுனைப் பழிச்சேசார்
திடமெய் யேற்றுமங் குரங்கணின் முட்ட
மைவ ணப் † பர பிருதமை யணிற்கும்
வண்மை வலிவலக் காக்குரு விக்கு
மெய்வ ளர்க்குமி ராகவ சேது
விகத வானரத் திறுக்குமொண் டனுக்குங்
கைவ ழுத்திடு கடையவ னேனென்
கருணை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. கு.

கருணைச் சாகர மாமுனைக் கருதாக்
கதியொன் றேற்றுய வுரியமெய் யேற்றுந்
தெருணட் பார்மயி லாடிடு துறையின்
‡ றிண்டி வான்பரி கரங்குரங் கரவ
மிருணத் தாகிழிப் பூசைவள் ளொண்ட
|| வெருவை யங்கிளி யென்பவை கட்கோர்
திரணத் தாறுமொவ் வாக்கடை யானென்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. சு.

வெண்ணு வார்திற மேனுர்ந்தவவ் விதமா
யெழுந்தெங் காமணி யாமுனை யூழ்த்தா

---

* சுரை=பசு. † பரிருதம்=சாகம். ‡ றிண்டி=யானை. || எருவை=கழுகு.

நண்ணு மானவ வுருவெனக் கேய்ந்து
நானை யூழி ணைமையான் றனுக்குந்
தின்ணை ணரருச் சித்தவெர் தலத்துச்
சிலம்பிக் குங்கரிக் கும்பண வகிக்கு
மண்ணிற் கடையவ ணுயிருக் கின்மேறன்
மனது கூர்ந்துகண் பார்பரம் பொருளே. எ.

நறுஞ்சு காகரத் திருவுள மாமுன்
ணுட்ட மிற்றென வுணருரு வேற்று
மெறும்பி யூரிடை நுணுகெறும் பினுக்கு
மேர்சி றந்தவ ளங்கெழு வாவி
யிறும்பு பம்புபைஞ் ஞீலியங் கதலி
யென்ற தாபரங் களுக்குமிக் கால்வன்
குறும்ப ருவெரு நான்கடை யானேன்
கொள்கை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. அ.

ஆர ணங்களு மளவிடற் கொண்ணு
வமல ஞானவின் ணுவிரிந் திடுமுன்
பூர ணந்தனை நேடொரு மதியைப்
பொருந்து மாறுட யாக்கையை யேற்று
மேரி ருந்தகொற் றவன்குடிக் கண்ணே
யிருந்த முள்ளியஞ் செடிக்குமிக் காணன்
சீரி றந்துள கடையவ ணேனன்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. கூ.

நின்னை நாடவிஞ் ஞான்றக நீயே
நீட்ட வேற்றுள நான்முனர் வகுத்துச்
சொன்ன வல்விலங் கூர்வனம் பதகந்
துருமஞ் செடிகளுக் குங்கடை யாகி

யிந்நி லத்திடை யிருக்குமென் கதியை
யென்னு ளைத்திட வெங்குகே தவே
வன்னி வெஞ்சிலைப் பெயரிய னரசே
மனது கூர்ந்துகண் பார்பரம் பொருளே. கo.

நினைத்தாலென்பிறப்பறுத்திடும்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சகமெங் கணுமிகு புகழ்விரு டமநி
சாலுந் தென்மலி யாளுமகான்
மகரங் குலவிலை யினையுன் டதுபொரு
மலைமண் டலிபுக மாடிபது
மிகலும் பரறவர் பணிகந் தவையி
னிருகோ டிருசர பேர்த்திபது
நிகரொன் றிலிறை யருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. க.

பொறைமிக் குளவொரு முந்தற் செவிவழி
புனைத்தூய் வரந்தி யிந்தத்துவுந்
திறைவிட் டகவுசி கனையற் கொவவனை
திணியா யுயர்நிலை பணிசாதுவுங்
கறையிற் றபெரிய மறையுர் சியிலுள
கருவுரு கரசிவப் பொருளானமே
நிறைநற் றுகவிறை யருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. உ.

பகவொன் றுயர்சிவ புசிதம் பணியதி
பள்ளி யயன்றொழில் பண்ணியது
முகவொன் றரசினர் குடிவந் துரமெடு
மூன்று மொழியுல காண்டதுவுஞ்

சிசுவொன் றனைசினை தனில்வந் துளவொரு
செய்தி விளம்பிய மெய்யுறழ்வு
நிசவின் பவிறைவ னருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. கூ.

பிலவங் கமெனுமொ ருயிர்தன் னுடுமுனை
பிரயோ கிக்குநர் வலிபாதி
கிலமின் றுதனிட மடையுந் திடமொட
கிலமே னெடுநா ளுலவியதும்
பலமிஞ் சியரிய வரிசென் றிடுமுயர்
பரியா யொருசுக நிலவியதா
நிலவன் பரிறைவ னருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. சு.

இதவெங் குருமுநி திரிகொன் டவயதி
லின்பார் மதியமிழ் துண்டதுவு
மிதமின் றுயர்திர மிடவங் கவிமறை
மிழற்று வொருதலப் பனிப்பினி தீர்த்
ததிவன் முயலக மறவோர் மகளின
தகமோ ருருள்சிறந் தருளியது
நிதவன் பரிறைவ னருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. ரு.

புகழும் புகலியன் விளிவன் டிவடிவு
பூமேற் போட்டசி லேபியனை
யிகழ்வின் றியுயிரொ டெழுவன் றுசெய்தது
மியம்போர் கவினைவிற் பெருங்கதவ
மிருசுந் தாமுட னணையும் படிசெய்த
விறலுஞ் சதகமு முரியார்பா

னிகழ்துங் கவிறைவ னருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. சு.

அழகென் றுமருவி நிமிருங் கழுமல
வறவோன் வழுதிவெவ் சுரநோய்கூன்
கழியும் படிபணி னதுவுங் கனலிடு
கையே டதுகரி யாதெழவே
டிழிதன் புனலதிர் செலவான் பணைகள்பெண்
ணெனவா கழுனரு ளினவிறலு
நிழல்விஞ் சிறையவ னருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. எ.

அகம் பெருகுக வுணியன் டழையவொள்
ளங்கம் பெணுருவங் கொண்டெழுவான்
கனவின் பவருள்ப னினதுங் களிமலி
கடிக்கே செறிந்துள மலுக்கூட்டங்
தனகென் றுமிகுமோ ரொளியுண் ணுழைமொழி
தந்தே யவரொடு சென்றதுவு
நினையன் பிறைவ னருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. அ.

சுடுநீர் றறையிருந் திறுமாப் பொடுகொனஞ்
சுண்டென் னலர்விடு குஞ்சரமன்
பொடுபோற் றிடுவிய னதைதேயற் றலகட
லழிக்கல் லெழுமிதந் திடவேறிக்
கடுவாற் பசுவடங் கினன்மீட் டுமெழுமெய்
காட்டோ ரரசுக டாட்டியழு
நெடுமாட் சியிறைவ னருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. கூ.

சுபசுந் தரர்நினை வுறுவண் ணமுசலி
தொல்லே விழுங்கிய பிள்ளைதனைச்
சபலஞ் சொலுயிரொ டுமிழும் படிசெய்த
தகவும் பெரியகொற் றவன்குடியா
னபயம் பெறுபறை யனையான் டவலியு
மருளு சலப்பெய ரியனையெனு
நிபமொன் றிலிறைவ னருண்மஞ் சேயது
நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. கo

தெய்வம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூவெலாம் போற்றுந் தெய்வம்
பொதுநடி நடிக்குந் தெய்வந்
தேவெலா மேத்துந் தெய்வஞ்
சிவப்பொரு ளெனுமா தெய்வந்
தாவெலாந் தபுக்குந் தெய்வந்
தனிச்சுக மிகைக்குந் தெய்வ
மாவதைப் பழிச்சி மாயா
வயநமாய் வகற்று வேனை. க

இதமொன் றில்லாத் தெய்வ
மியாதினுங் கிளரோர் தெய்வம்
விதரணக் கடலாந் தெய்வம்
விகிர்தம தணவாத் தெய்வ
முதரமுற் றுதியாத் தெய்வ
மொளிவெளி மயமாந் தெய்வ
மதனையே பழிச்சி மாயா
வயநமாய் வகற்று வேனை. உ

மோனமா டுடையார் தெய்வ
மோகத்தார் தெரியாத் தெய்வம்
வானநா டுடையார் தெய்வ
மனதுனைக் கடங்காத் தெய்வ
ஞானமே வடிவாந் தெய்வ
நடுவெளிக் குகனுந் தெய்வ
மானதைப் பழிச்சி மாயா
யயநமாய் வகற்று வேனே. ங.

நாகுமூப் பணையாத் தெய்வ
நசைநனைப் புரந்தா டெய்வம்
பாகினு மினிதாந் தெய்வம்
பரசுமென் ணைசத் தெய்வம்
யோகிகள் குரங்குந் தெய்வ
முகளமன் றுன்றுந் தெய்வ
மாகுமோர் குகனே யேத்தி
யயநமாய் வகற்று வேனே. ச.

ஆமய மடையாத் தெய்வ
மறிவினுக் கறிவாந் தெய்வ
மோமுனைப் பொருளாந் தெய்வ
முயிரினுக் குயிராந் தெய்வம்
பாமரஞ் செகுக்குந் தெய்வம்
பவக்கடல் கடத்துந் தெய்வ
மாமொரு குகனே யேத்தி
யயநமாய் வகற்று வேனே. ஞ.

நனவினர் தெரியாத் தெய்வ
நாதநா தாந்த தெய்வங்

கனவினர் காணுத் தெய்வங்
கருணிலைக் கெட்டாத் தெய்வஞ்
சினமது மணைவாத் தெய்வஞ்
சிவக்கொழுந் தாமா தெய்வ
மெனுமொரு பொருளைப் போற்றி
யிகலிட ரகற்று வேனே. கூ.

அன்பருக் கருளுந் தெய்வ
மளப்பிலா வறிவுத் தெய்வங்
தன்பரி யறியாத் தெய்வஞ்
சகசசித் தாந்த தெய்வ
மின்பரு ளியற்கைத் தெய்வ
மெனைக்கொளும் விழுப்பத் தெய்வ
மென்பதை யிறைஞ்சி யேத்தி
யிகலிட ரகற்று வேனே. எ.

அன்னையா யணைத்தா டெய்வ
மளிவலைப் படுமோர் தெய்வங்
கன்னலி னினிக்குந் தெய்வங்
கருத்தினைக் கவருந் தெய்வ
மென்னுளே யிருக்குந் தெய்வ
மியாதினும் வலதாந் தெய்வங்
தன்னையே யிறைஞ்சி யேத்திச்
சநநமாய் வகற்று வேனே. அ.

என்றுமோர் படித்தாந் தெய்வ
மிரண்டினு மேலாந் தெய்வ
மன்றிலே நடிக்குந் தெய்வம்
வரதசா கரமா தெய்வ

நன்றினு நல்ஞ்சா றெய்வ
நகுமாளிப் பிழம்பாந் தெய்வ
மொன்றையே சூழ்ந்து கண்டென்
னுறுகட்சூ ரகற்று வேனை. கூ.

மாதவர் மகத்தாந் தெய்வ
மறைமுடி வுரைத்தா டெய்வ
மாதர வாமா தெய்வ
மாபத்துக் குதவுவார் தெய்வந்
தீதெலாஞ் சிக்குந் தெய்வந்
திருப்புகழ் தெரித்தான் றெய்வம்
யாதனை யிறைஞ்சி யேத்தி
யாப்பனு ரகற்று வேனை. கo.

ஆ திருப்பா - உகசு.

தன்னையாள் சுவாமி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னு மீன்ற மைந்த ரும்பு லாலு டம்பு மிந்தியமும்
பின்ன வெம்ம னுதி யுட்பி ரானை னுந்தி தால் லாதனுந்
சின்ன மின்மி யொன்றிற் கொன்று சேட தாமவ் வாதனுன்
றன்னை நீத்து முய்பு மோவென் றன்னை யாள்சு வாமியே.

போக காண்ட போக்ய காண்ட. மாப்பிணைப் பொருந்தி மை
லாக மின்மி நிற்ற மாத மேனைச் டெப்பி சோக
மாக மோது காண்ட நீத்த டங்கி லுல லாதனுச்
சாக ரங்க டக்கு மோவென் றன்னை யாள்சு வாமியே. உ:

சூக்க மாம சுத்த மாயை தன்னை மூலத் தொக்கதா
நீக்க மின்றி யுள்ள வாத னீக்கு மாற றிந்திருள்
வீக்கம் வீட வாற்றும் வன்மை வீடு முன்னு ருவிடிற்
றுக்கும் வாதை சிக்கு மோவென் றன்னை யாள்சு வாமியே.

கிரண வாக மஞ்சொல் வண்ணங் கிரண சோமன் போன்ற
கரண தேக முங்கி ளர்ந்த காரி யத்து வக்குவுங் [வோர்
துரும வேரின் றழைவு நேரத் தோன்று தூல தேகமுஞ்
சரத வீடின் றிறுவு மோவென் றன்னை யாள்சு வாமியே.

தூல பூத நாச நீர முஞ்சி மிழ்த்த சூக்கமுங் [துவு
கோல மாறு மோகி னிச்சொற் கொண்ட தும்பொன் விந்
மூல மாகு மொன்றிற் கொன்றி ம்மூலபந்த மெய்ம்மையே
சாலுன் சூக்கின் றிறுவு மோவென் றன்னை யாள்சு வாமியே.

பூத நாச நீரம் போய போது சூக்க யாக்கையா
யோது டம்பொ டேயி ருந்தவ் வற்ற சூக்கந் தன்னிலே
யாத நாச நீரந் தோன்றி யாத வேக்கு ளாதலுன்
சாத வீடின் றிறுவு மோவென் றன்னை யாள்சு வாமியே. சு.

தோன்றும் யாத நாச நீரந் துக்க மாய வூழலு
மான்ற சொற்க மும்பு சிக்க வாகும் பூத சாரமா
மான்றல் கூறு மவ்வி ரண்டு வல்வி லங்கு முன்னருட்
சான்று வீடின் றிறுவு மோவென் றன்னை யாள்சு வாமியே.

பூவி லேயு டம்பி பூந்த போதை யாதொர் தூலமெய்
மேவ லுங்கல் லொத்து விண்ணி லேகி டந்து வீழ்கதிக்
கேவி ளங்கு பூத சார மேற்று மீண்டு திப்பதுந்
தாவில் வீடின் றிறுவு மோவென் றன்னை யாள்சு வாமியே.

சடத்தை நீத்த பின்க ணுவைச் சார்ந்த தேய்ப்ப வாத்துமா
வடுத்து நிற்ப னென்று கார ணுக மம்ப கர்ந்தவா
றுடுக்க மான கனவை யொப்ப வுணர்வு மாறி மறிவதுந்
தடத்த வீடின் மிறவு மோவென் றன்னை யாள்சுவாமியே.

ஓசை யாதி யைந்த கந்தை யுற்ற புத்தி நெஞ்செனைப்
பேசொ னொட்டு மேமெ லிந்த பெற்றி யாரு சூக்கமீ
தேசு ளோர றிந்து நேட வெவ்வ ணைம்பு கழ்க்கவித்
தாச னெனந்தை தெய்வ மேயென் றன்னை யாள்சு வாமியே.

சதாநந்தவுந்தி.

கடவுள் வணக்கம்.

பொருளற் றபொரு ளுமறிவற் சால்புடைப்
பூன்மன் பதைநடுக்கஞ் ணுற்றிதி லென்பயன்
மருமை தரிந்நிலவும் பிறப்பைப்பிய
மன்னின் மீளவு மொர்கமைப் பேபலொரு
கருமை பெறுமிவ் வாலைபெறு மொகை
கழுமிச் சடா ழுக்கமே காடன்மெய்த
தருமந் நிந்த பொருளைபே ரிருளைங்கள்
சந்ப ரூப சதாநந்த வுந்தியே. க.

முன்னை யவினை யாலிந்த ஞான்றுனை
முனைவிற் றடைபா வருப்பா விலம்பக
மென்னு மாசை கவிற்சுடு வாயவ்
வெதி ரறவன்மை யில்லார்கண் ணுற்றிதி
லென்னை யாதுமுன் மிறப்பழம் பாட்டையே
யெடுத்தி யம்பிற் பொதுதே தாவெவன் றெள்ளுகை

தந்து ணுக்கழுக் காறல வோவெங்கள்
சத்ய ஞாந சதாநந்த வுந்தியே. ௨.

உணர்வு ளார்பண்டு வேதாக மங்கள்சொல்
லுண்மை யிற்றென வேவிரித் துள்ளநூ
லுணர்வி வேகந் தணந்தவ ரந்தநூ
லுணர்வு ளாைக் குறித்திவ ருண்மையை
யணைவிக் கண்டதுண் டோவென வேயிகழ்ந்
தறிவி லாமடப் பேதையா நிற்பதுந்
தணிவு ருக்கொடுங் கூரமன் றேவெங்கள்
சத்ய ஞாந சதாநந்த வுந்தியே. ஈ.

நித்த மூர்த்தி தலந்திருத் தீர்த்தமா
னேடி யெய்துநற் புண்ணிய வாளரை
யித்த லத்திடைச் சோம்பு முலாபமு
மேறி னேர்கண் டிவர்க்குநா மேலதா
முத்தி ஞானத் துளாமென் றுயர்த்துதன்
மூட மும்பெரும் பாவமு மாமிருச்
சத்து வக்கரு ணாநிதி யேயெங்கள்
சத்ய ஞாந சதாநந்த வுந்தியே. ச.

நூலி லேவிதித் தும்விர தாதிக
ணேற்கு மாள்வினை கொண்டு ணெடுக்கியிந்
நால மீதுப் தவத்தை யுண்பதே
ஞான மாக்கொண்ட வன்மத்தர் சோக்கியித்
தூலந் தேய விழுத்திடு மாத்துமத்
துரோகத் தாலென்னை யாமிது மூடமே
சாலு மென்ப தகந்தையன் றேவெங்கள்
சத்ய ஞாந சதாநந்த வுந்தியே. ரு.

சுருதி யாகமத் தூணமில் லாமலுஞ்
சுருதி யாதிய விந்தியச் சேட்டைகண்
மருவு மூமலு நல்லினை தூய்ப்பனை
மச்ச * மூன்புகுப் பார்நிர்வி கற்பம்போற்
பெருகுங் காதைகபல் பேசி யிகழ்ந்திடல்
பேர கந்தைபுந் தீமையும் பீழையுந்
தருமெ னத்தெளி யாவெளி யாவெங்கள்
சத்ய ஞாந சதாநந்த வுந்தியே. சு.

ஊன ருந்துவர் சேறருந் தார்நரு
வுண்பர் காயுநெய் யுண்ணர் தமக்குமேற்
கோனி ருந்தகண் கோட நினைப்பர்கீழ்க்
கொண்ட நீசர்கண் கோட நினைத்திடா
ரூன நெஞ்சத்தின் மேர்நிர்வி காரச்சொல்
லோத லென்னடு வென்னடு வீதடத்
தான மென்றகண் மார்க்கமன் றேவெங்கள்
சத்ய ஞாந சதாநந்த வுந்தியே. எ.

பந்த வில்லந் துறந்துனை நாடிமெய்ப்
பாங்கி னிற்குமெய் யன்பனை யிக்கணை
யெந்த ஞான்று மடந்தைமண் ணுடக
மென்னு நச்சொழி யார்கண்டிவ் வாறிணர்
வந்த தேனில் லகத்தின் றறைவடம்
வழுத்த னன்னடை யாளனைப் † பங்கிகழ்
சந்த மொக்குமன் றேதனை நாடெங்கள்
சத்ய ஞாந சதாநந்த வுந்தியே. அ.

---

* ஊ என்னு மிறைச்சிப்பெயர் னகரச்சாரியை பெற்று ஊன் என்றாயது.

† பங்கு = முடவன்.

அந்த நாளின ராஞ்சுரு திப்பொரு
ளாய தோர்ந்தணங் கோட்டினின் றுய்ந்தன
ரிந்த நாளின ரவ்வரு நூலெனு
மேட்டைப் பல்பிர திக்குழு வாக்கியே
வந்த காசுக்கு விற்றுண் ணுழைப்பினின்
மல்கி வாசக ஞானமும் பேசுவார்
சந்த தப்பொருள் காண்பர்கொ லோவிவர்
சத்ய ஞான சதாநந்த வுந்தியே. கூ.

உண்மை நோக்குமிக் கார்நடை யிற்சதா
வொழுகத் தங்களுக் கேலாது போயினும்
வண்மை கொணு நெறிக்கிழுக் கோதியே
மாப்ப வம்பெற வீத்துய்த னன்கெனு
வெண்மை மேவா ரதிர்ப்பரன் றிருவருள்
வீடு பெற்ற வணுமலை நாதனின்
றண்மைத் தேதமுகி லேகுக தெய்வமே
சத்ய ஞான சதாநந்த வுந்தியே. கo

கங்கையணி.

கலிவிருத்தம்.

கங்கையணி வேணியிறை காதலுடன் மாணூர்
துங்கமலி * யர்ச்சனை தொடுத்தகவி யென்னைச்
சங்கிலிப திக்கருள்செய் தானவண நெஞ்சே
பங்கமில் குகேசனெனி பாடிநித மாடே. க.

---

* பெரியபுராணத்தில் தடித்தாட்கொண்ட புராணம் எ - வது செய்யுளில் "அர்ச்சனைபாட் டேயாகும்" என்று வருவது.

ஆடுகிலே யன்பதிலே யாளிறையை நாடிப்
* பாடுகிலே யென்றுரிய பண்ணைவ னறைந்த
பீடுடைய நல்லுரை பிடித்துமன மேமா
வீடுதரு சாமியை வியந்துகவி பாடே. ௨.

பாவபுணி யப்பெரு மருத்தைநல பற்று
லாவியர் களுக்குணை வருத்திமல மாரி
வீவுற விழைத்திடு மருத்துவனே மெய்யாக்
காவுதி யெனப்பரசி டாயுயர் கருத்தே. ௩.

அண்டமது பார்ப்பெனவே தோன்றுமுறை போற்கோள்
கொண்டவொரு சூக்கமிகை கோடலு மதுக்கந்
துண்டுரி யுரிப்பதுபோ னீக்கியுள சூக்க
மண்டுவது மேமாயவுடை யாணைநினை நெஞ்சே. ௪.

அந்தமுறு சாந்தோக்கி யத்தில்வெளி யாமா
பந்தமி லருந்தகோ பாசனையை நேர
வெந்தருபி யுள்ளுறிலே யேசின்மன னேநீ
யந்தநில தன்னிலுடை யாணைநினை யாயே. ௫.

நாமமுரு வென்றஜக லகூதண மகன்றே
சோமமுறு வானினிய வீரமன னேநீ
யேமமதி சத்திதனு மிகூதணம தாமா
சாமியென வுள்ளபொரு டன்னைநினை யாயே. ௬.

---

* இஃது திருவாசகத் திருச்சதகத்தில் ஆடுகின்றிலே என்று தொடங்குந் திருப்பாட்டினுள பொருள். இக்கருத்திற்கிசைய மாணிக்கவாசகரும் பாடி மாரம்பத்தி வினைத்தானெனத் திருவாத ஓர் புராணத் திருவம்பலச்சருக்கத்தில், "வெண்பிறை முடித்தவேணி விண்ணவனன்பினாத பண்பினெனினுஞ் சின்னப் பாடினர்க்கிரங்கும்" என்று வருவதுங்காண்க. அன்றி திருவாவடுத பந்தசுவாமிகளும் முதுகுன்றப்பதிகத்தில் "பாடுவார்க்கரருமெந்தை" என்றருளினர். அணைகிரி நாதர் கந்தரலங்காரம் உட - ல் "முத்தமிழால் வைதாரையுமங்கு வாழவைப்போன்" என்றருளிச் செய்தார். இப்படிக்கிருக்கச் சிலர் பாடுவதிற் பயனென்னவென்றிகழ்ந்துரைப்பர். அஃதறியாமை யும், பொருமையும், எளாமையுமேயென்க.

ஆகமுத லாநுவ லசித்தையறி சித்தா
யூகமிட லுஞ்சக முரித்தெனலு நன்னர்ப்
பாகமி லிரும்பிரதி பந்தமிதை தூறி
யேகவிறை தன்னேமன னெனிஞேதி யென்றும். எ.

சின்னமதி நானரிய தெய்வமதை யெவ்வா
றுன்னுவ தெனத்தளர் வுறுய்சிறிய கண்ணும்
பின்னமற மேவிய பெருந்திகையு நோக்கு
மென்னுமுறை கொண்டுகுக னெந்தையரு ணேடே. அ.

காடுபுகு முன்னிறை கருத்துள்வரி னன்னேனன்
பீடுபெற வாடுநிறை காட்டியொர் பெருத்த
மாடுதரு வானது மதிக்கரிய தீம்பா
லுடோறு மளிக்குமிடி நந்தமன னேயா. கூ.

மெய்யருள் விளக்கமிகு மெய்ப்புக ழுறைந்தோன்
றெய்வமது வோவது சிறந்தபொரு ளத்தை
யையமிற வள்ளியவ ணுக்கெளிய வன்னைக்
கையடைசெய் துய்திநனி காமுறு கருத்தே. கo.

நட்புக்குகந்த நாயகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லும் பொருளு மெனவிரண்டு
தொகைப்ப வுஞ்சம் பற்றியுடம்
பெல்லை யுடைய வுயிரின்கண்
ணெழும்பு மேக நேசவுறழ்
வல்லன் மருவு பாசவுணர்
வாகு மிதுவோ வுத்திதரு

நல்ல வுறழ்வை யீதியெங்க
ணட்புக் குகந்த நாயகமே. ௧.

இரண்டு பிரபஞ் சமுநீக்கி
யேற்ற நாமென் றெழுஞ்செருக்கா
லரந்தை யிகந்த வநாதிமுத்த
ரைகும் பிரம மாவனைத்
திரங்கொ ளுயிர்கான் மதிக்கவருஞ்
சிவசம வாதப் பசுஞாந
நரன்சேர் மோக்க மடைவதுண்டோ
நட்புக் குகந்த நாயகமே. ௨.

ஆசி நற்பி ரகாசமுமாய்
யரிய பரப்பி ரகாசமுமாய்ப்
பேசு மெந்தப் பொருளினையும்
பிறங்க வினிது விளக்கிடுமுன்
னைசில் வன்மைப் பதிஞாந
மென்ப தொன்றே முத்திதரு
நாச மிலைதக் கோடாயெங்க
ணட்புக் குகந்த நாயகமே. ௩.

பூத வெளிக்கும் வெளியாகப்
புகலு மூலப் பகுதிவெளிக்
கேது வாய * கலிவெளிக்கண்
ணிருந்து மதிற்சீ ரூதுதன்மே
லோது முபய மாயைகளி
லெளிக்கப் பான்மின் னிறைவனினை
நாத நிலைமே லேற்றலெந்நா
ணட்புக் குகந்த நாயகமே. ௪.

* இக்கலிவெளிப்ப டருதிக்கு மேற்பட்ட அப்பாலிருத்த கைலாசம்.

கலையி னெளிக்கு மேலெனவே
கழறு மசுத்த மாயையொளி
நிலையை நிகழ்வித் தையினெளியை
நீத்த மேல்வின் துவினெளியிற்
றலையா யிருந்தைதந் தொழிலையருந்
தலைவ வுனதே தார் சுத்தநிலை
நலமெ தெளியேயற் குறுவிதந்தா
ணட்புக் குகந்த நாயகமே. நு.

தாவி லருணந் திச்சிவனூல்
சாற்று மாறெவ் வணமாகப்
பாவிக் கினுமவ் வணமருளும்
பரிவுத் தேதநீ யாகவினுன்
மேவிக் கலவச் சூழ்ப்வணம்
வினாவி லருள்செய் தாண்டிகொளா
நாவிற் பெரியா சேத்துமெங்க
ணட்புக் குகந்த நாயகமே. சூ.

எண்ண மறியாத் தெய்வமொன்றை
யாவ னெருவன் பரசிடனஃ
தெண்ணி யருள்வ தின்றுநீன
யிரங்கி நீயே யறிந்தருள்வை
கண்ணு மெனையுங் கருத்தடைத்துக்
காவா காவா கநகமன்றை
நண்ணு மடியா நிறைவவெங்க
ணட்புக் குகந்த நாயகமே. எ.

தந்தை தாயர் பசுப்பார்ப்பார்
சமய குருவென் பவைகளையுட்

சிந்தை பொருந்த வணங்கிலவை
தெரிந்தப் பலனைக் கொடாவஞன
மந்த மகன்ற வனதருளே
யளிக்கு மந்தப் பேரருளென்
வந்த லறுக்க வராதுகொலோ
நட்புக் குகந்த நாயகமே. அ.

கள்ளற் களித்த வன்னபலன்
கனிவ யோகிக் களித்தபலற்
கெள்ளத் தனையு மொவாததன்ன
வேனைக் கடவுள் பூசனைநல்
லுள்ளக் கடவு ளாயியங்கு
முனது பூசைக் கொவாதுண்மை
நள்ளிப் பொருளே யருளெங்க
ணட்புக் குகந்த நாயகமே. கூ.

என்ன துடலா ராவிபொரு
ளென்னு மொருமூன் றேற்றுரிய
நின்ன லடியார் பணியருணன்
னிலைவீ டென்னு மூன்றினையுந்
தன்ன மறவே தமியேற்குத்
தருவா யருண கிரிப்பெரியா
னன்னர்ப் பதியே குகதேவே
நட்புக் குகந்த நாயகமே. ௧0

சர்வபூரண சயம்பு.

பதினன்தசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கரணி தன்னிலருள் பெற்று ஞானகதி
சாரு யிர்க்குரிய யாக்கையாச்

சாற்று பொம்மையி லுயர்ந்த சுத்தசிவ
தத்து வக்கயிறு கட்டிபுன்
புரண சத்திநனி யாட்டு விக்குமிது
புறம தத்தவர்க ளுணர்விலே
பொருள்ப டிந்தகைமை யாவதோ வொருவர்
புகறி னுஞ்சிவியி னுழையுமோ
கரண நந்தலி லிருந்து சுத்தசிவ
கரண முற்றவர்க ளறிவரொன்
கவலை யத்தனையு நூறி முத்தியருள்
காட்டு நல்லகிரு பாளுவே
சரண மென்பவரை யாத ரித்தருள்செய்
சாமி யென்பர்குரு சாமியே
சரத மாயதக ராள யத்திலவிர்
சர்வ பூரண சயம்புவே. க.

மேதை கூறுமுப நிடத மத்தனையின்
மேல தாமதர்வ சிகையெனு
மிழற்ற வுள்ளவொரு சுருதி யானதயன்
விண்டு ருத்திரர் வலாரியா
வோதெ லாருமிக னுற்ப விக்கிறவ
ரொண்மை யிந்திரிய முழுமையு
மோங்கு பூதமொடு தோன்று கின்றன
வரத்த காரணமு மதனையே
வாதை யேதுமிலி யாய்ப்ப டைத்தவனு
மல்க வெண்ணுவனு முளனவன்
வழுவு றுஞ்சநக முறுவ தின்றென
வழுத்து மக்கடவு ளீயலோ
காதை யேபுனை விடுத்த மார்க்கிகளுஞ்
சாம வேதமுடி வடைவரோ

சுத்த மாயதத்த ராலை யத்திலவிர்
சர்வ பூரண சயம்புவே. ௨.

மூன்று மூர்த்திகளி லொருவ னென்றுமொழி
கின்ற ருத்திரருக் குள்ளுளே
முக்ய * சத்துவமும் வெளியிற் ருமதமு
முண்ட கந்தனனுக் குள்ளுளே
யூன்று தாமதமும் வெளியிற் சத்துவமு
மோதி மம்பறவை யூருவோற்
குபய பக்கமு மிராஜ தத்திறனு
முண்டெ னத்தெளி வுரைத்திடு
மான்ற சைவமுறை ஞான சங்கிதையி
னணியி ரண்டெனுமத் யாயமு
மரிய காந்தமுறைச் சூத சங்கிதையி
னறைத ரும்பரனிரு ஞானநேர்
தான்றெ ரிக்கிடனு மோது மித்தையுனர்
தரமி லார்திரிபு சொல்வரோ
சுத்த மாயதத்த ராலை யத்திலவிர்
சர்வ பூரண சயம்புவே. ௩.

மாம யக்கிருளில் சுத்த மாயைதனை
வடிவு கொண்டதிரு மேனியா
மருவி நின்றரிய வாக மத்தறையு
மாறு முக்கரண வழியிலே
காமமுற்றவினை யுயிர்கள் கண்ணில்விளை
கருமங் கட்கியைய விருவினைக்
கதியை யவ்வுயிர் களுக்கு கைத்தினிய
கருணை கூர்ந்துபத முத்தியை

---

* இதனைப்பற்றித் தோலுவத்தியத்திரிய மென்னும் பதிகத்தை எ.க.ம் கவிகளுங்கூடும்.

யீமி டற்கடவு ளென்ற ருத்திரனே
யிணையி றன்னுடைய வாணையி
லென்றும் வைத்துமுத லாயி ருக்குமுனே
யீர மற்றமத மார்க்கிக
டாம தித்துநனி யுய்வ ரோவெனைரு
தஞ்ச மானகுக தெய்வமே
சரத மாயதக ராலை யத்திலவிர்
சர்வ பூரண சயம்புவே. ச.

சார்பி ழந்தமிடி யாது லர்க்குரிய
சாலை யாதிநிமிர் கன்னிகா
தாக வந்தமுள வெட்டொ டெட்டில்விரி
தருமை மென்றபசு புண்ணியத்
தேர்பி னின்றுமர ணுல யப்பணிகொ
வென்ப தைக்கடியு மூர்த்திமே
லிடுகை யிங்கரிய மாதி பல்வகை
யியம்பு நல்லசிவ புண்யமே
சீர்சி றந்தவிய னென்மர் கற்றுவலர்
செப்ப வந்தவிரு புண்யமுஞ்
செய்பு நல்லவர்க ளுள்ளு ணர்ந்துபசை
சேரு மாறுபுரி யெந்தைநின்
சார்பெ னக்கநிய மாயி னுய்யும்வகை
தரணி மேலுமுள தோசாலாய்
சரத மாயதக ராலை யத்திலவிர்
சர்வ பூரணசயம்புவே. து.

ஆசை கொண்டுபய புண்ணி யங்களை
யயர்ந்த வர்க்கரிய சொற்கமு

மாசு கன்றழு நிராசை கொண்டவை
யயர்ந்த வர்க்கரிய ஞானமே
பேசுகின்றவருண் மேனி கொண்டெழு
பிராணி யுங்கருணை சாலுமப்
பிரானின் முன்னிலையில் வீடு மீயுமொரு
பெரிய தெய்வமெனு மெந்தைநீ
மாசு கொண்டதமி யேன ரந்தைவலி
மாற்றி நல்லருள் கொடாவிடின்
மனது ணிற்குநசை யெந்த வாறகலு
மறுபி றப்பினை யெணுந்தாறுந்
தாச னெஞ்சது [illegible]
டந்தி [illegible]
சரத மாயுகர [illegible]
சர்வ பூரண [illegible] சுஉ

[illegible]
வாய்மை யெவ்வுயி ரிடத்திலும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சரத மாயதக ராலய த்திலவிர்
சர்வ பூரண சயம்புவே. எ.

குலந்த வந்திரு மிகுந்த கல்விகள்
குறித்தெ ழும்பிடு செருக்கினைக்
கொல்ல டக்கமு முயர்ந்த வர்க்கினிமை
கொள்ளு நட்புமுப சாரமு
மலந்த பொய்த்தபெரி யார்த்தெ ழுந்தெருளு
மந்த மாகநுதி செய்தலு
மன்பு வந்தனை செயற்கு ரித்துளனை
யஞ்ச லிப்பதுமெய் யாகமஞ்
சொலுந்து றைப்படி யுனைப்ப ழிச்சியொரு
சோர்வ றப்புசித மாற்றலுஞ்
சொந்த மாகவுள வுத்த மர்க்குரிய
சுபம ளித்தருளும் வள்ளலே
சலஞ்சி காமனதை யுள்ள வெற்குனது
தஞ்ச மன்றிவழி யுள்ளதோ
சரத மாயதக ராலய த்திலவிர்
சர்வ பூரண சயம்புவே. அ.

வத மற்றமுறை பன்னு தாபரம
தென்னு மூர்த்தியொடு சங்கம
மென்ற தாசையு மஞ்ச லித்துரய
னேற்க வேண்டுமென லுஞ்சிவத்
தாத ரச்சுகுண தாச னைச்சிறிது
மவம திக்கிலஞன் மூர்த்தியி
னதிவ னைக்கமும் வியர்த்த மாமெனலு
மாக மச்சமத மாகலிற்

மேரு தக்கழு தகந்தை யாலினிய
தொண்ட னைத்தமை நிகர்த்தராச்
சூழி னைத்திவரு மூர்த்தி யும்பழைய
சுத்த வன்கலென வாமெனச்
சாத முற்றவ ருணர்ந்து கொள்வரிது
தாவு ளோர்மனதி லேறுமோ
சரத மாயதக ராள யத்திலிவிர்
சர்வ பூரண சயம்புவே. ௧.

இதய மென்றவிடத் தாத்து மாவையரு
ளிறைவ னூன்மெயுனை கொண்டரு
திகழு மாயையி னுபாதி போக்கியெவ
சோச றத்தெரிவ ரோவவர்க்
குதய மாகுமதி யின்ப மென்றுமறை
யுளைசெய் தாருளொரு சங்கர
ரோட வர்க்கினிய சீட ரும்பொரு
ளுனைத்த தேதற்றமுள தன்றென
முதிபர் மெச்சுமொரு நீல கண்டரநன்
முன்னு நல்லிதய வெளியிலே
முதல ருட்சிவனை யறித லின்பென
மொழிந்த தேதுணிவ தாமதைச்
சதத முந்தமிய னுறவெ னையருண
சயில நாதர்பிர மண்யமே
சரத மாயதக ராள யத்திலிவிர்
சர்வ பூரண சயம்புவே. ௨.

ப ர ம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னுலகர் மண்ணுலகர் கிம்புருடர் பம்பதியர்
பூதமொய் யியக்கர்முனைவர்
கின்னரர் பசாசர்பிசி தாசகர் நிசாசரர்
கிளம்புரகர் சித்தர்கருடர்
மின்னழகு விஞ்சையர்வின் வாசிக ளெனத்தொகை
விளம்பரிய பல்லுயிர்களின்
மன்னவ வெனக்கருள் வழங்கியரு ளெங்குநிறை
மாகருணை கொண்டபரமே. க.

சிந்துழி யநந்தநதி சேருவது போற்பல
திறப்படு மதத்தவர்களு
மந்தவொரு தேவையடை வாரென வதிர்ப்பதமை
யாதுநதி யாவுமொருபேர்
சொந்தமுற வுள்ளதுபோ லெசிறுமை யென்பன
துறந்தசிவ ஞானியெனும்வாய்
வந்தவர் சிவத்தையடை வாரெனை யணைத்தருள்செய்
றுவிலா ததனை யீயுந் தடையில்லை சுலப நெஞ்சே. ஏ.

நானென தென்ப தியந் நவுயிர்ச் சுதந்தரங்கா
னினவி துளநாண் மட்டு மெம்பிரா னருளு மேவா
தனமாம் *பிறப்பும் வீவு மொழிவதன் றித்தா னுவா
னுனென தலைவன் றுறதி நசைகொளு நடையு மன்றே.

தன்னது சுதந்த ரத்தைத் தலைவனுக் கீந்து விட்டா [ல்லை
லென்னது நானென் றொன்றை யெண்ணுவார் மனமு மி
யுன்னுமம் மனமில் லாத †உடலினுக் கசைவு மில்லை
பன்னவோ வாக்கு மில்லை பகவனைப் படரு நெஞ்சே. கூ.

வழுத்துமந் நிலையைத் தானே மாவருண் மவுந மென்னுப்
பழுத்தமெய்யறிஞர்சொல்வார்பரிவுடைநெஞ்சேயத்தை
விழுத்தவர்சூழுமெம்மான்வியன்றிருப்புகழ்ப்பாமூத்தோன்
வழுக்கறத் துதித்த தேவ மணிதனைப் படர்ந்து கூடே. கூ.

---

* இவ்வனம், ஆணவமல பரிபாகத்திற்காரகத் தோற்றமும், கன்மமல பரிபாகத்திற்காக வொடுக் கமுமென மாறிமாறிச் செய்யப்படுகிற பரமேசர சக்தியின் திருவைத்தொழில்களேயே "பிறப்பும் வீவுமொழிவதன்று" என்றுனவறிக.

† உடலினுக்கசைவுமில்லை யென்றதுகொண்டு சிவன்முத்தராகிய ஞானசம்பந்தராதி பெரி யோர் எப்படியுலகிற் சஞ்சரித்தனரென்று சங்கையெழுமாயின் அது, சந்திரமௌலிப்பதிகம் (உ-ம்), ஞாலப்பதிகம் (உ-ம்) விளக்கியுள்ளபடி பெத்தருக்கும் பரமுத்தருக்கு நடுத்தரமாயுள்ள சிவன்முத் தர் பிரபஞ்சத்தோடு கூடியுங் கூடாமலுமாகச் சஞ்சரிப்பர். அவ்வனம் பரிட்டையி லசைவற்றுமிருப தென்று தீர்த்துக்கொள்க.

சிவத்திரு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவத்திரு வடைவதற் குளவொரு மூவகைச்
சிவருண் ணின்றுள சகசமல
மவித்தையா விருதிருக் கசுத்தி நிரோதமோ
ஹம்பட லம்பசு நீஹாரங்
கவித்திடு பந்தன மூர்ச்சைமூ லஞ்சயங்
களங்கம் வியாகா தந்தமசா
*சவத்திடு பசுத்துவ மிருத்தியு மிகவல
மென்றுள பேர்பெறு மெனுமரனூல். க.

அம்மல மின்னமுங் கிணைபா வஞ்சட
மாச்சா தருமல மஞ்ஞாநம்
வெம்மைசெய் பாசமா வரணமெ னும்பெயர்
மேவுமி தியர காதி சொலுந்
தொம்முறு கருவி ளுழைபே றியரிஷ்டு
சோஷ மராகம் விஷாதமதம்
விம்மித மோஹம்வை சித்திரி மெனுமெழு
விதஞ்செயு மென்றரு ணூல்சொலுமே. உ.

மனமுதல் வளங்களை நோக்கி மகிழ்ந்தினி
மகிமைசை யெமக்கென குறையெனவே
நினைவுற லரிஷம்வி ணுமன வேதனை
நீட்சியி னுனை வெடுக்காதே
வினையுடம் புலரநிற் பதுசோ ஷங்கய
மேவற நூற்கே ளாச்செவியோர்க்
கனையரன் பொருள்கவர் நினைவென நிற்ப
தராகமென் றறியென தளிமனமே. ஈ.

---

* எவ்வம் என்பது எவமென இடைக்குறை விகாரமாயிற்று. எவ்வம் = துன்பம்.

புல்லிய மகளிரைப் பிரிந்தபோ தழுதுளம்
புண்படு நிலைமை விஷாதம்விலை
மெல்லிய லாவரைப் புவியர சியலென
வேமதித் திவரினும் வியன்பெறுன்
றில்லிய னத்துணிதன் மதங்குரு சொனெறி
யிகந்ததி பாதகஞ் செயறுனே
யல்லகண் டழுதவு மோஹமென் றறியெனை
யருட்குக னருளினை நினைமனமே. ஊ.

தன்மைமுன் னிலையொடு படர்க்கையு மாப்பரன்
றுன்புரி யிருவினைப் பலனளிப்பா
னென்மதி மறந்திவ ணுன்செய்தென் பிறர்செய்தா
னெனநினைந் தழிதரு மிழிமதியே
நன்மையி லாதவை சித்தரிய மாமிது
நலிவுறு மேமலொரு விணையுமிலை
புன்மைசான் மனதொடு வாக்கு மடங்கிடும்
பொறியுறு நன்மன மேயறியே. ரு.

மோகினி யென்றவொர் காரண மாயையின்
முனைக்கு மராகதத் துவமாதி
மாகிருத் தியவொரு மலத்துவித் தேசனை
மருவிய தின்றதி னுலரிஷ
மாகிய குணழுத லேழுமின் றவர்களுக்
கசலமு மலத்தவ ரவையடைந்த
தேதிக ளாகலி னவர்க்கந்த வெழுவகைத்
தீழ்ப்புழு வதுமுள வெணுமருணூல். சு.

மாளிகை தொறுமுள மாயிரு ளனைத்துமோர்
மரபென வாவது போல்வடிவிற்

காளித மனவுயிர் தோறு மிருந்துமே
கஞ்சொல வுள்ளது முயிர்ப்போதக்
கூளிய தாக விராயது மூவகை
கூறிடு மறிவொடு தொழிலிச்சை
மீளிய லாமறைத் துளது முனைசான
விடமல மென்றறி திடமனமே. ள.

அகிலவந் தரவிருள் பிறவுருக் காட்டிடா
தாவரித் திடினுமிமார் தனைக்காட்டு
முகிலினு மிருண்டபொல் லாமல மிருவகை
முதலியுந் தனையுமே காட்டாதீ
தகவுமந் தரம்வரை யாத்துமன் பசுவல
தமல பரமெனவிங் காகாஞ
லிகலிதை வென்றினி வாழுவென் னீசனை
யேகரு தாயுணர் வார்மனமே. அ.

வயிந்தவ மாயையைக் காரண வுடம்பென
மருவொரு மலத்தரா டிருமலத்தார்க்
குயர்ந்தவல் லிருளெனச் செறிவதின் றுரங்குறைந்
துள்ளவிவ் வாணவஞ் சகலருக்கே
நயந்தரு மோக்கப ரியந்தமு மதியிரு
ளாக விருந்திடு மிதையுடையா
ரியங்கொரு முதுக்குறை வுடையவ ராவதின்
றெனவுணர்ந் திறைவனை நினைமனமே. கூ.

சொற்றிய திரிமலச் சகலருக் கேயருள்
சுரந்து கலாதித் துவநாமம்
பெற்றுள மாயையின் மலத்தினைக் கூட்டியோர்
பெருங்கிரி யாசத்தி யாலழுக்காய்ப்

பற்றிய மலத்தினைத் துடைத்தருள் வானருட்
பதியவ னெயருணை சலப்பீபர்
நற்றவர்க் கருளிய குகனவன் றன்னையெந்
நாளுமென் னறுமன மேநினையே. ௧0.

ஆறுதிருப்பா - ௬0௯.

மலைமகள்.

எஸ்.சீ.கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மலைமகளுக் கிடப்பாக மீந்தே னீந்த
வண்மைநுவல் சிந்தியநூல் கூறு மாறு
தொலைவிலுயிர்க் குளகருமை மலந்தா னதி
சொவிசையாச் சகசமதா யறிவி லாதாய்
நிலையிகந்த *பிரவாகா நாதி போன்ற
நீருளதாய்த் திரிகரணத் தானு மேறி
யுலைவுபடு மிருவினையா யவித்தைச் சார்பா
யுளதெனவே யோர்திருகற் படரு நெஞ்சே. ௧.

மனம்வாக்குக் காயமெனு மூன்றி னையும்
வருவிருப்பு வெறுப்பினுழி வினைவா மித்தக்
கனமாய கன்மம தநாதி யென்னக்
கழறுநிலை லதெனினும் மலமில் லாது
வினையுடம்பு மில்லையந்த டைப்பில் லாது
வினையாமம் மலமுமிலை யதனு லீது
முனைகுறிக்கொ ணைதபி ஜாங்கு ரப்பீபர்
மொழிஞாய மாகுமென மேவார்த் தெஞ்சே. ௨.

---

* இதுபோற் றொணகமும் வரும்.

அந்தவொரு பீஜாங்குரத்து ஞாய
மாவதுவித் திடமரமு மரத்தே வித்துந்
தொந்தமதா யொன்றினுக்கொன் றேறது வாகச்
சொலக்கிடக்கு முறையான்முன் னேது கூவற்
கெந்தவகை யானுமிசை யாத தென்று
மிதுபோலக் கருமமல வுடம்பு ஞாயத்
தந்தரமு மென்றுமறிந் தறிவாம் விண்ணு
யாருமெம்மா ணடிகளையுண் ணினையாய் நெஞ்சே. 1.

ஆணவத்தாற் சிமிழ்ப்புண்ட சீவ போத
மாவதுவுங் காரணயாக் கையுமா தி
காணுழுங்கா லவற்றுடனுங் கூடா நிற்குங்
கருமமலஞ் சகசமெனல் கட்டே யாகுந்
தூணுழுள்ள வீதுபிரார்த் துவமா காம்பஞ்
சொச்சவினைச் சஞ்சிதம தெனவே நின்று
நீணிலமோர் மூன்றனுளும் விவித ரூப
நிலையளித்தே யலக்குமொரு கொடிதா மன்றே. 2.

தொண்டாய பிராரத்தம் புசிக்கத் தெய்வஞ்
சூக்குமந்தூ லங்கொடுத்து நுகருங் காலத்
தண்டாய விதுப்பினுற் புதுவா காம்ய
மோங்கியது பின்வருசஞ் சிதமா நிற்கப்
பண்டேபோற் பிராரத்த மாக *மேவும்
பணித்தவடை வாகமுத்தி வாயு மக்கோ

---

* இப்படி மேவு முறைமைபால் இருவினையாகிய ஆகாமியத்தைத் தூலகன்மமென்றும், இருவினைப்பயனகிய புண்ணியபாவங்களெனுஞ் சஞ்சிதத்தைச் சூக்குமகன்மமென்றும், புண்ணியபாவங்கட்குப் பலனகவருகின்ற இன்பத்துன்பங்களெனும் பிராரத்துவத்தை அதிகூக்கும கன்மமென்றுஞ் சற்றேர் கழறுப.

கொண்டிழி லலைக்குமிது பைங்கூழ் செய்வான்
கொள்கைபோற்றிறலிலவில்லாத் தொடர்பாமன்னே.

சகசருமமலத்தாலே யாதி யென்னுத்
தலையிலுள வாத்துமிகம் பவுதீ கந்தை
விகமாகுந் தாபத்தி ரயமீமார் மூன்று
மேவுமவை விளக்கினையு மதுக்கண் மண்ணை
சகமிருக முதலாய வுயிர்க ளாலே
காணுறுநொவ் வேயாதி யாத்மீ கங்கா
ஆகமின்ன லிடிகளாற் கொடிய தாப
முறலாதி பௌதிகமென் றோர்ந்து நெஞ்சே. ௬

உதிப்பிறப்பு நிரயத்தான் வருமா தாப
முயர்வாய வாதிதைவி கங்கா ணிந்த
விதிக்குரிய வநாதிகர்மஞ் சங்கா ரத்தே
வினிவில்லா முதற்றநுவா மாயை யின்பா
லொதுக்கமென நின்றுசிட்டி யாங்கா லத்தே
யுறுபுத்தி யினையடைந்து கார்ய மாமீ
தெதற்குமுத லாங்கடவு ளாணை யாலே
யிழைத்தவர்கட் டவறுது மருவு மன்னே. ௭

சிவசுதந் தரப்போத விரிவாம் புத்தி
சேர்ந்தகர்ம வயப்பட்டே சுலவு வங்ஙன்
கூவுமந்தப் போதமன மோகத் தாலே
கூட்டிடுமே கோடகவா காமி யத்தைச்
சாவுடைய பிறவிச்சூ ரறுப்போ ரத்தைச்
சாராது காப்பரது சாரா மற்றுன்
னாவுடைய வமிர்தசிவ மநுவை யுள்ளே
சேராது கொண்டுநிற்பா ரோர்ந்து நெஞ்சே. ஆ.

அம்மநுத்தான் வறுத்தபரற் போலே யந்த
வாகாமி யத்தையற வுருற்று மேனைக்
கொம்மையுறு கருமமெலாம் பதிஞா னத்தாற்
குன்றிவிடுங் கன்மமலஞ் சகச மாமே
லெம்மையற வொருவுவதெவ் வாறே யென்று
லெழிலரிசி தனின்முளையொத் திருக்கு மத்தைத்
தம்மையெனும் பதியருடான் புயக்கு மென்னைச்
சரதமுடி வுனர்ந்தருளே யூழ்த்தாய் நெஞ்சே. கூ.

விஞ்ஞாந கலரொழிய வேனைர்க் கெல்லா
மேவியவிக் கருமத்தான் விளையா நின்ற
வஞ்ஞாந வினைப்பயனைச் சிவனே யூட்டி
யருள்வனெனச் சொயம்பாக மந்தா ரூதும்
பொய்ஞ்ஞாந நூறியவ னருட்பே றெய்தப்
புகழ்த்தாயு மானவனுற் *றுதிபெற் றுணு
மெய்ஞ்ஞாநப் புகழ்க்கவிசொன் னனு மாய
மிக்கோனி னடிகளையே நினையாய் நெஞ்சே. கo.

இறை.

கலிவிருத்தம்.

சீர்சி றந்ததிரு மகளது திருவு
நீர்சி றந்தகலை மகளது நிழலு
நார்சி றந்தவுனை வுனியவொர் நயனென்
றேர்சி றந்தவர ரறிவதொ னிறையே. க.

சுழலு றழ்ந்துநுளை சொன்னில நசையா
லுழலு நெஞ்சிலொரு தெய்வமு முளதோ

* இஃது "கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன வெந்தையருணடி யிருக்குரா லெந்தரனோ" எனத்துதித்த கண்ணி.

கழறு மென்புனசை கண்டன முறநீ
யெழில ணுந்திமிசை யென்றெனை ரிறையே. உ.

காசு கண்டவர்கள் களிகொள லனவுன்
றேசு கண்டுகளி செறிநல மெதுநா
ளோசு கந்தருமோ ருவமையி னுணர்வே
யேசு கொண்டவெனை யுடையவிவா ரிறையே. ங.

நீக்க மின்றுவிரி நின்மல நிலையா
மோக்கம் வேண்டியிவ ணுனுமென் முனமு
மூக்க மின்றியளு ரோங்குற வுழலுள்
ளேக்க மென்றிரியு மெங்குக விறையே. ச.

வாடு கின்றவெனுண் மன்னிரு டனக்கோர்
கேடு வந்திரித லென்றலை கிளத்தா
வீடு தந்தருள லென்றிருரு விதியா
லீடு கண்டறைய வின்றவி ரிறையே. ஞ.

பெரிய விப்புடவி பேயரி யெனவே
தெரிய மெய்க்கருணை சேரொரு விணநீ
புரிவ தெப்பொழுது பேசுதி பொருரு
ரிரிய வெற்கருளு மீரவு ளிறையே. ட.

ஓகை முத்திநல மேடிடு மொருநான்
கூகை யொத்தநிலை நூறிரு குதலில்
தோகை யிற்புலிபொ லாமொளி தொடலென்
றீகை மிக்குடைய ணுதர விறையே. ண.

கான்ற தப்பெனவு கருசைகள் கெடுவா
னுன்ற வர்க்குரிய வருணை விரிவாத்

தோன்ற லெப்பொழுது சொலியரு ளெனையிங்
கின்ற வப்பனென வருகுக விறையே. அ.

வேட்டன் மிக்குடைய வினையுடை யெனைநீ
காட்ட லெப்பொழுது கதியருள் விரிவா
ணாட்ட லெப்பொழுது கதையடி யவரா
மீட்ட நத்துபொதி நடையுடை யிறையே. கூ.

தருக்கு நற்புகழ்கள் சாற்றிய வுயிரை
யிருக்க வைத்தகணி லேத்துபொ ரெனையும்
பொருக்கெ னத்திருகி யேற்றுதி புகரா
வெருக்கு புட்கரப ராக்ரம விறையே. கo.

சொல்லுவேன்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லுவேனீ தியெல்லாஞ்சொனவணநடக்கமாட்டேன்
கல்லினும் வலிய நெஞ்சக் கள்வனு ளுள்ளேன் பின்னு
நல்லவன் வாழ்க்கைப் பேறு நணுகிட விலையே யென்று
புல்லிய குணப்பேய் போலப் புலம்பவு மிருக்கின்றேனை.

இருக்கிறனெதற்காகப்பேயென்னவெம்பிரானுன்னன்பைப்
பெருக்குவாருறவைக்கர்ட்டிப்பேதமையல்லாம்வீட்டிக்
கருக்குகை புகுதா வண்ணங் காப்பதுன் கடனுமன்றே
வெருக்கொளவெழீ இதோக்கும்விமலசிற்சுகநக்கண்ணே.

கண்ணிறைக் காணுக் காட்சி காண்வருங் கால மொன்று
நண்ணிலு ளேயன் பாவ நசைக்கலி தாண்டி மீக்கொண்
டெண்ணிலு லளக்கவொண்ணுவெந்தைநின் றிறமுய்வேன்
றண்ணிரு ருடையா யந்தத் தருணந்தா னென்றே கூறு.

கூறருங் கருணை யானீ கூறிய நிலையி னில்லா
வூறுமீன் ஞான மெல்லா மோதியிங் குழல்வ தென்னே
பேறுளார்நகைப்பாரந்தோபெரியைநீயெனதுள்ளேயாய்
சேறுறு நிலையில் வைத்தாள் விமலமெய்ஞ்ஞானவாழ்வே.

வாழ்வினைக் குணமேயல்லான்மற்றதுங்காணினீண்டுத்
தாழ்வினைக் கிருப்பதில்லாந் தாயருள்காணுதான்றே
யூழ்வினை யகைக்கு மெந்தா யுனைத்தவம் வருட்பூமிக்கண்
சூழ்தரு மெனைநீ வைத்தாற் சொலுநிரப் பேது மின்றே.

இன்றயா மலரு மெம்மா னெனுங்குகப் பிரான்மேயன்
றென்றுரால் களைந்த நன்றி யாவையு மறவே னின்னும்
வன்றிவா விரவு மில்லா வானிலைக் கண்ணி யென்னைப்
பொன்றிடாவண்ணமேபொன்றப்புரிவையேற்றனியேனுய்வேன்

உய்திபெற் றிபங்க ளோரா றுரியவ ருரைஞர் நந்தி
மெய்திகழ் தமிழ்ஞான வீண மெய்யனி ராமன் றாய
வைதிக சுகர் பேத *வாமதே வாதி நல்லோர்க்
கைதிகழ் நீக்கைசெய்தாயாளருளைநீக்கொள்ளாதே.

கொள்ளுதியெனதேவுகாவாற்குணைக்கினுங் குணையா தாய்
யுள்ளினு நீகான் வாரா யுபயமு மில்லாக் கண்ணி [ந்தே
பொள்ளெனப்பிழம்பாய்வந்தியாளிருமுன்றரமேதாகுந்
தெள்ளருட் கடலே ஞானச்செல்வமேசிறியேன்றேட்டே.

தேட்கடுப் பேறி னுனுந் தீட்டுமை விழியார் நோக்கு
வாட்கடுப் பேறி னுனு மாற்றமுண் டிருட்டு மூலக்

---

* வாமதேவமுனிவர்க்குச் சுப்பிரமண்யக் குருவாயிற்றென்பதைச் சைவபுராணங் கைலாயசங் கிதை ௭ - வது அத்தியாயங் கூறும். வாமதேவருடைய சிஷ்யர்களான அகத்தியர், புலத்தியர், புல ர், தொ எது நால்வருஞ் சைவஞானிகளே.

கோட்கடுப் பேறில் யாது கொண்டுமாற் றிடலா முற்கிங்
காட்படுமருந்தியத்தையவிக்குமென் றறிந்தேதனைந்தாய்.

எந்தையே யெளியே னுன்னே டிருக்குமா றருணைப் பே
கந்தரா ளீந்த தூய வாக்கமே வேண்டு மத்தை [ரோற்
யந்தமீ றில்லா நீதா னளிப்பதெஞ் ஞான்றிரு வென்றென்
சிந்தைதான்கலுழ்ந்தேதாவாதோர்தீர்வையாவிளக்கிச்சொல்லே.

தேரிலூரினும்.

கலிநிலைத்துறை.

தேரி லூரினுங் கானடை கொள்ளினுந் தெளிவாற்
பீரி னல்லக மாகவு மவ்வகப் பீடச்
சாரி லுன்னைய ணைந்தவ னுகவுந் தமியே
னூரி யத்திதாட லங்கிடு மாறரு ளரசே. க.

அண்ட கோடிக ளனைத்தையுந் தன்னுடை யாற்றல்
கொண்ட கர்ப்பமுள் வைத்தது விதுவெனக் கூறுங்
கண்ட மில்விபு வாயிருந் துளபடி காக்கும்
பண்ட மாமுன தருளெனைப் பரிந்துகொ ளாதே தா. உ.

நினது நீக்கமி னின்மல பூரண சித்தா
மனக சத்திசு தந்தர வினருக் கருளுந்
தனது தன்மையி லொருரு வென்றுள வதுதா
னெனது நெஞ்சறிந் தருள்புரி யாதுகொ லெந்தாய். கூ.

உன்சு தந்தர வொளியுறழ் வசைவினி னுள்ள
வென்சு தந்தர முன்னருள் வயப்பட லென்றிரு
புன்சு தந்தர வுயிர்க்கருள் புரிவிழுப் பொருளை
யென்சு தந்தர வுயிர்த்துணை யேயரு ளிறையே. சு.

மன்ப தைக்கொரு மன்னுள தன்னவெவ் வுயிர்க்கு
மன்பு டைத்தனி யிறையென வுள்ளவுன் ஞான
மென்ப தைப்பற வாற்றிடற் குன்றனக் கென்னு
மென்பு ரப்பதி யம்புதி யென்குக தேவே. ரு.

ஆத்து மாக்குழு நிமித்தம தாயுள கருணைக்
கூத்து நல்லருட் கூத்தென வுன்றனைக் குரங்கும்
பாத்தி யச்சிறி யேனையு மாடிடப் பணுமே
லூத்தை மேனியு ளென்செயு மாறென யுரையே. சு.

ஆட்டுக் காரனு நீயுன லன்ப ரவாவு
மாட்டுக் காரனு நீநிலை பேறென வழுத்தோர்
வீட்டுக் காரனு நீமற வாதுனை விரும்பென்
கூட்டுக் காரனு நீயெனைக் கோடியென் குகனே. எ.

உன்னைத் தஞ்சமென் றுள்கிடு வாருயும் பாக்கா
லன்னைக் கன்னைய னுவள வொள்ளரு ளாக்கந்
தன்னைத் தந்திடு மென்னுயர் தற்கொடை வள்ளா
லென்னைக் கொண்டொரு தன்னையி கைத்திட விசையே.

வித்தை யேதுமி லாதமும் மலமருள் விரிவாஞ்
சத்தி லாச்சல மாநச மில்லொரு சாங்குச்
சித்த மானதை யீந்தெனை யாளுதி சிறியேன்
கத்த னேகரு ணைநிதி யேகுக கண்ணே. கூ.

சந்த தக்கலி யாணகு ணங்களைச் சார்ந்தே த
யெந்த ஞான்றுமு னின்னரு ளேற்றுய விணையில்
சந்த மாலிக டெரித்தவன் றனக்குவ கையுடன்
றந்த பேறெனக் குந்தரு வாய்நிரஞ் சனனே. கூ.

உலகநோக்கினர்.

வஞ்சிவிருத்தம்.

உலக நோக்கிறை ருன்னை யே
விலகி நோக்கல்போன் மெய்ம்மையா
லுலக நோக்குரு துன்னை யே
யிலகி நோக்குவ தென்றை யே. க.

உன்னைப் புல்லியின் புற்றிடார்
மீன்னைப் புல்லியுண் மெச்சல்போ
லென்னைக் கொள்ளுனை யேகலந்
தின்னிக்கென் றுன லென்றை யே. உ.

காய மெய்யெனக் காமுறுந்
தீப நெஞ்சது தீந்துசெய்
பேயர் பிச்சுளர் பெற்றிரா
னெயு மாறரு ளெந்தை யே. ங.

நாக வள்ளுமந் நயனமு
மேக மானதை யியையவே
பாக நானுமார் பரிசுறற்
கேக னெயெனு ளிலகியாள். ச.

உணரு மாதனு முடலுமே
புணரு நேரொனப் புரிவினை
லுணரு நானுனை மறப்பினைற்
புணரு மாறருள் புரிவையே. ஞ.

அவனி யின்மல மாதனிற்
சிவனி யுள்ளதொத் தேசிகாக்

கவன நாலுனைக் காதலாச்
சிவணு மாறருள் செய்யையே ய. சு.

மதுவுண் மாமலர் மந்திபோன்
மதுர மாமது மாந்திநா
னதுல வம்மல ரல்கவோர்
புதுமை யீதியென் பொன்னையே ய. எ.

இடரி லென்குக னேயுனை
டுடற லப்பத மொப்பவே
தொடரு நானனி தேயுமா
படரு நீயருள் பாலியே ய. அ.

உயிர்க ளெத்துமோ ரொப்பிலா
யயிருந் தாலுவு மன்னவே
செயிரின் றுன்னெடு சேர்ந்துநா
னயிலு மின்பளி யாயரோ. சக.

அகியு மங்கியு மன்னவே
திகழு மத்வைத சித்தியீ
புகழு னுங்கவிப் புந்தியான்
பகவ னேகிரு பாலவே. கo.

பரஞ்சுடர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமுடிப் புலவர் புகழ்ந்திடு காஞ்சிப்
புராணமெக் கலைக்குமென் றாக்கி

லோமெனுஞ் சொருபஞ் சதாசிவன் செவ்வேட்
குரியதென் றணிவிழுச் *சுருதி
யேமுறை யிடுமென் றோர்ந்திட விளக்கு
மியம்புமவ் வோச்சொரு பந்தான்
றோமுயிர்க் கருள வுளதல வோவென்
றோத்திரங் கொள்பரஞ் சுடரோ. க.

தமனியன் றிருமா லுருத்திர னீசன்
சதாசிவ னுயவம் மும்மந்
தமமறு விந்து நாதமாம் வியட்டி
சாற்றிடு தாரமுள் ளடங்க
வமலவோஞ் சமட்டி தாரக மாயு
மதீதம தாயுநின் றிடுமுன்
விமலவாழ் விந்த வாக்கையா டினையு
மேவுமோ சொல்பரஞ் சுடரோ. உ.

எளிதென விழைக்குங் காரணங் குறித்தீத
யிலீலையென் றுரண மியம்பு
மளிகாணின் றெழிலோ னைந்தணுட் கடையா
மறுக்கிர கந்தமி யேற்காங்
களிதர விந்த வுடலொடு முறுமோ
கழறுதி யென்னுயிர்த் துணையாங்
தெளிவுடைப் பரம சுகமெனு மறிவுச்
செல்வமே சிவபரஞ் சுடரோ. ங.

உதயனின் சுநிதி தனின்மைப் பூக்க
ளொன்றலர்ந் தொன்றுசாம் பிடல்போற்

---

* இந்தச் சுருதி "சுப்ரமண்யோம்" என வெழுக்குஞ் சாமவேதசுரம். கடவல்லி, மாண்டூக்யம், அதர்வசிரசு, அதர்வசிகையெனு முபநிடதங்களினும் ஆதித்யபுராணத்தினும் பிரணவசொரூபம் பரமசிவனென் றுரைக்கப்படும்.

சததமு முனக்கோர் விகிர்தமில் லாதுன்
சந்நிதி யருட்டொழி லாலே
யிதமுடை யுயிர்க ளுதித்திருந் தொடுங்கு
மென்பதி னன்விடு தலையாம்
பதபதிப் பிறவி யொடுமுறு மோவென்
படரறுத் திடுபரஞ் சுடரே. ச.

நின்னையே கருதி யுருகிடா வென்பாழ்
நெஞ்சருக் கோவுழப் பிரும்போ
வன்னக நைக்கல் லோகருங் கல்லோ
வச்சிர மோதுவர்ச் சிலையோ
கன்னக மோகற் கிட்டமோ வயிரக்
கட்டையோ பாறையோ வென்னப்
பன்னிட வைமையா வன்மைகாட் டிடுமேற்
பார்ப்பமே லுனைப்பரஞ் சுடரே. ரு.

புகர்முக மோவன் கடவுளே கறங்கோ
புனற்சுழல் கீடமோ குயவன்
றிகிரியோ காற்றோ டெண்டிசைக் கடலின்
சிகர மோவெனப் புகலப்
பகர்முகத் தீதசென் றலைந்துழி தருமென்
பாழ்த்தநெஞ் சோவுனை நேடும்
விகிர்தமில் கருணை யாற்றடுத் தாள்வி
ரைவிலாய் வென்பரஞ் சுடரே. சு.

மனமெனுங் கருவி வாய்த்தநா டொடுத்து
மகிடை வாழ்நையிற் பழகிக்
கனமரு ளடைந்த நெஞ்சினுக் கேது
கழுமினு முனையது பவத்தை

நினைவுறு பாச வாசனை நீத்து
நிற்பது மிகவரி தன்றே
வனகநின் னருட்பே றண்ணிடி னதுவீ
வாமதை யளிபரஞ் சுடரே. எ.

ஓர்பொழு தேதாங்கு முயர்நினை வான
தேர்பொழு தின்மையா மாயி
னேர்படு ஞான நிட்டையி லெவணை
நிலைத்துணைக் கூடிடு வேனீ
சீர்பணி யாளத் திருவுளஞ் செய்யாய்
சிதம்பரப் பெயரிய வெம்மா
னுர்பணித் துதித்த வோர்குக தேதேவ
ஞானமா யகிர்பரஞ் சுடரே. அ.

நிதனமும் பிறப்புங் கொண்டுழி தருநா
ளின்னது பூரணப் பேறு
சததமு மிந்த வுடம்பொடு முறநின்
றனியருட் செயலிழைக் காதேற்
சிதடரை யினமுங் கருமபா சத்தாற்
சிமிழ்ப்புற வாவதே வென்னப்
பதறிரு லவணை மிலையென நீதான்
பணிக்கொரு தேதாபரஞ் சுடரே. கூ.

உன்னையு மறியே னுன்னையே யறிந்தா
ருறவையு மறிகிலே னுறவோர்
மன்னிட னதையு மறிகிலே னறிந்த
மைந்தர்சொல் வசனமு மறியே
னென்னரா னிருக்க வைப்பையே லெளியே
னென்செய மாட்டுவே னெங்கோ

லென்னுமெய் யருணைப் பேருளா னகக்க
ணிருந்தசன் மயபரஞ் சுடரே. கo.

மதியுங்கருளும்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மதியுங் கருளுந் தெரியா வணைமுன்
மறையும் படிகருணை
நிதியென் றுளவெம் பெருமான் வரநீ
நினைநின் செயல்விடினென்
மதியென் றுளவுன் பெயரோ டிடமே
மடநெஞ் சுடைமருளா
மிதியென் றுநவின் றிடுவே னதனை
லிறைநண் புறுமனனே. க.

உயிர்நன் பெனனும் படியென் புடையன்
பொடுநின் றிடுமனனே
செயிர்கொண் டசடஞ் சலமென் றறையுஞ்
சிறுபுன் மையினையுரு
துயர்வண் டிடமென் றிணிலெங் குநிறைந்
தொளிரொங் கடவுளையே
யயர்வின் றுனலின் றுவுமொண் டலமென்
பதினின் றெணுதியரோ. உ.

தேசுக் குகனைக் காணற் கெனமெய்த்
தீரத் தொடுகருதாக்
காசுற் றலையிற் சிர்கெட் டழிதுர்க்
காமக் கழுதையெனப்

பாசத் தனைகெட் டோடக் கணுநற்
பாகொத் தவுனையெ
லேசுற் றவசைக் கீருக் குணுழைத்
தேதசப் படுமனனே. ங.

பூசிக் குநர்கட் கேகட் டுடைநற்
பொருளைக் கடியுறவே
யீசிற் பரமெய்த் தேதவைக் கொளவெற்
கிசையப் பணும்வகைநீ
பாசத் தொடிழைக் காதற் பநசைப்
படுகர்க் குழிவிழிநேர்
காசுக் குமதிக் கேகனிப் புவியிற்
கருதிக் கொளுமனனே. ச.

மறலென் பவனின் செயன்மங் குறவென்
வழிவந் துளமனனே
விறனந் திழிவுஞ் சொலுமென் பகையும்
வினையுங் தெருளுடைநீ
யுறலின் றுயவென் றிடிலெம் பரனென்
றுளகந் தனையுளுளே
பிறழும் படியுந் தியினின் றசைவும்
பிசகுஞ் சிகநினையே. ரு.

வீடென் றநலன் காணும் படிமன்
மிசையன் புடையலா
மீடொன் றிலிருந் தேதவென் றுளவென்
னிறைவன் றனவிதியாய்
நேடுந் தொழில்கொண் டேடநின் றிடவென்
னினவென் றுளவொருநீ

பாடின் றுவெறுஞ் சோர்வுந் துயிலும்
பனைன் மேறுபறைமே ய. கூ.

லகிற் சபலத் தொழில்பொய்த் துளரா
ருளமோ வவர்வறிமே த
யலைபற் பினைப் பனல்கட் டுைாயீ
தறநீ யருளிறையா
யிலகொப் பிலறக் குகனுத் தியுரு
திழியா தரமுறினுன்
சாலிழுக் குகளுற் றவியத் தடையோ
துணிவா யறைமனமே ன. ள.

நிபென் னேசன் ருனென் றேறன்
னேயஞ் செயுமெனநீ
தாயின் பீயென் ரைன் பாருந்
தூவின் டலைவணேமே ய
காயம் பாழுன் னேமஞ் சோடுங்
காணும் படிபுரியா
தாய்வம் பிருஞ் சாரின் மாதுன்
பூருந் தெரிமனமே ன. அ.

னலிட் டமுடைப் பிரமப் பொருளா
டெனையொட் டிடவிருமே ன
கனிட் டையினத் துவிதத் தொழின்
கருதிச் செலும்வனாரா
னினதெட் டுநடைக் குனையொட் டவிடே
னென்றிட் டுழிதருவே
னெனினத் தனுரைப் புரியிற் றொடர்வே
னிதுகட் டமிமனமே ன. கூ.

தெருளுற் றுயருத் தியினைப் பெறலே
திருமும் படர்மனமே
யருணைப் பெயரற் கிதயப் பொருளா
யணியும் பரினிறையா
யருணட் புடையர்க் கருடற் பரமா
யவிமொம் பரமனமே
யிருளற் றுநினைத் திடுபொற் பிலரா
னினனும் பதரமியே. ௧0.

காங்கேயம்.

கலிநிலைத்துறை.

காங்கேய மெனவெங்கு மொளிர்கந்த
குகீதவ கருதென்னே
நீங்காத வுயிருன்னை மருவுங்க
ரணமாக நிதம்வையா
னங்காத வணம்வந்து நலவின்பு
தரவேயு னிருதஞ்சிலே
யாங்காண கொளவேண்டு மனனென்ற
வெனதாண வுனகொண்டீரா. ௯.

சரதஞ்சொ லவிருந்த மறைசந்த
தமிறைஞ்சு சவிமன்றிலே
பரதஞ்செ யுமந்த வருளின்ற
லவவெங்கள் பதியென்றுளா
யிரவும்ப கலுமென்ற னுயிருன்ற
னவிரும்பு கிறதந்தவா
றுரனன்பு புரிகிஞ்சின் மனனென்ற
வெனதாண வுனகொண்டீரா. ௨0.

கிலமொன்று மிலகண்ட பரகந்த
வருண்மஞ்சு கிளர்சம்புமேவ
கலகஞ்செ யெமன்வன்சி லதர்வந்து
விடுமுன்சு கமடைந்தூதை
டிலருங்க திவிரும்பு யிரைவந்து
கொளவன்ற னிருகஞ்சிலே
மலரன்பு புரிகிஞ்சின் மனனென்ற
வெனதாண மறைகொண்டீரா. ஈ.

அளவஞ்ச னமிலம்ப ரமெனும்பெ
ரியதேவ வளிகொண்டுநீ
தளென்ற லெவன்முன்பு சொனதுங்க
நெறிகூடு தலையிங்நீன
யெளியன்சி ரமமின்றி முடியும்ப
டியபேத விருகஞ்சிலே
வளரன்பு புரிகிஞ்சின் மனனென்ற
வெனதாண மறைகொண்டீரா. சு.

தன்போட வளிகொண்டு தொழுதாண்டர்
முதலென்று சொலுமெந்தையே
யென்போலி நினைவன்சி யறிகின்ற
திலையேலு மெனதன்பையே
நன்காக வுனியென்ற னுயிரின்பு
பெறுமாறு நகைவிஞ்சுநீ
பன்போடு வரவேண்டு மனனென்ற
வெனதாண வறைகொண்டீரா. ஞ.

வியனை சுகளான நடராஜ
மகதேவ விபுவென்றவாண்

மயமேவ மகமேதவ வெனதாவி
யுனைமேவ மயல்கொண்டதா
னயமாயவ் வணமாள விதுகேர
மருளாமு னலநெஞ்சிலே
யுயராணை கொளவேண்டு மனமென்ற
வெனதாண வுனைகொண்டீரா. சு.

தொழுநார்ர் குறைவிட நடமாடு
குகமேதவ சுகமுன்னியே
யழுமேமழை யினதாவி நினைமேவ
வெனைமேயவி யதிதுன்பமே
யெழுமாறு செயநீயு மிகமோன
மடையாம லினிநெஞ்சிலே
முழுநீழல் கொளவேண்டு மனமென்ற
வெனதாண மொழிகொண்டீரா. எ.

பதியாய குருராய நடராய
வழுபாலர் பயசுண்ணல்போ
னிதமேய முடனேவு னவிடாது
நினைநேசர் நிஜவின்பமே
யிதமேவு மடைவார்க ளதனுலென்
னுடைநாத னிடர்யாவுமீண்
டதமாக வருளீதி மனையே
வெனதாண வறைகொண்டீரா. அ.

சருவேச பரமேச மகமேதவ
குகமேதவ தகைவென்பதே
பெருமேகழை யுளுமாறு புரியாது
விடினுவி பினும்வையுநீ

கருமாளை யதும்வேதை தருமாயி
டையனது தரமென்னையா
மருளாடு மருளீதி மனைய
வெனதாண வறைகொண்டரோ. கூ.

நாளைய மொடுசந்த தமிறைஞ்சு
பரமேச நலநின்னேய
தோனுத னெனநெஞ்சு ணினிகொண்டின்
னநுபூதி சொனவன்பனு
லாலவ னவெழுந்த செயுளின்கண்
ணுளபேறெ னணுவங்கொளாத்
தானுக வருள்கிஞ்சின் மனனென்ற
வெனையாளார் தையகொண்டரோ. கo.

வேதா.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இந்துவதி கிடைக்கடவட் குபதேசஞ்
செய்தகுரு விருங்கோ லத்தைப்
பந்துரமார் திருக்காட்டா வூரகத்து
ரோமனென்பான் பரிந்து நோக்க
வந்துதரி சநந்தந்த பெருங்கருணை
யென்னையுமோர் வழியன் பாக்கிச்
சந்ததவின் பூட்டாதா நான்வணங்கும்
பெரியநிரந் தரவே தாவே. கூ.

பூசுரப்பிர் மேந்திரற்கு மையநித்ய
நாதனுக்கும் புகழ்த்தா ளாளத்

தேசுடைய சொன்னகுத்த லெடிகடையாம்
வசுமந்தன் சேசர் கோற்கும்
பேசருமா வினன்குடிக்க ணைநுக்கிரகஞ்
செய்தவருட் பெருக்கந் தானந்
தாசனென வென்னையுமிங் கெண்ணுதோ
நான்வணங்குந் தனிவே தாவே. உ.

உதிப்பிருக்கை வளர்கைதிரிந் திடல்குறுக
னசித்தலென வுரைக்கு மாறு
விதப்படுவி காரமொழிந் திருக்குநினைச்
சிவணுதம் மிகையா மாறு
மதிக்கவுள வுடலுடையேன் வாழ்வதெவ்வா
றுன்றனைப்பேழ் மருவா தானை
வெதிர்க்குமுயிர்க் குத்தகையோர் விடுவார்கொ
ணுன்வணங்கும் வியன்வே தாவே. கூ.

கண்ணெதிராம் விடயத்தீ தகருத்தழுந்து
வதுபோலக் கடவு ளாமுன்
கண்ணழுந்தி லெந்தவுயிர் புரியறுத்தின்
பெய்தாதக் கருத்தை நாடிய
னண்ணுவது மெஞ்ஞான்றே பசிதாகஞ்
சோகமுட னவையார் மோக
மண்ணுசரா மரணமெனுஞ் சுடர்மியற
வுய்வதென்றே வருள்வே தாவே. சு.

எங்களுடை யாக்கமதற் குரியபொரு
ளின்னுடைய விணையே சில்லாத்
துங்கவித யப்பேழைக் கண்ணுளதஃ
தெய்தாதேற் சுகவாழ் வோங்கற்

கெங்கிடனுண் டாகுமந்த விரும்பேழை
யெனதன்புத் திறவு கோற்கீன்
டங்குலவத் திறக்காது மிருப்பதுண்டோ
நான்வணங்கு மருள்வே தாவே. ரு.

இன்னிதயப் பெரும்பேழைக் கென்னதன்புத்
திறவுகோ லியையா தாயி
னன்னருற வியையவனை நறுங்கருமா
னின்னையன்றிங் ஙகர்மீ துண்டோ
பன்னுதியப் படிவனையுந் தொழிற்காய
கூலிதரும் பவுள்சு மில்லா
வென்னெளிமை யறிந்துதவு வாரிநுனர்
நான்வணங்கு மிடைவே தாவே. சு.

மெய்யிதயப் பேழைதிறந் தரும்பொருளை
யேற்றுனும் விருதாப் புத்தி
செய்தழிக்கா தோம்பியநு பவிக்குமுயர்
புத்தியையுந் திடமா யிந்தீத
யுத்தியென நீபணித்தா லன்றுநா
னுய்புநிலை யுண்டா மத்தைப்
பொய்புடையே னேற்பதெந்த ஞான்றுமோ
நான்வணங்கும் பொருள்வே தாவே. எ.

இவ்வுகத்தின் மனுப்பதடி யென்னையன்றிப்
பிறிதாருவ ரிருப்ப தாக
வெவ்விதத்துஞ் சொலவிசையா தாலுனு
முனதருள்வாழ் வினையே முன்னுங்
கவ்வுடைமை யொன்றிதுநா ளெய்தியதா
லுய்திபெற்றுக் களிப்பே னென்னைச்

செவ்விதினுண் மகிழ்கின்றேறன் றிருவுளத்தி
லெப்படியோ தெருள்சேவ தாவே. அ.

நலிவிலருட் சித்தாந்த மரத்திலிலை
கொய்சேவேனு நனைகொய் சேவேனு
கலிகையலர் கொய்சேவேனு விளவடுவைக்
கொய்சேவேனு காய்கொய் சேவேனு
பலிதமுள பழத்தினேய கொய்சேவேனு
வருளாலப் பழம்வாய்த் தானும்
பொலிவுகண்டு மகிழ்சேவேனு கனியவண்டு
மகிழ்சேவேனு புகல்சேவ தாவே. கூ.

பொருணையமும் பதநயமும் பொலியவரும்
புகழ்ப்பாக்கள் பொழிந்த வெம்மா
னருணகிரி தனைச்சும்மா விருத்தியவொர்
புலத்தினையு மமரு மாறீண்
டருணலநல் குதியடிய ரருந்திருசேவ
பெருங்குகனே யமல யோகத்
தெருணகையே யிருள்பிளக்கும் பருமணியே
நான்வணங்குஞ் சிவசேவ தாவே. கo.

மாணிக்கவாசகர்.

கலிவிருத்தம்.

மாணிக்க வாசகர் சேபாற்றிசொல் லகவலிற்
சேகாணிற்கு மாயையின் வாதியைக் குறைகுயின்
ருணட்பு மார்க்கமி தாமெனக் காட்டிய
மாணத்திதள் ளாறெற்கும் வாய்த்ததுன் னருளே. க.

சரியையின் முசருங் கிரியையி னன்பரும்
பரியுடை யோகவம் பாக்யரு மேனிலை
யரியசித் தருமெனை யாண்டரு டேவவுன்
பெரியசித் தானறும் பேறுறு பவமோ. உ.

சகவுடைச் சைவபு ராண*வொண் சங்கிதை
துகளுடைச் செம்புற ழாத்துமன் றாச்சிவ
விகதநற் பூசையின் மேற்பொரு ளாவனென்
றிகலறப் பேசுமவ் வாறரு ளிறையே. ங.

†சண்டள னுயினுஞ் சிவவெனச் சாற்றிடும்
பண்டமு ளானெனி னவவெடு பறைகுக
வொண்டர வேபவ னுடனுறை குகவென
‡முண்டக மோதிய முதமெனக் கிலையோ. ச.

சோதனை மேலெழிற் சொன்னநற் புந்தம
தாதலொத் தேதயெனை யல்லகண் டநிமிரும்
பேதகத் தாற்பரிட் சிக்கினும் பிறகருண்
மோதம தாமெனச் சூழ்வதென் முடிவே. ரு.

மாமையில் காமமும் வெகுளியு மயக்கமு
மாமொரு மூவகை யாசகன் றுனதருட்
சேமனஞ் செய்குநர்க் கூழிய மிழைப்பினுந்
தேதமுதம் வாய்க்குமன் றேபர சிவமே. கூ.

---

* ஒண்சங்கிதை=ஞானசங்கிதை உ-ம் அத்தியாயம். செம்புபோன்றவன் ஆன்மாவென்று சித்தாந்தநூல்கள் அறைவதைத்தானே இப்புராணமு மொப்புகின்றதென்பது கருத்து. ஆயின், செம்பிற் களிம்புபோல ஆணவமலமும், செம்பினுற்றம்போலக் கன்மமலமும், செம்பிற் செம்மைபோல மாயாமலமு முடையவன் ஆன்மனெனப் பொருள்விரித்துக் கொள்க.

† சண்டானன் சண்டனெனக் குறுக்கும்வழி குறுக்கல் விகாரம்.

‡ முண்டகம்=அதர்வணவேத முண்ட கோபநிடதம்.

மிழற்றுமுக் காசெனும் வேட்கையு முவட்டலு
மிழுக்குறு மாக்கையை யேணுயி னெனக்கொளுங்
கொழிப்புனை கூறிடு மயக்கமுங் கூடினர்
விழுத்திரு மேவலெவ் வாறருள் விளைவே. எ.

மாழைமிகாள் ளாதமெய் வாலுறழ் வோர்நெடும்
பீழைமிகாள் ளாதநின் பேறடை வார்வெறுங்
கோழையி லுலருட் கோலமி லென்னுற
மேழைக ளேதுசெப் வாரரு ளிறையே. அ.

அழகின வாயபெண் ணுசையி லேநிதம்
பழகினர் போலருட் பாங்கினின் றுடனாரு
கிழமையற் கியுமார் கேண்மைகொண் டாளுதி
நிழன்மலி மீக்குக னேயரு ணிதியே. கூ.

வில்லிபுத் தூர்ப்பெய ராழ்வனின் வீறிறக்
கல்வியி லில்வென்று காதளித் தாணுடை
நல்லருட் பாப்பொரு ளேயரு ணையக
வல்லவை மாய்த்துயு மாறனக் கருளே. கo.

ஆ திருப்பா - எoஉ.

அறிவேன்.

கலிநிலைத்துறை.

தேசிக மன்றி லேநித நின்று தேயாது
பாசிக ளின்ப மேமிகாள வென்றன் பாலாடு
மாசில கண்ட தேதிவெ னுமென்றன் வாலீச
ஞாற வென்கண் மேவுவ தென்றோ வறியேனே. க.

கோளறு நெஞ்ச மேகிள ரன்பர் குறைபோயெந்
நாளுந லின்ப மேமிகாள வென்றின் னடமாடு

காளுடை யெங்கு மாநிறை யென்றன் சருவேச
ளுளுடை யென்கண் மேவுவ தென்றோ வறியேனே. உ.

தோலுமெ யும்பு மேமதை நரம்புந் துவர்நீருங்
காலுடன் முண்ட மாயபொய் யங்கங் கழிவாமுன்
காலுட னெஞ்சு மோய்வுற வொண்செங் கதிரோனன்
பாலுளு மென்கண் மேவுவ தென்றோ வறியேனே. ங.

மருளுடை நெஞ்ச மதுகொடி யம்பென் மறையாவுந்
தெருளுடை யின்சொல் லெனநனி கொண்டோர்சிவ மேவ
வருதிய மன்பா வெனவுரை தந்தாண் மதிநாத
னருளுட னென்கண் மருவுவ தென்றோ வறியேனே. ச.

எளிமையு மின்றி யிருமையு மின்றி யிடையாகிப்
புளிஞரொ னைந்து பெயர்பொருபுன்கண்பொலிநோயெல்
களிகொள வென்று நிதநினை கின்ற கதிரோச
னளியுட னென்கண் மருவுவ தென்றோ வறியேனே. ஞ.

வேர்மல நீங்க வேவினை நீங்கும் வினையேகப்
பேர்விய நீங்கு மேமய நீங்கப் பிணியாய
சூர்விடு மாண்டின் பாமென வோங்கெந் துறையீச
னர்மன மார்ந்தென் னுடனுளனான்றென்றறியேனே. ட.

மானல நச்சா வினவி னைப்பேய் மதிபோல
வீணைசை யைப்பே ழாகம தித்தே விழுவினின்
கோணல கைத்தே வாவுளி கைத்தாள் குகதேவ
ணுமை துற்றே மேவுவ தெக்கா லறியேனே. எ.

தவநிலை கட்கு நவநிலை கட்குந் தலையாமோர்
சிவநிலை புக்கின் னழுதுனை நச்சுஞ் சிறியேனின்

பவநிலை யெற்றும் விறலுடை யத்தன் பரமேச
னவகிலை பற்று தணவுவ தெக்கா லறியேனே. அ.

பாசமி லுசி லாயது மூரிப் படிமீதா
ரூசலி லாம லேயுறல் போலென் னுழல்போத
நாசம தாய்மா தாரக மாக நடுவீச
ணுசற வேயென் னுடனே நாளை தறியேனே. கூ.

பிசியில தீதம் பெறவரு ளாலெம் பெருமான்மே
லுசிதம தாகும் புகழ்சொன நாநன் குடையானின்
சுசியுள மேலன் றெளிரிய தூய்வின் சுடர்சோதி
யசிபத மேவுவன் றணைவதெந் நாளோ வறியேனே. கo.

வியோமபிரான்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரிமுக னிழைத்துள சிசுவதைப் பாதகம்
பாற்றிய தையபுடை யாவினை வருளாம்
பெரியவ ளெவனவர் சுதனெவ னேனைய
பிராணிக டொறுமிருந் தசைப்பவ னேவன்
பரிவுட னெனக்கருள் புரிகுது மென்றருட்
பறைபகர்ந் துளவவ னேயென வுணர்ன்
கரிசற வணைத்தருள் பகுக்குதி யிருதய
கமலசிற் பரமவி யோமபி ரானே. க.

மனக்குசை பூட்டிய விந்தியக் குதிரைகள்
வாகுபொ ருந்திடத் தொடுத்தொரு புத்தி
யெனப்படுஞ் சாரதி விடயம தாந்தடத்
திடைநடத் திடுமுடற் றேரினி லுள்ளா

ருணைக்கரு திடலரி தாகுமந் நேர்க்கெனை
யொருசிறி தேதனுமொட் டாமலுன் முகமாங்
கனத்தட மேனடத் தாயென திருதய
கமலசிற் பரமவி யோமபி ராமே. உ.

பாற்கடற் பிறந்ததந் வந்திரி தனையுடற்
படைத்துளர் யாவரு மருத்துவ ரைக
ளிவற்கமுன் னேர்ந்தது போன்மலப் பிணியின
மெவ்வரு மாமருத் துவனெனு முன்றன்,
பாற்கனி வாமொரு தையையினை யேற்றுயும்
பாங்குள ராகலி னஞ்ருடை யேனைக்
காற்கடி யேனும்வி டாதளி யிருதய
கமலசிற் பரமவி யோமபி ராமே. ங.

பயக்கடற் பிறந்துள வரம்பையர் தோளணை
பரிவினைக் கருதிடா தமுதினைக் கருதி
நயப்படைந் தனர்சுரர் தைத்திய ரவர்நல
நாடிநன் கிழந்தன ரதுநிகர்த் தறிஞர்
துயர்ச்சகம் வேண்டுரு தருட்சுகம் வேண்டுவர்
சூக்கமி லாதமற் றவர்சக முகப்பர்
கயக்கதி கருதினைக் காத்தரு ளிருதய
கமலசிற் பரமவி யோமபி ராமே. ச.

பற்றுழி வாதுவல் வாசநா கூடியமுநற்
பரவுணர் வாம்பர ஞானமு மடங்கி
நிற்றலென் றேறுதிடு முண்மன நாசமு
நிலைத்தவர் மீண்டுதி யாவென வோத்துச்
சொற்றவா ருருள ரோவவ ரோநினைச்
சேர்வற வடைபவ ரிதைபறை யாளி

கற்றநான் சேரவு மருளென திருதய
கமலசிற் பரமவி யோமபி ராசன. ரு.

யாதொரு பொருளினை யநுசரித் திருப்பது
மியாதொரு நினைவினுக் கேதுவா யுளதும்
யாதது வெதொடர் வாசனை யாமது
வேநல தூய்மையு மலிநமு மென்ரு
மேதமி றாயது வீட்டுநிட் டையதா
மேசு மலிநம துதிப்பிறப் பாகுங்
காதலித் துளநல தீதியென் னிருதய
கமலசிற் பரமவி யோமபி ராசன. கா.

பிராணனி னசைவொடு வாசனை மலிநமும்
பீஜம தாமதின் முளைத்திடு சித்த
மராகவ ணைக்கம தாமிதை யெசர்மறை
யதிர்த்திடு முறைமைபீ ஜாங்குர மென்ரும்
பராவிய விரண்டினி லொன்றவிந் திடுமெனிற்
படித்திடு மந்தவி ரண்டுமென் றறியென்
காளமெ லாமறுத் தருள்புரி யிருதய
கமலசிற் பரமவி யோமபி ராசன. எ.

அகமன நாசந முருவழு மருவழு
மாமவை தமசொடி ராசத நசித்த
புகழுடை ஞானியி னிடத்துள வருவெனப்
புகலொரு நாசமற் றொன்றுவி தேக
சுகனிடத் திலிங்கவு டம்பொடுங் கிடுகையிற்
றாயசத் துளைசித் திடலிதை ஞான
ககனெனு நீயெளி யேற்களி யிருதய
கமலசிற் பரமவி யோமபி ராசன. அ.

மனச்சுழ லெவணம டங்குமென் றடிக்கடி
மகிமிசை வினவுவ ரறிந்துயு மாறு
பனிச்சமு சாரம தாந்தரு வினுக்கொரு
பருத்தவே ராமனந் தலைப்படு போழ்தை
சனிக்கவொ ணாத்தடை புரிகென வாரணஞ்
சாற்றுழுங் கையுமறி வேனின தருளங்
கனிச்சுவை நுகர்ந்துய வருள்கவெ னிருதய
கமலசிற் பரமவி யோமபி ராமே. கூ.

ஒள்ளிய வெயிற்றினை யெயிறுகொ டேகடித்,
தொண்டுக ளாக்கிட லுறுப்பினை யுறுப்பாற்
கிள்ளிய லந்தலை யயர்வது போன்முனங்
கிளத்திய மனத்தினை மனங்கொடு தடுக்குந்
தெள்ளிய மதியினர் பெறுநல மிவனையுஞ்
சேரவொ ரருள்புரி திருப்புக ழெம்மான்
கள்ளிறத் துதித்தகு கேசவென் னிருதய
கமலசிற் பரமவி யோமபி ராமே. கூ.

பொன்னவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னவையானருளாலேபுறஞ்செலுநெஞ்சையுள்ளிமி
மன்னிடப் பூரக மாக்கி மறுத்துவி டத்திடு காறுந்
தன்னிடம் வைப்பது தானே தனியகக் கும்பக மாமீ
தன்னரு மோனமெய் யோகி லுறுகணி லாச்சிவ யோகே.

கும்பக மாயதை நீக்கிக் குணமொடு விட்டவன் மீட்டு
மம்பக மோவுற வாங்கு மளவுமி ருந்சு வாபஞ்

சம்புறக் கும்பக மாகுஞ் சாற்றிதி லாதவர்க் கோங்குட்
கும்பக மானது மாற்றக் கூடுவ தன்றடி யானே. உ.

பாண்டிலி லாடிடு கூத்தன் பண்பென வெத்தொழிற்போது
மாண்டவன் ஞாபகந் தானை யப்புறக் கும்பக மாகு
மீண்டிதை யுள்ளொ லாரு *மிருவினை யொப்புள ராகி
மாண்டுதி யாநிலை கூடி மாணுடை மாக்கதி சேர்வார். ஊ.

இயலுமுட் கும்பக மாமே லிருதயக் கண்ணிருந் தேநன்
றுயர்பிர மத்துளைக் காறு மோடுவ தாயுயிர்க் காலை
யியக்குவ தாயிரு நாடிக் கிடையினி லுள்ளவொர் தீபு
மயர்வற வுள்ளமை வாகு மங்ஙனம் வாயுவு மோயும். ச.

வாயுவ யப்படு மாயின் வளருயிர்க் குட்டணை மோங்குங்
காயத னுணவ வாதி கரிசறு சீரண மாகு
மேயவ தால்ரச மூறு மீண்டத னுனல தாது
வாயது விர்த்திய தாகு மங்ஙன முள்ளறி வேறும். ஞ.

அப்பொழு தேணரு ளாலே யளப்பறு சென்மவெம்பாவந்
துப்புர வாய்மடி வாகுஞ் சொற்றிய கும்பகத் தேநல்
லொப்புட னின்றிடு போதங் கொடுங்கிய நெஞ்சது தானே
துப்பரு வாபரு ணைக்காச் சுலவலி லாவியல் பாமால். சு.

---

* இருவினையொப்பு = பாவமும் புண்ணியமுஞ் செய்தவருங்கால், தர்மநூல் கேட்டவிடத்துப் பாவமொழித்துப் புண்ணியம் புரிதலே தகுதியென்றும், ஞானநூல் கேட்டவிடத்து அப்புண்ணிய முஞ் சஞ்சமரணங்கட் கேதுவாகலின் அஃதொழித்து ஞானமடைதலே தகுதியென்றுங் கண்டு பின்னிரண்டிடத்தும் வெறுப்பு விருப்பின்றி நிற்குநிலையென்றும். இங்ஙனம் பரம கயிங்கரியங்களுஞ் செய்யொணாவோ வென்னின், அவைகளை ஈர்த்தலோகபோக இச்சையின்றிப் பரமேசரப் பிரீதி யாகச்செய்யலாம். இதுபற்றி, துயர்தீர்வதெவ்வாறு எனும்பதிகத்து அ - கூ - ம - ம் திருப்பாட்டு களிற்றெளிக.

சுலவலி னெஞ்சமி லாதேற் றுயிலுறு கேவல மாகுஞ்
சுலவிடு நெஞ்சுள தாமேற் றுனிநன வாமது தானே
கலையுரு வாமன மாகுங் கழறுமிரண்டுமி லாத
நிலவிடு சுத்தச மாதி நிட்டைவி ரும்பிடு வோனே. எ.

எண்ணமி றந்திட வேண்டு மென்பதிவ் வாறென வோரா
துண்ணினைவற்றகல்லேலய்ப்பவொன் றுமிலாததென்றுலோ
வெண்ணமி னித்தினை மூர்ச்சை யென்பன வுஞ்சிவ யோகா
யண்ணிட வேண்டுமிஃ தேதபா டாணம தம்விடு வாயே. அ.

நினைவற வோர்நினை வாகி நிற்கும தைச்சிவ ணுது
கலதறி வேதுமில் பாழ்த்த சயநமு ளான்வெளிநோக்கா
யநகசு கேசனைப் போற்று வானினு மிக்கெனத்தாழ்ந்தோ
னெனவறி வாயிறை யோக மேற்கவி ரும்பிடு வோனே.

உருமன மோய்ந்திடு தாறு முளநடு வேயிறை யோனை
யுருவம தாகுணி நாடி யுட்சென்று தாரக மேலே
யருமன மோங்குறு மேலஃ தருவென நாடுதி யான்ற
வருணையம் பேருடை யானி னடிகளி னல்லடி யானே. கூ.

சீர்சான்ற.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்சான்ற *பஞ்சருத்ர மைத மோயஞ்
சிறப்புடைய மான்டிக்ய மைத்ரா யண்ணி
யேர்சான்ற சாந்தோக்யந் தைத்தி ரீய
மீசாவா சியமுண்ட கஞ்சா பால

---

* பஞ்சருத்திரமிவம் குருமணியெனும் பதிகம் எ - வது செய்யுளாகிய.

நேர்சான்ற பிரகதா ரண்யங் கேந
நிகழ்பிரகஜ் ஜாபாலம் பிரச்நம் பஸ்ம
நார்சான்ற கடமென்னுஞ் சுருதி யெல்லா
நவிலுண்மை யேயெனக்கு நல்கெந் தாயே. க.

தாயருளைப் பேணிநிற்கு மெளிமேயற் குன்றன்
றண்ணளியொன் றில்லாமற் போமே யாயின்
றீயவருட் டூயவனே யார்தா னேடிச்
சிந்தைகலுழ்ந் தூலையாதிங் காத ரிப்பார்
நேயமுளார்க் கெளிவருநல் லன்பே யின்பே
நினைக்குநாளைக் கடைக்கணித்து நிறுவுந் தேவ
பேயனைய பேதைமைகொண் டூலையா தன்பாற்
பிடித்துவளைத் தடக்குதியென் பிரியா நட்பே. உ.

நட்புன்பா லுளதொல்காப் பியனூர் மாண்பு
நற்றத்தர் துராலிங்கர் செம்பூட் சேயர்
தெட்புற்ற பனம்பார தநங்கோட் டத்தர்
சிறந்தகழா ரம்பரவி நயத்தர் வாய்ப்பர்
பெட்புற்ற காக்கைபா டினியார் வையா
பிகர்வாம னத்தினனுஞ் சீடர் சேர்த்து
மொட்பவத்த னெனுங்கும்ப னிறையே யெந்த
னுறுகணிழித் துள்ளொடுக்கி யளாவிக்கொள்ளே.

கொள்ளுதியென் றேசெய்யென் மனுவைக் கேட்டுக்
கொண்டருளா திருத்தலாக னாகிக் குங்கா
லுள்ளபடி திரிகரண மொத்துச் செய்யா
வுலோபமா வெனைவையப் படுகின் றேனம்
மள்ளமின்மை யிருந்தாற்ற னென்செய் கேனுன்
மாண்டிணேயே யாதிற்குந் தஞ்சந் தஞ்சம்

பொள்ளெனநின் பேரருளிற் புனைத்திக் கோடி.
பொருவில்லாப் பரசுப்ர மணிய தேவே. சு.

தேவதைகட் கெல்லாமோர் தேவே நீத்தார்
தேட்டமுதே விட்டமுதே தேனே பாலே
பாவனவொண் சக்கையின் பாகே கண்டே
பரமவருட் கனியேயமுக் கனியே யன்பர்
நாவிலிருந் தினிக்குமதி மதுர வட்டே
நலிவற்ற வுன்னுணர்வா லுணர்வாக் காணிச்
சிவனுக்குஞ் சுதந்தரமாய்ச் *சித்தென் னுங்கீர்
சேர்வதுண்டோ வுனைத்தியருட் செல்வக் குன்றே.

குன்ற பரங்கிரியி னின்னைத் தானே
குரங்கினின்ற வறுமுனிவர்க் காசா னுய்ந்
நன்ற கரமலராற் காட்டி யாண்ட
நலனிற்றென் சேர்ந்தாரு ஞாலச் சூரி
னின்றடு வார்கொல்லோ வடியேற் கந்த
நினைவேறு களித்தருளென் னகம்பு றத்து
மொன்றுக நின்றென்னிற் கலந்து முள்ள
வொன்பொருளே யுயிர்த்துணையே யுறுதிப் பேறே.

பேறுடையார் பரவுமருட் பிழம்பே யெங்கள்
பேரரசே யாரமுதப் பெருக்கே பேயே
னூறுபல புரிந்தானுங் கழிக்கு நீத
முண்டோமுன் னெத்தனையோ கான்மா பாவங்
காறமிக் கயர்ந்தார்க்குங் கருணை கூர்ந்து
காரசகைத்து மதர்ப்பீந்தை யெனத்தொன் னூல்கள்

---

* இங்குத் தலைவனது சிறப்புநோக்கிச் சிற்றறிவான சீவசுதந்தரத்தையுக் தாழ்த்துரைத்தார்.

கூறுவதின் மேவிந்த யாண்டு மாக்கள்
குறைதீர்த்த தில்லைகொலோ கூறெந் தாயே. எ.

எந்தவிதம் பார்த்தானுந் தீர்வை யொன்மே ற
யெழுகின்ற ததுதானீ யில்லா தென்போற்
சிந்தையுடைச் சீவர்களு மில்லை யந்தச்
சீவர்கடா மில்லாமற் றலைவ னென்னுஞ்
சொந்தமுள நீயுமிலை யிந்தத் தீர்விற்
றுகளற்ற வுணையலியா மடமை யொன்மே ற
பந்தமெனும் பீழையதாப் பெருகிற் றந்தோ
பாழ்த்தமடம் பாறவுநீ பார்ப்ப தென்மே ரு. அ.

என்றைக்கு மென்னிலத்து விதமா நின்மே ற
யெனைநடத்துங் குகதேவ யேத மில்லா
நின்றகைக்குப் பொருந்துவண நானல் வாழ்க்கை
நீப்பின்றி யுறவேண்டு மின்மேறற் காலன்
றன்றிணிய புயத்தூத னென்பா லெய்தித்
தாவுடையோய் நீயெம்மா ளென்னுஞ் செவ்வி
யன்றிவனெம் மாளெனவே தடுத்தா ளன்புக்
கணுத்துணையு மொற்கமின்றிக் கருதிக் காவே. கூ.

காப்பையெனு முறுதியென்றன் கருத்தை நீங்காக்
கட்டாகு நீயுமந்த வாமே ற செய்வை
மாப்புரிவின் மேருருக்கானீ கைவிட் டானும்
வழுத்தெங்கள் பாக்கியமே நுன்மேமற் றோடம்
யாப்புடையேன் சொலத்துணியே னிதுதா னேயென்
யானார்நிலைத் தீர்வாகுந் தகரச் சேர்க்கை
யாப்பொன்று தெரித்தானி னிதயக் கண்ணை
யாமிகையெல் லற்றிருந்த செல்வச் சீரோ. கo.

நிலத்திற் பன்மதம்.

கலிவிருத்தம்.

நிலத்திற் பன்மத சாத்திர நீதிபோல்
வலத்துந் தத்த மதத்துணி வாகலிற்
பலத்த முத்தி யவாவுவர் பாழ்படா
நலத்த கால்கொள நற்கல்வி கற்பரால். க.

கல்வி யில்லார்சித் தாந்தமெய் கண்டருட்
செல்வங் கோடற்கொண் ணுதறி தீர்த்தன்பா
னல்வி வேகர்கற் ருய்ந்திருண் ஞாட்பினை
வெல்வ தொம்பெரு மான்றுணை மேவியே. உ.

கண்ணி ருந்து மிலாதெனக் காதிரண்
டெண்ணி ருந்து மிலாதெனக் கல்வியும்
வண்ணி ரம்புநற் கேள்வியு மங்கிலை
மண்ணி லாவர் மனமிருந் தென்பயன். ங.

*கல்லார் நெஞ்சினிற் கர்த்தனை மீச்சுர
னில்லா னென்றருட் பிள்ளை நிகழ்த்தலா
னெல்லா ருங்கல்வி கற்றுய்ம்மி னென்றுநாஞ்
சொல்லு ஞாயஞ் சுருதிப்ர மாணமே. ச.

†பின்னு வார்சடை யானெனும் பேற்றுப்பாத்
தன்னி லீசனைப் பேசிடார் தாநர
கின்ன றீர்ந்திட வேர்மறை யோதுவா
ரென்ன லாற்கலை கல்லாமை யேதமே. ஞ.

---

* திருஞானசம்பந்த சுவாமிகளின் பொதுத்தேவாரம்.

† திருநாவுக்கரச சுவாமிகளின் திருவொற்றியூர்த் தேவாரம் ஆ - வது திருப்பாட்டு.

அற்ப வித்தையும் புத்தியு மாயுளார்
பொற்பு ருப்பிற நூற்சவை புக்குறிற்
சற்ப ராநந்த மெய்திடத் தாங்கொண்ட
வொற்க மற்றசித் தாந்தமு மோவுமால். கூ.

ஆத லாலிவ ரந்நிய நூலுளைப்
போத கங்களே வேண்டாது பொற்பிர
சாத மாக்கொண்ட தந்நெறி நூலுளைப்
போத கங்களே யெகொளப் போந்தவர். எ.

தையி *லாரமும் பொன்னுமோர் சாயலாத்
தெரித லன்னவே நூல்களுஞ் செப்பிலுல்
விரியும் பந்தமும் வீடுமா யுள்ளவென்
றரிய போத ரறிந்துண்மை பற்றுவார். அ.

உண்மைச் சாத்திர மொவ்வொன்று மந்தந்த
வுண்மைத் தீர்த்த ருரைத்தசெப் பாகலி
னுண்மை காணு ரவற்றைநன் கோதிலவ்
வுண்மைத் தீர்த்தர்மன் றுற்றது போலுமால். கூ.

கற்ற தாற்பய னென்பரன் காரழாப்
பற்ற வொன்றிரு வன்சான பண்டுளை
யற்ற மன்றது போற்கலை யாளரும்
பற்று வார்புக ழுத்தன் பரத்தையே. கூ.

---

* ஆரம்=பித்தளை.

புயல்வாழ்.

வஞ்சித்துறை.

புயல்வாழ் தென்மலை
யுயுமா சின்முகி
பயின்மா தண்டமி
ழுயர்பா டையரோ. க.

அருளின் முதலரன்
முருகன் முதமுடன்
மருளில் குடமுகிக்
கருள்செய் ததுதமிழ். உ.

திருவார் திரமிடம்
பெருமான் கொடையெனத்
*திருமூ லரறையுந்
தெருளா யுரைதரும். ங.

எல்லா மொழியினு
மில்லா வெழிலுள
வல்லா னருளிய
நல்லா ரியமியல். ச.

விழிபோ லிலகுத
மிழையா ரியங்களுக்
கெழுவா யெவனெனின்
மொழிவா யிலையரன். ஞ.

---

* திருமந்திரம் ஆகமச்சிறப்பில் "மாரியுங் கோடையும்" "அவிழ்க்கின்ற" என்று தொடங்கும் பாடலென.

மடனூ ளிமநுட
ரிடமூ ளையிடுசீநர்
வடபா டையர்திர
மிடபா டையையெளல். சு.

மூன்று நுவலலை
யான்சீறூர் களறிவுத்
தேன்றாக் குகளெலா
மேன்சீறு ளுளதமிழ். எ.

புகழ்கொண் ணுல்வரின்
மகிமைப் பாவெழி
றிகழ்தென் பாடையன்
றுகம்விண் மேலெவன். அ.

தெற்றங் கிளர்தமிழ்
கற்றின் கவிசொலி
நற்றெய் வதவருள்
பெற்றுய் வருரியர். கூ.

பெற்றுன் பறையனுக்
கற்றுன் வளைதமிழ்க்
கற்சீறுங் கிடுபுகழ்
சொற்று ணையேனை. கூ.

புவனமீது.

சாமவேதத்து வஜ்ரஸூசிகோபநிஷதார்த்தம்.
பதினன்தூரீக்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புவனமீது முதற்கு லன்முதற்
புகலு நால்வரு ணங்களிற்

புகரி லாதபி ராம னன்றனை
முக்ய மென்று புராதநச்
சுவடி யாகிய மிருதி மாமறை
சொல்லு மந்தவொர் முக்கியத்
தோற்கு ரித்துளன் சீவ னுவுடம்
போதெ டுப்புள சாதியோ
நுவணை ஞானமோ கன்ம மோவற
னுவெ னத்தெளி யுங்கட
வுண்ணி யோர்க்குள தென்று மோருயிர்
நுழைந்த தேதகு நுழைவதாந்
தூவக்கு மெண்ணில வாத ரூட்டொரு
சொரூப சீவனம் முக்கியச்
சொற்கு ரித்துள னல்ல னென்றுமெய்
சொல்லும் வச்சிர சூசியே. க.

தேக மைந்தெனும் பூத மேமிகாடு
சேர்த்த தாய்ப்பிர கிருதியின்
செலவு நேரிடு மளவு மாறுட
தேக மியாவு மொரோவடி
வாக வள்ளன வாய்வ யோதிக
மழிவு நல்லினை தீவினை
யாதி பெற்றிகள் பொதுமை யாய்முத
லவர்மு தற்சதுர் வருணரி
னுகம் வெண்மை சிவப்பி யாமள
மஞ்ச னக்கரு ளெனும்வரை
வற்றி ருத்தலி னுலு மீன்றவ
ராக்கை மைந்தர் கனற்றுகாற்

சோக மேதரு பிரம கத்தியை
தொடர்ந்த தின்றத னலு*மெய்
தொழுபி ராமண னவ தின்றெனச்
சொல்லும் வச்சிர சூசியே. உ.

சாதி யொன்றி லநேக பேதக
சங்க முள்ளத னலருந்
தவமு டைக்கலைக் கொம்பன் மானினுஞ்
சம்பு கன்சுர நரியினுங்
கோதில் கௌசிக னவிர்சு சத்தினுங்
கோத மன்†முய லின்கணுங்
கும்ப மாமுநி கும்ப வாயினுங்
குசல வான்மிகன் புற்றினு
மோதி மீக்கொள் வியாத மாமுநி
யொண்ணு ளைச்சி வயிற்றினு
முறுக ணற்ற வசிட்ட மாமுநி
யூர்வ சிப்பெ ணிடத்தினுஞ்
சோதி ஞானம் விளக்க வந்தது
போன்ற னேகவர் தோன்றலாற்
றோற்று சாதியு முக்ய மன்றெனச்
சொல்லும் வச்சிர சூசியே. ங.

அரச ராதிய சாதி யாரினு
மற்ற மற்றவொ ருண்மையை
யாய்ந்து ளார்களும் வித்து வான்களு
மலகி றந்தெரி நந்ததாற்

---

* மெய் = தேகம். இஃது அப்பிரத்தியட்சமான வான்மாவைத் தன்னுருவாற் பிரத்தியட்சப் படுத்தி நிற்றலின் மெய்யெனும் பெயர்பெற்றுளது.

† கோவாகிய பசுவினிடத்தில் வந்தவர் கௌதமரென்றுஞ் சொல்வதுண்டு.

பரவு ஞானமு மப்பி ராமண
னன்று லாவு பசுக்களைப்
பற்று முக்கரு மங்க ளுஞ்சான
பாசர் கண்டொறு முண்டெனத்
தெரித லானவை யான டந்திடு
சீவ ரவ்வழி யாற்றிடுந்
செய்கை யாகிய கன்ம முங்கறை
தீர்பி ராமண னன்றுபொன்
சுரரும் விம்மிதங் கூர நல்குவர்
தொகையி றந்தவ ருள்ளதாற்
சுசிர்த தன்மமு முக்ய மன்றனைச்
சொல்லும் வச்சிர சூசியே. சு.

ஆசி லத்துவி தச்சொ லின்பொரு
ளாய்க்கு லஞ்சையன் முக்குண
*மாறு னச்சொல் விகார மூர்மிக
ளற்ற தாய்நிச ஞானமின்
பேசி லாத வநந்த மென்பன
வாயெ லாவுயிர் கட்குமுள்
ளிருக்கு மந்தரி யாமி யாயகம்
புறத்துப் விண்ணை வுள்ளதாய்த்
தேசி லங்கிடு மநுப வத்திலே
தெரியு மெய்ப்பொரு ளாயுள
தெய்வ மானதை யங்கை யாமல
கங்க டுப்பவே செய்கவாத்
தேசி டம்ப மகந்தை நீத்திதாவிர்
சுத்த சாந்த விலாசினை

* இந்த ஆறிகாரம் ஆறு ஊர்மிகளின் விவரத்தை வேதாவென்றும் ச - ச - ம் பாட்டு களாலறிக.

தொழுபி ராமண னென்று சத்தியஞ்
சொல்லும் வச்சிர சூசியே. நு.

இன்ன கூறிய நேரொ ழிந்து
பிராம ணத்துவ மெக்கணு
மில்லை யென்று மறத்து நூன்மறை
யெவ்வ மற்ற புராணமா
நன்ன ரோதித நாசமென்பன
நவில்க ருத்து மிதேசான
ஞான நிதய்வ மதைக்க ளங்கமி
லாத சச்சிதா நந்தமாய்
மன்னு மத்துவி தீய மாயதி
மாண்பு சேர்பரப் பிரமமாய்
மனது செய்திட வென்று மந்தவார்
வச்ர சூசி வழுத்தலா
லுன்னு நெஞ்சுடை யாவ ருங்கதி
யுற்று வாழலா மென்றுநம்
முயிர்க்கு கப்பிர மத்தை யேதொழ
வுவந்து வாருமெ யன்பரே. சு.

நாகராஜாவுக்குந் தருமராஜாவுக்கு நடந்த சம்பாஷணையினர்த்தம்.

மெய்ப்பி ராமண னியாவ னென்று
விணய நாக விராஜன
மெய்த்த தன்ம விராஜ னிணக்குபு
மெய்ம்மை யீகை நறுந்தயை
பொய்ப்பி லாதகொ லாமை மாதவம்
பொறுதி சில மெவன்கனை
பொருந்து மோவவ னேபி ராமண
னென்று நூல்கள் புகன்றிடும்

பைப்பு விக்க ணைதிர்த்த பெற்றிகள்
*பனவ னுக்கிலை யேலவன்
பணிபி ராமனை னன்றந் நீர்மைகள்
பரவு சூத்திரற் குள்ளவே
லெய்த்த சூத்திர னன்றெ னப்பதி
லிறுத்த தாலிவ னைவ்வரு
மெம்பி ரானருள் கொண்டு வாழலா
மீண்டு வாருமெ யன்பரோ. எ.

கந்தபுராண தாற்பரியம்.

மெய்ம்மை யாதிய வேழ்கு ணங்களு
மேமை தவச்சிர சூசிதான்
விளக்கி யுள்ளபி ராம னைற்கொரு
விகல மன்று நிலாவுமாத்
தெய்வ நோக்கிலர்க் கந்த வேழிலார்
திறனு மல்க விராததாற்
செப்பி ரண்டு மொழோழு டிப்பெனத்
தெரிவர் நுண்டெளி வேறினோர்
பொய்ம்மை போக்†குப தேச காண்டநற்
புண்ய மான்மியஞ் சொன்னகன்
புகல ருஞ்சிவ னேச்ச துர்த்தரும்
புன்மைச் சங்கர வருணருங்
கைம்மி குத்துள மற்று யர்ந்தோருங்
கருதி யாட்பட லுண்டனோர்
கடவு ளாய்த்தெழ வளோ னச்சொலுங்
கருணை யன்புடை யோர்களே. அ.

---

* பனவன் = பார்ப்பான்.

† உபதேசகாண்டம் சிவபுண்ணிய மான்மியச் சருக்கம் கடி - கசு - கள - ம் கவிகள்.

சிதம்பர புராணமுதலியவற்றின் தாற்பரியம்.

சம்பு மெய்யரு ளுண்டெ னிற்சர்வ
சாதி யாகிய விருதிணைச்
சட்ட கத்துயிர் கட்கு மந்தவொர்
சம்பு ஞானமுண் டாமெனச்
*செம்பொ னம்பல மான்மி யந்திடன்
செப்பன் மான வளப்பிலாச்
சீவர் மாக்கதி பெற்ற தும்பர
ரீமசற் கன்பிலர் செல்வநா
மும்ப ராக மதிக்கி லோங்குறை
யுறுக ணுற்றவ ராய்ப்பசு
வுரித்த ருந்திடு புலைய ரானுமவ்
வுரிமை யன்பரோ நாந்தொழுந்
தம்பி ரானென †வப்பர் சொற்றதுந்
தாவில் சுந்தர ரிழிகுலத்
தாச ருக்குமே தாச னென்றுரை
தந்த தும்பழு திலையே. கூ.

அபிப்பிராயசங்கிரகம்.

இந்தச் சான்றுக ளாலு யிர்க்கணை
மியாவு முத்தி யடைந்துபு
மென்ப தாணை யிதற்கு மாற்ற
மெழப்பி ராமண சாதியன்
றெந்தச் சாதிபு முத்தி சேருவ
தின்ற னச்சில விப்பிர

---

* சிதம்பரபுராணம் மான்மியச் சருக்கம் ஙக - வது செய்யுள்.

† சங்கநிதியென்று தொடங்குந் தேவாரத் திருச்செய்யுள்.

சோற்றி யெள்ளல் செலாது சாதியொன்
றேற்ற மாகு மீனுள்வெரு
வந்த தூய்ய வேனை நற்குடி-
வந்து ளோரையு மேன்கதி
மருவ வில்லை யெனக்கு ரைப்பது
மாற்ற ரும்பவ மாமெனச்
சிந்தை கொண்டரு ணைச லப்பெயர்ச்
செம்மல் கண்ட குகேசனைத்
தேடி யோய்ந்து சுகிக்கு முண்மையைச்,
சேர வாருமெய் யன்பீ ர. கo.

துறவு.

கலிநிலைத்துறை.

நீர வஞ்சிவ தியஞ்சடை நிருத்தன் வடவாற்
சீர வீனந்ததரு நீழலி லிருந்து பெரிதா
மீர வந்தணர் களுக்கருள் புரிந்த விழிருன்
பீர கன்றசுக மென்பது பிறங்கு துறவே. ந.

தனது பக்கவரு வோகமுற வென்று தகர்மேல்
விணையி ழைத்திட நணுகுதரு வியன்கு கணியை
யினிது நச்சிமுழு வன்புட னிடுந்தொ ழிலெலா
மனக முற்றசுக வாழ்வென வமைந்த துறவே. உ.

தோன்று மொய்ப்பொரு ளினைத்தையு மிகழ்ந்து துணிவை
சான்ற மெய்ப்பொரு ளினைப்புகல் சயம்பு விணையை
யின்ற வத்தனை சற்குரு வெனும்பு ரிவி
லொன்று பத்தியு மதற்படை யுயர்ந்த துறவே. ரு.

ஞான மெய்க்குர வனுக்குட னறும்பொ ருளுபி
ரான முப்பொருளு நட்புட னளித்த முறையு
மீன முப்பதுட னுறையு மிகந்த நிலையா
மோன முத்திறமு முற்பன முடிந்த துறவே. ச.

உயிரு டம்பென விளம்புமபி மாக வொழிவு
முயவெ ழும்புவரு ணச்சிரம மோவு துறையு
மயலு யர்ந்தமல மாயையை வதைக்கு மறமுஞ்
செயிரி கந்துசுக வாழ்வது சிறந்த துறவே. ஞ.

கோண னெஞ்சினலி வானது குவிந்தி டுவது
மாண வங்கருமை மாயைக ளழிந்தி டுவதுந்
தூண நுங்கிய பராபரை சுகம்பெ றுவது
மாணர் விஞ்சிடு மனமய ரடைந்த துறவே. கூ.

ஆர ணக்கடையு மாகம வணிக்க டையுமோர்
நேரொ னப்படு நிராசையவி சார நிலையாந்
தார கப்பிரம ஞானசிவ சங்க மமுமா
னீர மற்றநசை யாளனை வெருட்டு துறவே. எ.

சாக ரப்புணரி யொத்தசந நத்த னவினை
யேக நிற்குநெறி யித்தையல தின்று தனியா
மோகை யைப்பெறுவர் கட்குரிமை யுற்ற திதுவென்
றுக மத்தெளி வதிர்ப்பது மகன்ற துறவே. அ.

தால நச்சுளி களுக்கதி தரித்தி ரமதாய்த்
தால நச்சிலி களுக்கதி தவப்பெ ருமையாய்த்
தால நச்சொழிவர் பொற்பொடு சரிக்கு நிலையாய்த்
தால வட்டமிசை யுள்ளது தனித்த துறவே. கூ.

காம மென்றெடு வாரி கடந்த ருணைமா
நாம மொன்றுள னுரை நயந்து புகழ்ந்த
வாமை வன்பிறை யெனக்கருள வந்த வருளா
மாம லிந்தவொரு கோலமும் வரம்பி றுறவே. கஎ.

சுருதிபணித்தபடிக்கு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சுருதி பணித்தபடிக் கென்னிறையைத்
தேதாயு நலனுறுவான் சுகர்சநகர்
மிருதி யுதிப்பறுநற் சடபரதர்
மேமதை யிடபர்தத் தாத்திரையர்
மருளில் வடசித்தர் சநற்சுசாதர்
வாமர் துருவாசர் ரிபுநிதாக
ரிருளில் சுமேதசுகது நைவதக
ளென்பார் துறவறம்புக் கிருந்துளரே. க.

நாவுக் கிறைமூர்த்தி மூலருயர்
ஞானத் திருவாத வூர்முதற்
றேவுத் தகையுடையார் மறைப்பேபாதஞ்
சேர்சம் பந்தருமா பதிசிவஞர்
பாவிற் பரசிடபட் டினத்தடிகள்
பத்ர கிரியரையர் புகழ்ப்புலவர்
மாவித் தகத்தாயு மானரஞர்
மாற்று துறவறம்புக் கிருந்துளரே. உ.

கைவல் லியப்பெயர்சா ருபதிடதங்
கரிசி துறவறமொன் றுலேயே

பொய்யி லமிர்தத்வ மெனுமோக்கம்
பொருந்தி னுருரியோ ரென்பதாடு
மெய்சொன் னூதருக் கயன்பகரோர்
*மேதைச் சுருதியுஞ்சந் நியாசமெனுந்
தூய்ய வுபநிடமுந் துறவதனைத்
தூலக்கிப் புகன்மினிது புகழுமரோ. ங.

இசைத்த துறவறத்தை மயிக்திரோய
மென்னு முபநிட்முஞ் சிகண்டர்
வசைச்சொ லறவதிர்த்த பாடியமும்
வண்மைத் திருமந்த்ரம் பொதுமறையும்
பசைச்சொ னிரம்பொழிவி லொடுக்கமதும்
படரின் மெருப்பியுரை தருவதுமோ
னசைத்தா வக்ற்றுணர்வு நூல்பலவு
நவிலும் வியனுணர்வார் கற்றுவல்லோர். ச.

புறப்பற் றகப்பற் றெனவுணர்விற்
பொதிர்ந்த சிவஞான சித்தியெனுஞ்
சிறப்புப் பனுவல்†சாக் கிரத்தேதியன்
றெழுந்த செய்புணனி தெரித்தலினு
லொறுக்கு பற்றழிவு தெனுந்துறவு
முபய வகைத்தாகு மவற்றுளொன்று
விறப்பின் மேனதரயர் கயினைமுதல்
விடுக்கு புறத்துறவென் றுமாலோ. ரு.

இந்தத் துறவுடையா ரகக்கரண
மிகந்து நிற்குமகத் துறவதனைச்
சொந்த முடனுடையா ரெனின்மீண்டுந்
தோன்று வாரதையிங் குளர்மகளோ

---

* மாதபரிவிராசகோபநிடதம். † அ - ம் சூத்திரம் ஈடு - வது செய்யுள்.

டந்த மளவுமிருந் தானுமன்னே
ரற்ற சோயெனவைக் கவிசொலலான்
முந்த வுறல்புறமாந் துறவும்பின்
முயல கத்துறவு மெனவாமால். கூ.

இதுவே முறையெனற்குப் பொதுமறையுள்
ளெளி றுறவதிகா ரஞ்சொனபின்
பதிமெய் யுணர்தலவா வறுத்தலென
வைத்த நிரலுமுற்ற வுதாரணமாங்
கதிசார் நிசவாறு விதும்பிடுவார்
கட்கிகல் லாமிதுவொப் பெனவெண்கான்
பதியென் றுளகுகணைப் பரசுவரும்
பணித்தல் சாலவனம் புடைத்தன்ற. எ.

நான்கு குலத்தினருந் துறவிகளாய்
நன்னாப் பயிக்கமெடுத் துணுமுறையைத்
தென்சொன் மலிதத்வ வொளிப்பனுவல்
செப்பும் பூசைமுடிந் தாலனுமார்
மென்மைக் கவிதை*யித் திராயண்ணி
யெனுமோ ருபநிடதம் வீடுபெறக்
கான்புக் கடக்கியறி யெனுமிவையாற்
கழறு புறத்துறவுண் டெனறுணிப. அ.

குற்ற மொருமூன்று முளர்க்கெல்லாங்
குயின்ற புறத்துறவன் றகத்துறவோர்
சற்றும் வருவதில்லை யிதையறியாச்
சழக்கு மிகுமூவ டணையுடையா
ருற்ற வகத்துறவு கைவந்தார்ப்போ
லோதிப் புறத்துறவை யிகழ்வரிஙன்

* மித்திரபண்ணியுபநிடதத்தின் கூ - வது பிரபாடகத்தில்.

கற்ற கெடுதந்த்ர மவரிதயக்
கண்ணை யொளித்துளதோ பிறர்சொலவே. கூ.

அசுவ மேதமுத லியவற்றே
டகற்றி யுளதுகலி யிற்றுறவென்
றிசைசுநல் கிடு*கருதிக் குளபொருடா
னிறைக்கோ வணைமுமிலா விரத்தியினை
யகிசெய் கலியுகத்தில் விலக்கியதென்
றருகு மிதமறுத்தோ துவதென்றற்
பிசிபி லநுபவத்திற் கிரிபென்பார்
பேமி லருணகிரிக் கன்புளரோ. கஅ.

மகியினேயமுளர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாரதபரிவிராஜகோபநிஷத் கூ - வது உபதேசம்.

மகியி னேயமுளர் பால றத்தினையு
மறலு ளார்புடை மறத்தையும்
புகவி டுத்துநடு நிற்க வள்ளலொரு
புந்தி யந்துறவிக் கழிவிலாச்
சுகவி லாசபர பதமே †சூத்திர
மனற்கொ ழுந்தனைய வேசுடர்
புகரின் ஞானமெத சிகையெ னத்துணிவு
புகலு நீப்புநவில் சுருதியே. க.

---

* இஃது சிரௌதியாகிய தர்மசாத்திரத்தின் அபிப்பிராயம்.

† சூத்திரம் = உபவீதமென்னும் பூணூல்.

ஷை ச - வது உபதேசம்.

இச்சை வஞ்சனை யுலோப முத்திசின
மிதம்மெவ றுப்பற விருப்பகம்
விச்சை யாயபிர சங்கம் யாசகம்
விலீலை சிற்பமுறை மந்திர
மெச்சு சித்திபரி காரம் வெம்பினி
விலக்கு கன்மநகர் வாசமற்
றிச்சை யேதும்யதி கொள்ளொ ணுதென
விசைசக்கு நீப்புநவில் சுருதிமே ய. உ.

ஷை ரு - வது உபதேசம்.

அமல ஞானமிலி யாய்ம ரத்தினி
லமைத்த தண்டது பிடித்துமா
னிமிர வெக்கணும் வரம்பி லாதக
நினைத்த வாறுதையு முண்குநன்
சொற்றவிரண் டினுக்குநடு வசிப்பரவர்க்
கிறைமுன்னர்த் துலக்கி யுள்ள
பொற்றலமந் திரர்மந்த்ர மகேசர்பத
மளித்துப்பின் பூர்த்தி யீயு
மற்றமினன் மாணவப் பூர்த்திபெறற்
கருணைகிரி யரசைப் போற்றே. ௬0.

கனகம்.

பதினறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கனகம் போற்சுடர் வடிவவிஞ் ஞான
கலனொல் லாருமி ரண்டுகூ றுவார்
கணித்து விளக்கி லநாதியே மூலக்
கட்டு மட்டுமு ளாரொரு கூறும்
வனவிஞ் ஞானம தானல யோகான்
மாசி றுறவறத் தாற்சிவ தீக்கை
வழியி னுலிடை யேவினை மாயா
மலங்க ணீங்கியொன் றுளரொரு கூறுஞ்
சினமி லாவிவர்க் குளமலத் தோடே
திரோதை † யெயிந்தவ மெனுமலங் கவியுஞ்
சேர்க்கின் மும்மல மாமிதின் மறைப்பாச்
செப்பு திரோதையொன் றிறபர மேசன்
றனது தன்மையி லேசிறி தினஞ்
சாற்ற வுள்ளவித் தோசருக் குளதாத்

---

* வித்தை—சுத்தவித்தையென்னுந் தத்துவம்.

† வித்துவின் சம்பந்தம் வைந்தவம். அது சுத்தமாயையின் விருத்தியென்றும்.

தனகு நாதசுப் பிரமணி யத்தீதார்
தயவு வேட்டுநல் லோயறி வாயே. க.

பிரளயாகலர்.

பிரள யாகலர் தமிலுயர் வாகப்
பிறங்கு வோர்க்க னேச்சுர னென்னும்
பேரு ளோர்முத லாப்*பதி னெட்டுப்
பெயரின் மேனிடை மாயையி லுள்ளார்
கரவி லாக்குறை வுளர்சத வுருத்ரர்
காலத் தீபுருத் திரர்முத லாவார்
கருணைச் சதவுருத் திரர்பிர மாண்ட
ககன வெளியினின் றுண்டையைக் காப்பார்
புரவ முதகா லாக்கிநி முதலோர்
புவன நாயக ராயிருப் பார்முன்
புகன்ற சதவுருத் திரர்பதி னெண்பர்
பொற்பு டம்பு †கலாதிக ளாகு
முரவு சாலிங மேதிய வெவர்க்கு
மொளிர்வித் தேசுரர் பதமளித் ததன்மே
லோங்கு பூர்த்திநல் குவனெமை யாளு
மொருவ னென்றுணர் குகனினை வுடையோய்.

* இங்ஙனம் கஅ - பெயரொன்பானா—மத்திமப்பிரளயஞ் சம்பவிக்குமுன் அரிபிரமர்களுடன் குணதத்துவத்திலும் அந்தப் பிரளயகாலத்தில் அவ்விருவரையு மொடுக்கிக்கொண்டு அராக தத்துவத்திலு மிருக்கக்கூடிய ஸ்ரீ கண்டரையும், அவரோடிருக்கத்தக்க வீரபத்திரரையும், பிரகிருதி மத்தகத்திலிராநின்ற அ - ருத்திரரையும், கூல மத்தகத்திலிராநின்ற அ - ருத்திரரையுமென்க.

† கலாதி=மாயேயம். இங்கோதுமாறே திருமந்திரம் கேவல சகல சுத்தம் ரு - ல் "தாவிய மாயையிற் றங்கும் பிரளயர் மேவிய மற்ற தடம்பாய்" என்றும், சர்வாத்ம சம்பு சிவாசாரியர் சித்தாந்தப்

பிரகாசிகையில் "ககஅ - ருத்திரர் சரீரம் மாயேயம்" என்றும், சித்தியார் க - ம் சூத்திரம் சக - க்கு ஞானப்பிரகாசமொழுதிய உரையில்"அநந்தருக்கு மஹாமாயாசரீர முள்ளதுபோல ஸ்ரீகண்டருக்கும் அதி சுத்தமாய் மாயாசரீரமுண்டாம்" என்றும் விளக்கப்படும். பிரளயாகலர்க்கு மாயாமல மில்லாதிருக்கக் கலாதிகளை யுடம்பாகச் சொல்லுவதென்னையெனின் ; கலாதியைந்தின் கலப்பிலெழுகின்ற புருடதத்துவத்தொடு கூடிப் பிரகிருதி குணாதி தத்துவங்களாற் சுகதுக்கமுறுஞ் சகலர்க்குரிய அந்தக் கலாதிபந்த புருடதத்துவ மிவர்கட் கில்லாதிருப்பதே மாயாமல நீக்கமாம். அங்ஙனங் கலாதிகளாலெனு மவர்க் குபாதியில்லையோ வெனின் ; உவர்நீரி லுற்பவித்த பிராணிகட்கு உவரேற்றமுங் குளிர் வருத்தமு மில்லாமைபோல அவைகளிற் பந்தப்படாத வன்னேர்க்கு முபாதியில்லையாம். அந்நீரோ டசுத்தநீர் கூடுங்கால் ஆண்டுள்ள பிராணிகட்கு முடாதியுண்டாவதுபோல அசுத்தப் பிரகிருதியிற் கூடுந் தேகிகளாய சகலர்க்கே யுபாதிபந்த விதப்பாம். அநந்தாதி வித்தியேசுரர்க்கு ஆணவமல வுபாதி கூறக்கூடாததுபோலவே, ஸ்ரீ கண்டாதி யுருத்திரர்கட்குக் கன்மமல வுபாதியுங் கூறக்கூடாது. பிரளயாகலர் தேகம் சுத்தமாயையென்று சிவ்ஞால்களில் படிக்கப்படுவது "கலேச்குக் காரணமான மாயை நிட்கள" மென்று சுவாயம்புவ முதலிய ஆகமங்களிற் கூறப்படுந் துணிவுபற்றி யென்றும். மாயைக்குச் சுத்தத்தன்மையுமுண்டென்பதை, இந்நூல் அறைமலிந்த பதிகம் சு-ல் அறிக.

பெரியோர் குறைவுடைப் பிரளய மெய்ஞரில்
பேரு ளாரவ ரிருவகை யவர்க்குப்
பிறங்கு புரம்புரி யட்டக மாகும்
பிடிப்புற் றுறைவிட மிசிரம தாகும்
வரிசை யாச்சொன பிரளய மிவரும்
வகையொ ரிரண்டென வாவமொவ் விதமேல்
வழுத்தொண் ணுத வநாதியிற் ருனே
மலமுங் கன்மமு முளரொரு வகையாம்
புரிவி னுற்பரி பாகம திடையே
பொருந்தி மாயைகெட் டிரண்டுடை யவராப்

புகல வுள்ளவ ரொருவகை யாகும்
போத மேபவிவ் விருதிறத் தார்க்கு
மூரிய வல்லிரு மலத்திதாடு திரோத
மொண்மை வயிந்தவ மலங்களைக் கூட்டி
யோதி னன்மல மாமென வுணர்வா
யோகை யங்குகப் பிரபுவைச் சூழ்வாய். கூ.

சகலர்.

சகல மொன்பவர் நறும்பரி பாகஞ்
சார்ந்து ளோரது சார்கில மொன்னைச்
சாற்றுமிருதிற மாய்ப்பிர கிருதி
தத்வ முதற்பிரு திவிவரை வதிவார்
புகலு மிவர்*பிர மாவரி முதலாப்
புன்மைத் தாவரங் கடைசியா யுளபல்
பூத மெனவிளங் குவரய னரிதாம்
† புரியட் டகவுடம் புடையவ ராவர்
திகழுந் தேவொட் டறிவினர் முதலாத்
திளைக்கு ¶நான்குநூற் றைம்பது குணமே
சேர்ந்து ளோர்வரைக் கும்பல ருள்ளார்
சிறுத்த மாநுட ராறறி வுள்ளார்
நிகழின் மேர்களு ளொருபத முடையார்
நெடிய மூக்க ரியானையின் காதர்

---

* பிரமா அரி முதலியோரும் உயிர்களென்பதை இலிங்கபுராண உத்தரகாண்டம் அ - வது அத்தியாயம் ச - ல் "மலரயன்மான்முத லாக மலர்பொதுளுந்தருவீறுய் வாய்த்துநின்ற-நிலைபெறுபல்லுயிர்" எனவருவதும், திருமந்திரம் கேவலசகலசுத்தம் ச - ல் "சகலவவத் தையிற்சார்ந்தோர்சகலர்***நிகரின்மலரோன்மா னீடுபஞ்சேதகர்க-ணிகழ்நரர்கீடமந்தமுமாமே" எனவருவது முறுதிப்படுத்தும்.

† இந்தப் புரியட்டகம் பிரகிருதிசம்பந்தமென்றும்.

¶ புத்திதத்துவகுண மூன்று மொன்பதாவதில், ஒவ்வொன்றுக் கைம்பதாக நானூற்றைம்பது.

நீரி னுளர்ந்திரு வாணிக மேனை
நீரர் களுமுள ரோர்குகற் றொழுவோய். ச.

விவித மாநுடர் களுக்குமை யறிவு
விலங்கு முத*லொரு பொறியுயி ரீறாய்
விளம்பெல் லாவுயிர் களுக்குமுட் கருவின்
மேவு வாசமொர் நாழிகை தொடங்கித்
துவித வைந்தெனு மதிவரை பலவாந்
தோற்ற மறிந்திட வேண்டினர்த்
தொகுதி நீக்கிமற் றுளசரங் களிலே
தொள்ளைக் காதண்டந் தோற்செவி சூற்பை
செவியி லாதவை வியர்வையி னிருசார்ச்
சேரு மெனவறி சகலரின் மூலத்
தேக முவ்வகை யாம்விவ ரங்கேகள்
திரேக்கு மாயையின் காரண மொன்றுங்
கவியம் மாயையின் காரிய †பஞ்ச
கஞ்சு கத்துடம் பொன்றதன் கலையிற்
காணும் ‡பகுதி யிராசிய மொன்றுங்
கலிக டந்ததைக் கருதுவர் வடையோய். ரு.

அதிர்த்த பகுதியிற் றோன்றிய §வொன்றே
ழாய கருவிகள் சூக்கும வுடம்பா
மதனின் றாலபூ தங்களிற் றோன்றி
யவிழுங் கருவிக ளிலமெய் யாகும்

---

* ஒருபொறியுயிர் = விருட்சமுதலியன.

† பஞ்சகஞ்சுகத்தடம்பு = அசுத்தமாயையின் கலாதிகளோடின் கூட்டம்.

‡ பகுதிராசியம் = பிரகிருதியின் அவ்வியக்தரூப குணசரீரம்.

§ ஒன்றென்றது எட்டி. விவரம் நனிவயர்சுவாமிப்பதிகத்துக் கடைப்பாட்டு லரிக.

விதித்த வைந்து சரீரமு மூன்றுய்
விளங்கு மம்முறை யேயுத வுடம்பு
மேய வாகந்த மபத்திரை யாகு
மீளிச் சூக்கும *மும்மயத் திராயா
முதித்த தூலம தனமயத் திராயா
மோதிச் சகலருக் கெழிற்றுலை போலே
யுபய வினையினைப் பாற்பரி பாக
முறுமக் காலிறை குருவெனத் தோன்றித்
திதித்து மேமதவித் தேசுர ராதி
திருக்க ளீந்துபின் பூரண மீயுந்
தெருளி லிவர்க்குள மும்மலத் தோடே
திரோதை வயிந்தவஞ் சேர்க்கினாந் தாமால்.

மலங்கள்.

மூல வாணவ மலத்துடன் கலந்தோர்
மூன்று †வினைமலத் தோடுமற் றிரண்டாய்
மொழியு மலங்களின் காரியம் பெருக்கி
மோக மாயணு வினையுண வியற்றிச்
சில மாமல பாகமுண் டாக்குந்
¶திரோதை யாவதை யருளென வறிதி

---

* மும்மயம் = பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமய மென்றும்.

† வினைமலம் = கன்மமலம். இம்மலத்தினது விரிவையுஞ் செயலையும் மலமகளென்னும் பதிகத்திலும், இதன் மேலான ஆணவமலத்தினது விரிவையுஞ் செயலையும் சிவத்திருவென்னும் பதிகத்திலும் விளக்கியிருத்தலினால் அவைகளை நூலாசிரியர் இங்கு விளக்கினாரில்லை. அன்றி, மலங்களின் பிரபாவங்கள் இந்நூலுள் ஆங்காங்குக் காணக்கிடக்கின்றன.

¶ இந்தத் திரோதையின் மற்றச்செயல்களையும் இப்பதிகத்து கூ - லும், ஆநந்தமான பொருட் பதிகத்து அ - லுங் காண்க.

*சிறந்த மாயையின் காரிய மாகத்
திகழொ ராந்துதத் துவமும்†மா யேயங்
கோல மோகினி மான்பர மெனவே
கூறு மாயையின் காரண மூன்றுங்
கூட்டக் காலதத் துவமுத லனைத்துங்
குடில மாயையின் மலமிவண் விரித்த
சால மலமொரைந் தனுட்டிரை யருளச்
சாரு நான்கனிற் பின்னைய விரண்டுஞ்
சாதி யொன்றென வாமத மூன்
தீகள் மூன்றென வறிதிநல் லோர்யே. எ.

* சிறந்த மாயை=சத்தப்பிரமமெனுஞ் சுத்தமாயை.

† மாயையின் காரியம் மாயேயமென்றும் இதனை அசுத்தமாயையின் காரியமாகச் சிலர் என சித்தியார் உ-ம் சூத்திரம் அ-ல் சொல்லியிருக்க இங்கே சுத்தமாயையின் காரியமாகச் சொல்லுவ தென்னையெனின்; அசுத்த மாயாகாரியமாகிய பிரவிர்த்திப் பிரகாசத்தைச் செலுத்துஞ் சம்டந்தஞ் சுத்தமாயா காரியமாகலின் அப்படிச் சொன்னதென்க. இவ்வாறே மேற்படி சூத்திரம் அ-அ-ம் பாட்டுக்களிற் சிவாக்கிரயோகியரும் பொருள் விரித்திருக்கிறார். இவ்விதம் பொருள் கொளாவிடின் மாயையும் மாயேயமும் ஒன்னேமையாகி மலம் நான்கென்றும் அவ்வாறுகாமல் சுத்த மகாமாயா காரியமான வைந்தவத்தைக் கூட்டி ஐந்தென்பது சித்தாந்தப் பிரகாசிகை முதலிய நூல்களுக்கெல்லா மொத்தமுடிபும், சிவப்பிரகாசம் உ-ம் சூத்திரம் கச-ல் "மாமாயைத்திரட்சியொன்று" என்றும் திருவருட்பயன் அறியுநெறி உ-ல் இருளாதி மும்மலங்கூறியதில் "மாயையிரண்டு***அவை நித்தியம்" என்றுங் குறிக்க வருபவைகளுக்கிசைந்த நியாயமுமாம்.

பஞ்சகிருத்தியம் இருபத்தைந்து வகைத்தென்பது.

முன்னர்க் கூறிய பரசிவன் றிருழிலை
மொழியக் கேளது படைப்பளிப் பழிப்பு

மூடுந் திரையறுக் கிரகமென் றைந்தா
முதலி லுளதருண் *மூன்றினு மிருந்தே
யன்னே யாமெனாந் மகிமையே சுவரி
யாதி பேதமுண் டாக்கலான் றணுவா
மாத்து மாக்களே மாயையின் கருப்பத்
தரங்கு நீக்கிடு சிருட்டியான் றழுக்காத்
துன்னும் பாசமோ னைந்தையும் விரித்துத்
துலக்குஞ் சிருட்டியான் றரியமந் திரங்க
டொனிக்கும் பதம்வனம் புவனமெல் லாமுந்
தோன்ற விழைப்பதான் †றழ்வகைப்பிறப்பு
மின்ன நாடொறு மிழைப்பதான் றெனவாம்
விளக்கி யுளவழி யேபடைப் பைந்தும்
வெளுக்குங் காழியன் றெழிலென வன்றொண்
விளைப்ப னென்றறி வாயுணர் வுடையோய். அ.

* மூன்றினு மிருந்தே என்றது பரசிவ பராசக்தியில் ஆயிரத்தி லொரு அம்சமாகத் தோன்றிய இச்சை ஞானம் கிரியை என்னுஞ் சத்திகளிலிருந்தென்றும். இவற்றுள், இச்சை ஆன்மாக்களே முத்தி யிற் சேர்க்கவேண்டுமென்னுங் குணமாகவும், ஞானம் ஆன்மாக்கள் இச்சித்த கன்மங்களே யறியுங் குணமாகவும், கிரியை ஆன்மாக்களின் கன்மங்களைப் புசிப்பித்துறக்கித் தொலைத்தருளுங் குணமாகவுமுள. இரத்தினத்திரயமும் இவ்வாறே யியம்பும்.

† ஏழ்வகைப்பிறப்பு=தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்.

படைத்த வொழுங்கிலந் தந்தரித் திருக்கப்
பாது காக்குமோர் திதியுமைந் தாகும்
பாது காப்பொழித் தழிப்பது மைந்தாம்
படர்ந்த வினையினு ழுன்றவன் றாங்கிக்
கிடத்தல் போனசை யாற்றுய ருழந்த
கிஞ்சி லுணர்வுயி ரிருந்திளைப் பாறக்

கிரியை செய்வது வேசான வழிப்பாங்
கிளருந் திரோதையை யினிச்சாலக் கேட்டி.
யடைத்த வினநுகர்ந் தொழிக்கவென் றுயிரை
யவிர்க லாதித்த் துவங்களிற் செலுத்த
லெனன மறிவினை விளக்கிய வருளை
யறியா ணவண மறைத்திட வுலகாஞ்
சடத்தை மெய்யெனக் காட்டுதல் சிவசை
தந்ய மதைவழு தாக்குதல் கருமந்
தனையே ருசித்திட வூட்டுத லெனுமைம்.
தன்மை யாயிருந் திடுநறி யுடையோய். கூ.

ஏக மலத்தினர்க் குயிரென வகத்தே
யிருந்து மிருமலத் தார்க்குமுக் கணனை
யெதிரி னின்றுமு மலத்தினர்க் கெழின்மெய்
யிலங்கு மாநுட னுயெதி ரிருந்து
மோகந் தணந்தவின் சுரர்புவி மாந்தர்
முதன்மற் றவர்க்குரு மாறிமுன் னுயு
மூல மநுச்சொபந் தவமிகத் தெவுளு
முகத்தி லேற்றவா தோன்றியு மருள்செய்
பாக வநுக்ரக மாவது மைந்தாம்
பகர்ந்த தொழில்களெல் லாமய னுதி
பஞ்ச மூர்த்தியஞ் செழுத்தென நின்று
பண்ணு றன்மைய தாமவ னவளஃ
தாக நவில்பிர பஞ்சமுன் னிலையா
மங்க மேயிலி யாயுமோன் மேனி
யதுவி யாபித்து நடத்துதல் படர்க்கை
யாமண் ணுமலி யான்சிவ ரூளை. கo.

ஓங்காரம்.

உட்கருவிவிளக்கம்.

சுத்தமாயையின் சிறப்பும், சுத்ததத்துவமைந்தும்.

வெண்டலையான்வந்த இயற்றரவினைக் கொச்சகக்கலிப்பா.

ஓங்கார மாதி*மூப்பத் தொன்முயங்கு னித்தியமாய்த்
தீங்கிகழு வீசனுக்குச் †செல்வமதி காரலய [பாய்
மோங்கிடனை யொன்றென்னும் பாசத்தார்க் கொள்ளுடம்
நீங்கா திரண்டினுமா நிற்குமுதன் மாயையுடைப்
பாங்கான தோற்றம் பகரக்கேண் மேன்பனையா
லூங்கு¶ நா தம்பிந்து நோக்குயருஞ் சாதாக்யந்
தூங்காத வீச்சுவரஞ் சுத்தவித்தை யைந்துங்கோள்
வாங்கா ததிற்மூன்று மன்னியொன்றி லொன்றுமே. க.

* விவரம்=பிரணவம், குடிலை, குண்டலி, பேரொளி, பிரமம், பரம், சிவம், மஹாமாயை, மாயை, மாயேயம், நாதம், விந்து, வைந்தவம் என்னும் - கஈ, சுத்தவித்தையாதி சிவதத்துவம் - ஙு, சூட்சுமை, பைசந்தி, மத்திமை, வைகாரி என்னும் வாக்கு-ச, நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை என்னும் விந்துகலை - ஞு, விஞ்ஞானகலர்கட்குரிய தநு, கரணம், புவனம், போகம் என்னும் - ச, ஆக ஈக. † செல்வம்=போகமென்றுபொருள்.

¶ பிந்துவில் நாதந்தோன்றிற்றெனவுஞ் சின்னூல்களிற் கூறப்படும். அஃது, சுத்தமாயைக்கே பிந்துவெனும் பெயரிருத்தல் பற்றியென்க.

தோன்றுமுங்கிற் றாபசிவஞ் சத்தி *சதாசிவனு
ரான்ற †மகேச்சுவர ரா¶ருருத்ர ருந்தோன்றி

---

* இச்சதாசிவனுமோ அணுசதாசிவர்க்குங் கர்த்தா.

† இம்மகேச்சுவரரோ அநந்த தேவர்க்குங் கர்த்தா.

¶ உருத்திர ரிங்குளவென்பதற் கிசையச் சிவப்பிரகாசம் உ - ம் சூத்திரம் ஈ - ல் "குடிலைதனின் மன்னுவரிவ் வகையைவர்" என்

மான்ற லிலாதவற்றின் பால்வதிவார் மாமாயை
யின்றவிந்துதன்னிலம்பத்தோ டொழுத்து மெண்பத்தோன்
றான்றுபத மேழ்கோடி யோங்குமறு மாமறையு
மேன்மிருனியா யோயுதிக்கு மேலுவன்ற மாமாயை
யான்மிராற் காணருவா *யாமிருபத் தாமொளிகள்
சான்ற கலைகளுமாத் தானிருக்கு நல்லோமே. உ.

அசுத்தமாயையின் சிறப்பும், வித்தியாதத்துவமேழும், மூலப்பிரகிருதியின் றோற்றமும்.

நித்திபமா யம்பரனர் ளுபப் பரிக்கிரக
சத்தியாப் பேழ்ச்சகத்தின் காரணமாச் சாற்றவுள
சுத்தமிலா மாயையுடைத் தோற்றங்கள் †வித்தேச
ரத்தனு ராற்கால மார்ந்தியதி வாட்கலையு
மொத்துதிக்கு மக்கலையி லோங்குவித்தை மாராக
தத்துவங்க டாமுதிக்குஞ் சாற்றிபவிவ் ‡வைந்தினின்று

றும் வரும். சிவாக்கிரயோகியர் சித்தியார் க - ம் சூத்திரம் சுசு - ன் உரையில் சுத்தவித்தை யுருத்திர தேவருக்கு அதிஷ்டேயமென்றும், ஞானப்பிரகாசர் ஷை சூத்திரம் ஈச - ன் உரையில் குணமத்தியத்திலும்பிரகிருதியக்கிரத்திலும் அராகாந்தத்திலு மிருக்கக்கூடிய ஸ்ரீகண்டருத்திரர் ஈசுரதத்துவத்திலு மிருப்பொன்றும் விளக்கினர். உருத்திரமூர்த்திக்காய இம்மேலிருப்பு, மகாப்பிரளயத்திலென்றாகிக் கலாம். அஞ்ஞான்று பிரமாதிகளும் விஞ்ஞானகலத்தன்மை யடைவதாகச் சித்தாந்தசாராவளி ஞாநபாதம் உசு - லு முரைக்கப்படும்.

* ஆயிருபத்து=பதினாறு. விவரம்- மேதை, அற்கீசை, விஷகலை விந்து, அர்த்தசந்திரன், நிரோதிநி, நாதை, நாதாந்தை, சக்தி, வியாபிநி, சமனை, உன்மனை, வியோமரூபை, அநந்தை, அநாஹதை, அநாசிருதை. இவைகளைப் பிராசாத கலைகளென்ப.

† வித்தேசரத்தனுர்=அஷ்டவித்யேசுராரிற் சிரேஷ்டரான அநந்ததேவர்.

‡ இந்த ஐந்தினின்றும் புருடதத்துவமுண்டாமென்பதைப் பௌட்கராகமும் பகரும்.

மெத்தெனவுண் டாம்புருடன் மேற்கலையி லே*யுருத்ரன்
சத்தியா லோர்பகுதி தாணுதிக்கு நல்லோயே. ங.

மூலப்பிரகிருதியின் றன்மையும், அதிற்றோன்றுஞ்
சித்த முதலிய ஆன்மதத்துவ மிருபத்து நான்கும்.

அப்பகுதி தானரும்பு நாற்ற மடக்கியதாத்
தொப்பியல்பு காட்டா தொடுக்கியகா †லவ்வியத்தச்
செப்பனவுங் காட்டிடுகாற் செய்யகுண தத்துவமா
முப்பரிசா மத்தின் முளைத்தன் மகத்தென்று
மிப்பரிசா யுள்ளவதி லேமூன்று மொத்தவிடங்
துப்புடைய சித்தமென்றுந் தூய்ச்சாத்து விகமங்ங
னுப்பிலது புத்தியென்று மோங்கந்தப் புத்தியின்முக்
கப்புடைய வாங்காரங் காணுமெனைக் காணல்லோய். ச.

ஆசற்ற தைசதமா மாங்காரத் தேயுணர்வாப்
பேசுசுத்த சாத்துவிகங் கூடிற் பெருமனமு
மூசுற்ற சோத்ராதி யா¶மைந்து முன்றோன்று
மேசற்ற ஞானசத்திக் கிவ்வைந்தும் பாத்தியமாங்
காசுற்ற புன்றொழில்வை காரியொடி ராசதந்தா
னேசிக்கில் வாக்காதி யா§மைந்து நீண்டுதிக்கும்
பாசத்தா லேகிரியைக் கிவ்வைந்தும் பாத்தியமாந்
தேசுக் குகப்பெருமான் செம்மாப்பிற் சேர்நல்லோய். ரு.

கள்ள வுருவுடைப்பூ தாதியகங் காரத்தே
புள்ளந் தணைமயக்குந் தாமதம்போ யுற்றிடுமேல்

---

* உருத்திரன்—சகலர்க்கு நிக்கிரக அநுக்கிரகங்களைச் செய்யும் பொருட்டுத் தலங்கடோறுந் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்குஞ் சைவப்பெருமான்.

† புருடதத்துவத்திற்குக் கீழாய இந்த அவ்வியக்தாதிகளைத் திரிசிகி, பைங்களம், சாரீரகோப நிடத முதலியவை கூறுவதுபோல மிருகேந்திராகமக் கலாதிப்பிரகரணமும் விளக்காநிற்கும்.

¶ சுரோத்ரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்ராணம் எனும் ஞானேந்திரியம்.

§ வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் கருமேந்திரியம்.

விள்ளுஞ்*சத் தாதியைந்து மேலவற்றிற் †ருழிமண்போற்
றெள்ளியவா காயங்கா றெயுவப்பு மண்ணைந்து
முள்ளபடி தோன்றிடுமுன் னேதியரா தந்தொடங்கி
மள்ளன்மா மண்வைமுப் பத்தாறு மாணுடமை
கொள்ளுட் கருவியெனக் கூறுமுன் னூன் மற்றுமுள
சள்ளைப் புறக்கருவி யாறுபத்துஞ் சாற்றுதுங்கேள். கூ.

புறக்கருவிவிளக்கம்.

சமானதிவாயு ல - ம், பூதகாரிய மிருபத்தைந்தனுட்
குரோதமுதலிய ரு - ம், ஓடன்முதலிய ரு - ம்.

சூக்குமவவ் வாயுவினிற் ¶றோன்றுஞ் சமானதி
தாக்கும் பிராணனீ ரைவைந்துந் §தாக்குயிரோ
யாக்கைத் தனஞ்சயனீ ரைவைந்தாய் மல்கிநிற்குஞ்
சூக்குமபூ தங்களைந்துந் தூலித்த மேல்விண்கண்
மூர்க்கமத மார்ச்சரிய மோகமூலா பந்தோன்று
மூக்கமுள வாயுவினு லோட னடத்தனிற்றல்
மீபாக்கற் றிருத்தல் கிடத்தலுமே பூக்குமரோ
தீக்குள்ள கூற்றினையுஞ்செப்புதுங்கேள் சீருடையோய்.எ.

உண்டிமுதலிய ரு - ம், தீர்த்தமுதலிய ரு - ம், தோல்முதலிய
ரு - ம், நாடி ல - ம், ஏடணை ஈ - ம், வசனதி ரு - ம்.

உண்டியுறக் கம்பீதி யொண்டொடியார் சேர்க்கைமிடி
மண்டியசோகம் பைந்தினைவம் மாத்தீக்கா மப்புவிற்குத்

---

* சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பிரமாண்டகாரணமான தன்மாத்திரைகள்.

† நாதிமண்போலென்றது குடம்போலத் தன்மாத்திரைகள், அதிற் பூசிய மண்போல ஆகாசாதி பூதங்களென்றும். இதை அவ்வியங்கபாவ மென்ப.

¶ சமானன், வியானன், உதானன், அபானன், பிராணன் என்பன.

§ தாக்குயிரோ=அந்தப்பிராணன்றானே.

|| நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன் தனஞ்சயன் என்பன.

தண்டூர்த்தஞ் சோரிமச்சை சத்தாய மூளைவிந்தா
மண்டனைக்குத் தோலெலும்புவார்நரம்பூன்கேசமைந்தாம்
விண்டமண்ணிற் ரூனைமென் மேனுடி யோர்*பத்து
முண்டாமுன்சாற்றவின்னிலாங்கிடு†மூன்றேடணைமுற்
கண்டகரு மேந்திரியங் கன்ம¶வச னுதியைந்துங்
கொண்டுவரு மென்றனது கூர்த்தபுத்தி யாலறிபே. அ.

குணம் கூ - ம், வாக்கு ச - ம், தத்துவமென்ற
சொல்லி னுண்மையும்.

மூலப் பகுதிவழி §முக்குணமு முண்டாகு
மோல||வாக் கோர்நான்கு மொண்விந்து விற்ரூன்றுங்
கோலமுட னூறுபத்துங் கூறினுங் கூறியவை
யாலவித்தி லால்கிளைத்தாற் போலா மவைகளுக்குத்
தாலமிசை நித்தமெனுந் தத்துவப்பேர் சார்ந்தவுண்மை
மேலறைந்த பூதலயத் தோடுசாம் விண்ணவர்க்கு
மாலழிவில் லாவமர னென்னுஞ்சொல் வாய்த்ததொக்குஞ்
சிலமூளா $யெல்லாஞ் செனித்தவழி யேயொடுங்கும்.

தத்துவ நியதிநிரல்.

முன்னுரைத்த வுட்கருவி முப்பத்தா றுட்சிலவுட்
பின்னுரைத்த வாறுபத்தும் பேசா தடங்குவதாற்

---

* சுழுமுனை, இடகலை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி என்னும் பத்து.

† மூன்றேடணை = புத்திரன் அர்த்தம் உலகம்.

¶ வசனுதியைந்து = வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆநந்தம். இவை கன்மேந்திரியத்தின் றெழிலென்றும்.

§ முக்குணம் = சாத்துவிகம் இராசதம் தாமதம்.

|| வாக்கு நான்கையும் இப்பதிக முதற்செய்யுளின் குறிப்பி லறிக.

$ எல்லாமென்னும் இந்த கூசு - எண்கள் காட்டிச் சிலர் இட்டம்போலத் தத்துவங்கள் வகுத்திருக்கும் புத்தகங்களும் பூமிசை யுள ; இந்நூலாசிரிய ரிங்கு விளக்கியவெல்லாம் மூலாகமங்களின் நித்தாந்தப்படிக்கென வுணர்க.

றுன்னுமுப்பத் தாறுமே சோதிக்கத் தக்கனவாந்
தன்னறிவா லிந்தியத்தைத் தானேக்கிற் பூதமுமுள்
ளுன்னுகர ணங்காணி னேங்கந்த விந்தியமும்
பின்னியவே வா *சோழ்காணிற் பேய்க்கரண மாவதுவு
மின்னெ†னைந்து நோக்கிலந்த வீணைழு ¶மெய்ப்பார்க்கிற்
சொன்னவைந்து மின்றருணைப் பேரனன்பிற்ரேய்பவனே.

இரணியகருப்பன்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிரமாதி பஞ்சகர்த்தாக்கள் வியாப்தி.

§இரணிய கருப்ப னென்பாற் கிருநிலந் தொடுத்து மூலம்
வரையினும் வியாத்தி யாகு மாலுருத் திரன்ம யேசன்
பரசதா சிவனென் பார்க்கு முறைமையே பயிர்ப்புமாயை
‖விரிவித்தை மேயசுஞ்சாதாக் கியம்வரைவியாத்தியாகும்.

§ சுத்ததத்துவமைந்தின் ரேழில்.

நாதம தறிவா நிற்கு நலவிந்து தொழிலா நிற்கு
மேதமில் லாத சாதாக் கியஞ்சம னெனவே நிற்குங்
கோதிலீ சுவர ஞானங் குன்றியொன் றுயர்ந்து நிற்குஞ்
ஞுதக மேவா வித்தை தொழிலயர்ந் தறிவா நிற்கும். ௨.

---

* மாயை காலம் நியதி கலை வித்தை ராகம் புருடன் எனும் வித்யாதத்துவம் ஏழு.

† சுத்தமாயாதத்துவம் ஐந்து.

¶ இங்கு மெய்யென்றதற்குப் பரிசுத்தமாயத் திருவருளென்று பொருள்.

§ இவ்வுண்மைகளை நிரீசுரசாங்கிய வொளூரியாதி சிந்தாந்தசாராவளியின் சரியாபாதத்து சூ - சஅ - ம் சுலோகங்களிலுங் காணலாம்.

‖ விரிவித்தை = சுத்தவித்தை.

§ இங்கு வருகிற அறிவு தொழிலென்பவை பரையுடைய ஞானசத்தி கிரியாசத்திகள்.

* வித்யாதத்துவமேழின் றொழில்.

காலமென் பதுதான் சென்ற காலவெல் லையுமா நாப்பண்
காலமாம் பலனு மாவந் தெய்துவ தாயுங் காட்டிஞ்
ஞாலநா னனவே நிற்கு ஞாட்புடை நியதி தானும்
பாலமாள் வான்போற் கன்ம பலத்தையுள் ளளவு நாட்டும்.

கலிமலஞ் சிறிது நீக்கிக் காரிய மதனைத் தூண்டு
மலிவிலா தேங்கு வித்தை மதிப்பொறியறிவைத்தூண்டு
மலிவுடை யராகங் கன்ம மருத்துமிச் சையினைத் தூண்டுஞ்
சொலுமிவன் †புருடனுண் ணுஞ்சூழிடை ¶மாயையாழ்த்தும்.

ஆன்மதத்துவம் உச - ல் அந்தக்கரண நான்கின் றொழில்.

உச்சித மாய சித்த மொன்றினை நினைக்கும் புத்தி
நிச்சயஞ் செயுமாங் கார நினைத்தது பிடித்தெ ழுப்புங்
கிச்சென மனது பற்றுங் கிளக்கிய வாங்கா ரந்தா
னச்சமி லாது மோக்க மளவுங்கால் பெருக்கி நிற்கும். §.

பலமனம் விகற்ப சங்கற் பங்களை யாற்றும் போழ்து
சலமென வாகும் பின்னே சார்ந்தவிந் திரியவா யிற்க
ணுலவைபோ னுழைந்தப்பாங்க ருற்றபோழ்தசலமென்ரு
மலிதியிது பிடித்த தைத்தா னகம்புத்தி வாங்கி யாயும். கூ.

---

* இங்கு வருகிற காரியம் அறிவு இச்சையென்பவை ; பசுவுடைய கிரியாசக்தி ஞானசக்தி இச்சாசக்திகள். இவற்றுள் கிரியை அறிஞரைத் தொழுவதாகவும் ஞானம் பேரறிவாகவும் இச்சை அறிஞரொடு மருவுவதாகவும் சீவன்முக்தியில் வியாபரிக்கும். பரமுக்தியினும் இவைகளில்லையேல் சிவபோகம் அநுபவமாதல் செல்லாதென்க.

† இப்புருடதத்துவம் உள்ளத்தக்கரணமாம்.

¶ இந்தத் தத்துவம் மாயாகாரணத்தினின்றும் வெளிப்படுகிற காரியமாயை.

§ இந்த மனத்தின் றொழில்களை ஆநந்தபூர்த்தியுரமெனுந் திருப்பதிகத்து எ - லும் இன்பப்பிர வாக சிவமெனுந் திருப்பதிகத்து எ - லும் நன்கு காணலாம்.

காண்டிறங் கரண நான்குங் கண்களைப் போன்று விக்குப்
பூண்டவுட் கருவி யல்லாற் போதமன் றிதனை யாயார்
சேண்டருமறிவையென்பார்கீழ்ப்பதுவெனவோர்ந்தென்ற
னுண்டவ னறிவான்மின்னுமறிவுவேறெனக்காண்மைந்தா.

ஞானேந்திரியமைந்தின் றொழில்.

தினமுநற் சோத்ர மூர்த்தஞ் சிங்குவை யாக்கி ராண
மெனுமறி கருவி யைந்து மேதமில் வான மாதி
நினதவைம் பூதத் தின்பா னின்றுசேர் கருவி யுற்றுக்
கனியொலி பரிசங் காட்சி யறுசுவை வாசங் காணும். அ.

ஞானவிந் திரிய மைந்து னையனமொன் றேதா மத்தா
லீனமில் லாது வியாபித் தேதெதான்றைக் கிரகித் தேகு
மேனைய நான்குந் தம்பா லெய்திடு பொருள்க ளேத்தா
மூனமில் லாது வாங்கி யொடுங்குமென் றுணர்தி மன்னோ.

கன்மேந்திரியமைந்தின் றொழில்.

பந்திபாய் வாக்குப் பாதம் பாணிபா யுருவு பத்த
மைந்துமா காய மாதி யைந்திடை யிருந்து பேசு
மிந்தமன் னடைக்கு மேற்கு மிடிமலங் கழிக்கு மாட்டில்
விந்துவைவிடுமென் றெண்ணுய்வியன்புகழ்க்கவித்தேவாளே.

புகழ் பூத்த.

தாவுக்கோசகக்கலிப்பா.

தன்மாத்திரையைந்தின் றொழில்.

புகழ்பூத்த மாந்திரநூல் புகல்வதுபோ லொலிபரிசந்
திகழ்பூத்த வுருவிரசஞ் செறிகந்த மெனுமைந்துந்
தொகைபூத்த சோத்ராதி கட்கேது வாயிருக்குந்
தகைபூத்த வெம்பெரிய சாமியருட் டுணைகொண்டோய்.

பூதமைந்தின் றொழில்முதலியன.

விண்ணினுக்கு வடிவுவட்டம் விளங்குநிறம் புகைகுணங்
கண்ணகன்ற நிரந்தரநற் கருமமது போக்குதலாம்[தான்
வண்ணவெழுத் ததுவகர மன்னுதெய்வஞ்சதாசிவனென்
றெண்ணியறியெம்பெருமாளெசிலருட்டுணைகாண்டோய்.

நிறம்பெருகு வாயுவிற்குத் திகழ்வடிவ மறுகோண
நிறங்கருமை குணந்திரட்ட னிகழ்கன்மம் விம்முதனன்
மறம்பெருகு மக்கரம்யவ் வாகுந்தே மயேசுரனென்
றறம்பெருகு மெம்மான்க ணன்புடையோ யறிகுதியால்.

முணங்கெனநின் றெழுமனற்கு முக்கோண நிறஞ்செம்
குணஞ்சுடுகை விண்ணுலர்த்தல் குறித்திடுமக் கரம்ரகர[மை
மணங்குவருத் திரனென்ன வறிதியெமையாண்டருளெண்
குணங்கிளருங் குகதேதவைக்குரங்குமுணர்வள்ளோய.சு.

நரமுற்ற வப்புவினுக் கிருகோண நிறம்வெண்மை
சோரமுற்ற குணநிகழ்ச்சி குன்றுத தொழில்வளைத்த
றீரமுற்ற வரிவகரந் தேவதைதமா லெனவுனது
சோரமற்ற கூருணர்வாற் சோதித்துக் காண்மதலாய். கு.

நன்னிலமென் பதற்குருவ நாற்கோண நிறம்பொன்மை
மன்னுகுண மதுகடின மல்குதொழி றுன்சுமத்தல்
சின்னவெழுத் ததுலகரந் தேவதைநான் முகப்பிரம
னென்னவறி யெம்மானின் பெஞ்ஞான்றுமேற்கவுளோய்.

ஐந்தென்னும் பூதவகுப் பாவதுகே ளுள்ளுடம்பி
லிந்திரிய வாதார மெனுமுறையிற் சூக்குமமாந் [தரமா
தொந்தியுடல் வளர்த்திடஞ்செய் தொழின்முறையி லாந்
முந்தியுல கப்பொருளா யோங்கொழுங்கிற் பாகியமாம்.

---

* அகரமென்றதை "ஹ" என்றறிக.

ஏசினிறம் விண்படிக மென்றுசர்வ ஞாலேத்ரம்
பேசுமது மொக்குமுயர் பெற்றியினல் வாயுவிற்கு
வீசுமுரப் புள்ளதனன் விழிக்கெட்டா வுருவுளதென்
ருசங்கை நீத்தறியா யலகையுருப் போலுமெண்ணுய். அ.

இடவிசும்பிற் குள்ளசத்த மென்னுந்தன் மாத்திரைதான்
படர்பூத நான்கினுமப் பாங்காகக் காண்டலிறற்
படமான சிவிறியசைப் பால்வெளியிற் கால்வரலாற்
சட*வருவ வவ்விசும்பொன் றுண்டெனலுஞ் சத்தியமே.

பிருதிவிநீ ரனல்வாயுக் களினிறைந்த பெருயாணு
முருவாரண் டத்தினுளும் புறமுஞ்சூழ்ந் துளகண்டப்
பொருளாகு மேயல்லாற் பூரணமவ் றெனவறிவா
யருணகிரிக் கிறைவனெனு வவிர்குகனைப் படர்பவனே. கo.

அறைமலிந்த.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தத்துவம் ஈசு - க்கும் அபிமானதேவதைகள்.

அறைமலிந்த பனுவலுரைத் துளவ ழித்தா
யாறுறு கருவிகட்கு மபிமா னச்சூர்
பறைதுமுத லொலியாதி யோசைந் திற்கும்
பந்திமுறை யாய்த்தானே சிவனுர் சத்தி
மினறதனைந்த சதாசிவனல் லைந்த தேவர்
விளங்குசுத்த வித்தியா தேவி யென்ரு

---

* இங்கு ஆகாயத்தை அருவமென்னலால் அதன்மேலுள்ள ஈக - கருவிகளும் அவைகளின் காரணமாயைகளும் அருவமென்றறியவேண்டும். அருபத்திற் பலபேதஞ் சொல்லலாமோவெனின் ஆகாயம் திக்கு காலம் என்பவை அருபமாயிருப்பதிற் சிறிது தாழ்வு முயர்வுங் காணப்படுதல் போலென்றறிக. அருவ ஆகாயம் பிண்டத்தில் ஆங்காரவிருத்தியை யனுசரித்துச் சகல ராதிகளு மிருக்கும்.

மறைகளெலாம் புகழ்ந்தை யாய சுப்ர
மணியத்தை மறவாத மனத்தேதாய் காண்டி. க.

மாயையென வுள்ளதற்கு மாயா தேவி
வளர்கால நியதிகட்குக் கால ருத்ரன்
ரூபுமொளிக் கலைதனக்குக் கலைப்பேர்த் தேவி
துலங்குவித்தை யென்பதற்கு வித்யா தேவி
மேயவரா கம்புருட னிரண்டி னுக்கு
மெய்யிலங்க ராகபக வானென் றிறண்ணுய்
நாயணவா வெம்பெருமாள் கருணை நேடு
நுணங்கியோர் நெறிச்செலுநன் னெக்க முள்ளாய்.

சித்தமெனுங் குணத்திரய மதற்கு ருத்ரன்
றிருமகளின் கொழுநனயன் சிறந்த புத்திக்
குத்தமஞ்சேர் புத்தியின்பே ருடைய சத்தி
யோங்ககங்கா ரந்தனக்குப் பீம நாதன்
றத்துமன மென்பதற்குத் தாமத் திங்கள்
சார்ந்துளசாத் ராதிகட்கு முறையே மூவாச்
சுத்ததிக்கு ரூபிமிடற் காற்று வெய்யோன்
ரூயத்தே வசுவநிதே வதைகள் கண்டாய். கூ.

வாக்காதி தொழிற்கருவி யோரைந் திற்கும்
வழிமுறையே யக்கினியா யிரநோக் குள்ளா
னெக்கேறு பேந்திரன்மா மிருத்தென் கண்ணு
னானமிலா மாத்திரையைந் தினுக்கு நேரோ
மாக்காமர் விண்ணீசன் வாயு வங்கி
வருணன்பூ தேவியென்றும் பூதங் கட்கு
நீக்காவவ் விண்ணீசன் முதலி னேரோ
நிகழுவகைத் தேவதைக ளென்றுங் காண்டி. சு.

சுத்ததத்துவமைந்துஞ்சுத்தமென்றும், பிரேரக
காண்டமென்றும்பெயர்பெறுமென்று.

புகன்றவைந்து தத்துவமுந் தத்தந் தூய
புவனவெல்லை யடைந்தார்க்குச் சருவ ஞான
மகன்றசெயல் கனிவிளக்கு வதனற் சுத்த
மாகுமிந்த வைந்தையுங்கொண் டசுத்த மாயை
முகம்பிறந்த யாவையுந்தாஞ் சிவனார் சத்தி
முடுக்கிநடத் திடுதலினற் பிரேர கக்கூ
றுகம்புகலப் பெறுமெனவு மறிதி தீர்த்த
னுடையவடிக் களிபெருக்கி யுயரு நல்லோய். ரு.

வித்தியாதத்துவமேழுஞ் சுத்தாசுத்தமென்றும், போக
காண்டமென்றும் பெயர்பெறுமென்று.

வித்தையெனு மோரேழு மறிவைக் கிஞ்சில்
விளக்குதற்குச் சாதனமா யிருக்கு மாற்றற்
சுத்தமுஞ்சூக் குமரூபத் துவாரத் தாலே
சுகதுக்க மோகமய லளிக்கு மாற்றற்
சுத்தமிலா வசுத்தமுமா மதனு னூல்கள்
சுத்தாசுத் தமெனவிணைத் தூைக்கும் பின்னுந்
தொத்துயிர்க்குப் போகமவை யருத்த னேக்கிச்
சருங்காத போகக்கூ றெனவுங் கூறும். சு.

ஆன்மதத்துவ மிருபத்துநான்கும் அசுத்தமெனவும், போக்கிய
காண்டமெனவும், மும்மாயைகளும் பரம் சூக்குமம்
தூலமெனவும் பெயர்பெறுமென்று.

அறுநான்குஞ் சிறிதறிவை விளக்கி னனு
மதிமோக மாதலினு னசுத்த மாகுந்

தொறுவான வுயிர்களுக்குப் போக்ய மென்னுச்
சொலும்பொருள்கள் புசிப்பிக்கப் படுத லாலவ்
வறுநான்கும் போக்கியக்கூ றுகு மூன்று
யறைந்தகண மாயைகளு முறைமை யாக
வுறுநாமம் பரஞ்சூக்கந் தூல மாமென்
றுணர்வைகுகப் பிரமமதற் காளா யுள்ளாய். எ.

மாயையிலும் பிரகிருதியிலுந் தோழினடாத்துபவரும்,
முத்தோழின் மூர்த்திகளும் இன்னின்னரென்று.

ஈசரத்தி லிருக்குமநந் தேச னென்பா
ரிடைமாயா காரியத்தை யிழைப்பார் மேன்மை
பேசுவித்தை தனிலிருக்கு மொருசீ கண்டர்
பேரசுத்தப் பகுதியின்முக் குணங்க ணன்றுக்
கோசமறுத் துதிக்கவிரித் தாக்கல் காத்தல்
கோறலெனு முத்தொழிலு நடத்தா நிற்பார்
நேசமுற்ற விராசதநான் முகன்சாத் வீக
ரெடியன்று மதக்கால வுருத்ர னீல. அ.

வித்தியாதத்துவமேழையுஞ் சுத்ததத்துவமைந்தும்
அவ்வைந்தையும் பரனுடைய இச்சாஞானக்
கிரியைகளுஞ், செலுத்துமென்று.

அருவநடு மாயைதனி யாதி நாத
மாவதுமந் நாதமதை யறிவுங் காலம்
பெருகுகலை நியதிகளி யாதி வித்தும்
பெரியவதைக் கிரியையுங்கீ ழாய வித்தைக்
கருவியைமேல் வித்தையது மதனி மேதைக்
கவினறிவு மராகத்தை *யநந்தர் சாருஞ்

---

* அநந்தர்சாரென்றது ஈசரதத்துவம்.

விரியதனை யிச்சையுமம் புருட னேத்தான்
வியன்சாதாக் கியமுமதைத் தொழிலு மோச்சும். கூ.

பாரிடத்திற் பசு யாதொன்றை யறியவேண்டின்
கஅ - கருவிகளின்றியறியமாட்டாதென்று.

கறையிகந்த வைந்துமிடை யேழு மந்தக்
கரணமொரு நான்குமைந்து பூதத் தொன்றும்
பொறியிலொன்று மாகவுள பதினெட் டின்றிப்
போதவுயி ரொதையுமறி யாதென் றோரா
குறைவடைந்த மாக்களெலா நாமே காட்சி .
கூர்ந்தறிவோ மெனும்பிதற்று முனரோ சொற்ற
விறைவனருண் மூன்றுமறந் தெழுந்த தென்ன
வீண்டறிதி யருணகிரிக் களியுள் ளாயே. கடு.

பூப்புகழ்ப்பிரமன்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவபேதம் ஒன்பதில், சகளத்திருமேனியும்,
அதிகாரஸ்தானமும்.

பூப்புகழ்ப் *பிரமன் விண்டு வருத்திரன் பொறிம கேசு
மாப்புக ளொன்று மாசி லரனுக்குச் சகள மேனி
யாப்பறு மதிகா ரத்தின் முனமா யவிரு மென்ன
மூப்புடைப் பனுவ லெல்லா மொழிவது மறிந னீரோய்.

* கனகப்பதிகத்திற் கழறியவாறு பிரம விட்டுணு உருத்திரர் ஆன்மாக்களாயிருக்க ஈண்டவரைச் சிவபேத மென்பதென்னையெனின் ; பிரமாவினிடஞ் சிவனுடைய கிரியாசத்தி பதிந்து கருமப்பிரதானமும் அதற்குரிய ஞானப்பிரதானமுமாயும், விட்டுணுவினிடம் ஞானக் கிரியாசத்திகள் சமானமாய்ப் பதிந்து ஞானமுங் கருமமுஞ் சாம்பமாயும், உருத்திரரிடம் ஞானசத்தி பதிந்து ஞானப்பிரதானமாயுமிருத்தல்பற்றிச் சம்புபக்ஷமாய சிவபேதமென்றதென்க.

நிஷ்களசகளத் திருமேனியும் போகஸ்தானமும்,
நிஷ்களத் திருமேனியும் லயஸ்தானமும்.

நிகழொரு சதாசி வந்தா னிட்கள சகள மேனி
யிகழ்வறு போகத் தான மென்னவாம் விந்து நாதந்
திகழரும் பரம சத்தி சிவமெனு நான்கு மேலோர்
புகழுநிட் களமெ மாக்கப் புடையென வாமுன் னேற்கை.

அபரவிந்து அபரநாத மென்னுமிரண்டும் பரவிந்து
பரநாதங்களி லடங்குமென்று.

ஈங்கரும் பரம சத்தி சிவமென விசைத்த வைதா
மோங்கிய தூய மாயை யுழியுள பரவிந் தாசை
யாங்கரு விகளை யச்சா ரபரவிந் துவுமா சையூ
நீங்குரு தடங்குங் கண்டாய் நிருமலகு ருற்காட்பட்டோய்.

நிஷ்களாதீதம்.

நவந்தரு பேத மாக நவிலுமுக் கூறுந் தாண்டிச்
சிவந்தரு சிவந்தா னிற்குஞ் செறிந்துள வதைபோ சிவ
ரவந்தெறு மதீத தேதவென் றரியசித் தாந்த நூல்க
ணவின்றிடு மாணத் தீதவ நாமடை குசிகசன்கண்டாய்.

பிரமாண்டப்பிரளயம்.

சதுர்யுக நான்கைந் நூறு சார்ந்தநா *ணிவிர்த்தி மேய
பொதிர்புவ னங்க ளோய்வைப் போதயன் புரிவா ரத்ந்த
முதுபிர மாண்ட நாச மென்றுமவ் வயனுண் மூன்று
சதமறு பதுமொன் றுயிற்†சமையென் றுஞ்சாற்று மேனூல்.

பிராகிருதப்பிரளயம்.

அச்சமை பார்த்த மாயி னரும்பிர கிருதி யந்த
முச்சிதப் பதிட்டை யின்கண் ணுளபுவ னங்க ளோய்வை

* நிவிர்த்தி=நிவிர்த்திகலை. † சமை=வருடம்.

யச்சுத னயர்வா ரத்தைப் பிராகிர்த நாச மாமென்
றுச்சிநூலிலாதுங்கண்டாயொருபரன்றனக்காட்பட்டோய்.

மத்திமப்பிரளயம்.

பகருமற் றொருரூப ரார்த்த மாயவை பரார்த்த மாமே
லிகலிரண் டினிலு முக்கூற் றீறெழுந் திடுமெவ் வாறே
லகல*வித் தையின்வளாகமனேத்தையுமுருத்ரர்தெய்ப்பார்
மகிமைநூ லிதனே மைந்தா மத்திம நாச மென்னும். எ.

மஹாப்பிரளயமும், பிரதமமஹாப்பிரளயமும்.

சாந்தியின் புவன மெல்லாஞ் சாம்பிட வந்தர் செய்வார்
சாந்தியா தீதை யின்பாற் றரித்தமேற் புவனம் யாவு
மோந்தகைச்சதாசிவன்ரூலைடுக்குவாரிவையொழுங்காப்
பேந்தரு மகாசங் காரம் பிரதம மாத்தெய்ப் பென்றும்.

ஐந்துபிரளயங்களு மவைகளின்றோற்றமும் முதல் - க,
கடை கூ, - இடை - க, ஆகத் தினசங்காரம் தின
சிருஷ்டி, மஹாசங்காரம் மஹாசிருஷ்டி,
அவாந்தரசங்காரம் அவாந்தரசிருஷ்டி
யெனவும் பெயர்பெறுமென்று.

தெரித்தமுன் லைடுக்கந் தாற்றந்தினமெனவாகுமீற்றில்
விரித்தவொர்மூன்று தெய்ப்பும்விதித்தலுமகாவென்றுரும்
பிரித்துமத் தியத்திற் சொன்ன பிரகிரு தியிலொர் தெய்ப்பு
முரித்துள படைப்பு மங்க ணைங்கவாந்தரமென்றுரும்.கூ.

பரார்த்தம் இனைத்தென்பது.

ஏகமே முதலாப் பப்பத் தெனவரு†மிரு தாஞ்சார்த்
தாகமிரு கைபரார்த்தமாமெனச்சொலுநூற்றீரல்கண்

* இந்த வித்தியாகலியிலுள்ள புருடத்தவ புவனங்கள் அராகதத்தவத்திலுள.

† இச்சங்கியை விபரம் - க. ஏகம், உ. தசம், கூ. சதம், ச. சஹஸ்ரம், ரு. தசசஹஸ்ரம், சு. லக்ஷம், எ. தசலக்ஷம், அ. கோடி, கூ. தச

மாகதி யழுத வார்வாய் மடித்தபொன் னருணைப் பேரான்
மோகமா வலித்த வெம்மான்முழுநிழற்காட்பட் டோயே.

ஆ திருப்பா - கஂஂகூ.

புவன வோய்வு.

கலிநிலைத்துறை.

பிரளயகாலத்தில் ஆன்மாக்களினிலைமையும்,
புவனபதிகளினிலைமையும்.

புவன வோய்வினி லங்னங னேயுள பூதக்
குவவி பாவைபு மங்னங னேயுள கோலப்
புவன நாயகர் சத்தியா லதிட்டித்துப் புரப்பா
ரவரு ளேநசை நீத்தவர் மேன்கதி யடைவார். க.

சுத்தமாயையினுங் காலங்கலைக ளுண்டென்று.

ஏசு மாயையிற் காலதத் துவமுள் தேய்ப்பத்
தேசு மாயைதன் னிலுமுள தாமினுந் தெரிக்கி
னேசை நாதவிந் திபிகைதீ பிகையுட னெளிசெய்
யேசில் ரோசிகை மோசிகை யூர்த்துவை யெனவாம். உ.

நாதகலைகளைந்தில், இந்திகை தீபிகை
ரோசிகைகளின்றொழில்.

கரும வாவியி லெங்குமுண் டாம்பிர காசம்
பெருக வேவெபரி தாச்செபு மிந்திகை பிறங்கு
மரிய தீபிகை யதைமிகப் பெரிதென வாற்று
மிருளில் ரோசிகை மிகமிகப் பெரிதென விழைக்கும். கூ.

கோடி, கஂ. பத்மம், கக. கர்வம், கஉ. நிகர்வம், கங. பிருந்தம், கச. மஹாபத்மம், கடு. சங்கம், கசு. மஹாசங்கம், கள. சமுத்ரம், கஅ. மஹாசமுத்ரம், கக. மத்யம், உஂ. பரார்த்தம். இவ்விதமே சித்தாந்த சாராவளி ஞானபாதம் உடு - வது சுலோகத்திலு முண்டு.

மோசிகை ஊர்த்துவகைகளின் ரூழில்.

அருத்த மேனிவித் தேசுரர்க் கரிமலங் கிஞ்ச
மிருத்த லாலதைக் கழற்றிடு மோசிகை யிதனற்
பெருத்த வநுக்ரக மேமற்றநல் லுயிரினைப் பிறவா
வொருத்த னெனடி சமம்பணு முயர்ந்தவூர்த் துவகை. சு.

விந்துகலைகளைந்தில், நிவிர்த்தி பிரதிஷ்டை வித்தைகளின் ரூழில்.

விந்து வின்கலை களினிவிர்த் தியதுதன் மேற்கண்
வந்து ளார்க்கொரு சங்கற்ப விடுதியை வழங்கு
நிந்தை தீர்பிர திட்டையவ் விடுதியை நிறுத்து
மந்த மேன்மையி லரியவித் தையதினை விளக்கும். ரு.

சாந்தி சாந்தியாதீதைகளின் ரூழில்.

சுத்த மாயவவ் வறிவடைந் தோர்க்கிருஞ் சூர்செப்
வித்த ராக மவாப்பகை யாகிய விகற்ப
புத்தி யானதைத் தனித்திடுஞ் சாந்தியப் போது
சித்த மேதுமின் றலர்த்திடுஞ் சாந்தியா தீதை. கூ.

இந்த நீர்மையை யேசும்மா விருந்திட லெனவ்
மந்த மாதியின் றவிர்பர வெளியுரு வாகப்
பந்த மோவை நிலாவுநிட் டையெனவும் பழுதி
லெந்தை நூல்க ளியம்பிடு மலர்முகத் தெழிலாம். எ.

பஞ்சகலாபுவனம் இருநூற்றிருபத்து நான்கின் பாகுபாடு.

இரைத்த வோர்நிவிர்த் தியிற்புவ னங்களூற் றெட்டே
யரைசக்கு மோர்பதிட் டையினக மைம்பதா டோறு
பரைசப்பைந் நாப்பணி லெழிரு பதுநல சாந்தி
மிசைப்பன் னெட்டிவை மேற்பதி னொன்தென மிளிரும். அ.

சுத்தபுவனம் கூஊ - அசுத்தபுவனம் சகஉக - என்று.

திரண்ட வீரகா லாக்கிநி யுருத்திரர் திணைதொட்
டிருண்ட மோக்கமி யாவரா சிருதவெல் லிவனை
யிரண்டு நூற்றிரு பாலைரு நான்கெனு மிவற்று
ளிரண்டு பாகுசுத் தமும்பிறி தசுத்தமு மெனவாம். கூ.

ஆறத்துவா விபரம்.

அத்து வாக்களி லொன்றென வாகுமைங் கலிக
டத்து வம்பத மெழுத்துமந் திரஞ்சான தலமா
மத்து வாக்களை நைந்திலும் விரவிபுள் ளவெனைப்
புத்தி யாலுணர் புகழ்ப்புத னிறைநினைப் புளமே. கo.

அமிழ்தமர்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாக்குகளின் மேழில்.

அமிழ்தமர நிறைஞ்சுபிர மணியனது
தண்ணளியா யறைதுங் கேண்மோ
வைந்துகலை களிலுலங் காரியமாம்
வாக்குகளி லமலச் சோதி
திமிரொலியின் வடிவாக நாபியடி
தனிற்சூக்மை சேர்ந்து நிற்குந்
தியக்கமுடைப் பிராணவடி வாகநினைப்
பிடையெழுத்துச் செனிப்ப தற்கு
நிமிர்நினைவாக் கருக்கொடுநன் னுபியிற்பை
சந்தியது நிலைத்து நிற்கு
நிகழ்பிராண னேவடிவா யெழுத்துருவைப்
புத்தியினி னிறீ இ யுள்ளே

யிமிரொலியா ரெஞ்சமிடற் ரிடைவதியு
மத்திணை*மற் ரெரன்று தான
னெனுங்காலும் பிராணனுமாய் வாய்நாவி
னடியிருந்†தைந் திடத்துந் தோன்றும். க.

தோன்றுமிந்த வைகரியின் விருத்தியீத
தொழிலிந்திரியத்தோன் ருகுஞ்
சொற்றவிந்த நான்கொழிய மூலமதிற்
பிரணவத்தின் சொரூப மாயு
மான்றவரன் ரேறரோ லறிவரிதாய்
நான்கினுக்கு மாதி யாயு
மவிர்கின்ற பஞ்சமையென் ரெருவாக்கு
நாதவுரித் தாயுண் டோதை
சான்றவொரு வைகரிதொட் டரியகூக்
குமையளவுஞ் சாற்று நான்கும்
தகுசுத்த வித்தைமுதல் விந்துவரை
யுளநான்கின் சார்பி லையெஞ்
ஞான்றுமுறை யேயருளா லியங்குமிவை
மேவலத்தீத நவிந்தோய்ந் தோனை
நனவினுக்குச் செலுத்திடவைந் தவத்தைகளாப்
பொருந்துமென நனிதேர் வாயே. உ.

தேர்ச்சியுளார் நிட்டைதனி லிருக்குங்கால்
விணைநுகர்வான் செலுத்த மெள்ளச்
சிம்புவது சூக்குமையின் மேனுத
மித்தகைய நிறமை வாய்ந்த

---

* மற்ரென்று=வைகரி. † ஐந்திடம்=நா, அண்ணம், அதரம், பல், மூக்கு.

¶ பஞ்சமை தூரியாதீதத்திலும் குட்சமை தூரியத்திலுமெனுங் கிரமமாக ஐந்திற்கு மறிக.

வேர்ச்சிலையைப் புறக்கருவி களிற்போட்ட
காரணங்கேள் விமல நாதம்
விந்துவெனு மிரண்டிலடங் கிடுதலினு
லிவ்வாக்கு மேன்மை யாய
சார்ச்செழுமை யுடையவிரு மலத்தார்க்கு
மொருமலமே சார்ந்து ளார்க்குந்
தீயாகு நீத்தாலன் றதிகார
பதமிகந்து சாரார் மோக்க
கார்ச்செறிவு மலிந்தார்கட் கிதையூர்த்து
வ்கையருளா னகர்த்து மந்த
ஞான்றவர்கண் மோனமடைந் தேதகமிரண்
டென்னுத நலஞ்சார் வாரால். கூ.

முக்குணங்களின் விதப்பு.

வாரமூலா யினிப்படிக வொளிச்சாத்து
விகத்தினையும் வனப்பி னுனை
வயங்கு பத்ம ராகவொளி யிராசதத்தி
னீர்மையையும் மாயம் பூத்த
நீகாரவிந்த்ர நீலவொளி யிராசதத்தி
னீர்மையையுங் குயிலக் நீகண்மோ
நீகாளறுசத் துவமேமறி *லகுதைபிர
காசமெனுங் குணங்க ளுண்டாம்
வீரவிரா சதமேமறி †லுபட்டம்ப
கஞ்சலன மிரண்டு மின்னும்
வெகுளித்தா மதமேமறிற் ¶குரு§வருண
கங்கணனி லிரிந்து நீதான் று

---

* லகுதை=இலேசாயிருக்கை. † உபட்டம்பகம்=பற்று.

¶ குரு=கௌரவம். § வருணகம்=அலியமம்.

மீரமுட னுணைத்தவிந்த வாறுடனும்
பிரதான மெனுமோர் மூன்று
மிணைந்திடிலொன் பானனைவா மிவையிருநான்
கடங்குமவை யியம்பு வேமால். ச.

பயன்.

மாலணைவாச் சாத்துவிகத் தாற்றருமம்
பசுஞானம் *வயிர முண்டா
வலத்தியவம் மூன்றினுக்கு முறையாயே
துறக்கமுதல் வளங்கள் சான்ற
கோலமுடைப் பதமீமாக்க மென்பதூஉம்
பிரகிருதி லயப்பேர் கொள்வை
குண்டமதுங் கிடைக்குமிடை யிராசதத்தா
லுச்சுரிய குணமொன் றுண்டாஞ்
சிலவத னுலாசைப் பிரவிருத்தி
யைச்சுரியஞ் சிறக்கு மத்தைத்
தரிக்கிலட்ட சித்தியென வாமவற்றுட்
டேக்கசித்தி மூன்று முள்ளே
யாலுமந்தக் கரணசித்தி யைந்தாமென்
றறிந்திடுவை யதுஷ்டி யில்லா
வருட்பெருக்கை யெமொருபிரா னுயகுகப்
பிரமமதை யகத்தில் வைத்தோய். கு.

இராஜதகுணசித்தியேட்டின் விபரம்.

வையகத்தர் விழியறியாப் பரமாணு
வினுநுட்ப வடிவந் தாங்கி
வதிந்திடுமோ ரணிமாவு மதிவேகி
யாயளற்றில் வாரி நீரிற்

---

* வயிரம் = வைராக்கியம்.

செய்யவடி யமிழாமற் செல்லுருவா
மிலகிமாவுந் திருத்த மாய
தேதேகந்தி யாதிகளால் வியாபியா
யபனுலகத் தெலியுந் தேதகம்
பையுளிலா *துயருமகி மாவுமுடற்
சித்தியெனப் பகர லாகும்
படர்மனத்தி னினைத்தவெலா மெதிரினல்கு
பிராத்தியுநற் பாங்கு வீங்கு
தையலொண் ணிலையுண்டி செய்ததுபோ
லந்தவுருத் தாங்கி யேக
தருணத்திற் புல்லுபிரா காமியமு
மினுமூன்றுந் தகுமுள் ளீடாம். சு.

உள்ளீடாய் விளம்புசித்தி தன்னிலந்த
மூன்றினையு முரைக்கின் மாயி
னுந்திவந்த பிரமாதி கடவுளர்கண்
ணினுமாணை யோச்சா நிற்கும்
வள்ளீசத் துவமொன்று மைந்தையும்
பகுதியையும் வசமாச் செய்து
மல்குமந்தப் பகுதியின்கீ ழாயசிட்டி
யையுமிழைக்கும் வசித்வ மொன்று
தொள்ளாத பருவதத்தும் பாரமெனப்
பிரசண்ட சுசனத் தானுந்
துவட்டவொணு திருக்குகிரி மாவெனுமொன்
முகுமுன்னர்ச் சொலிய மாய
வள்ளேறு தாமதத்தா லஞ்ஞான
மதருமம்வை ராக்ய மின்மை

---

* இதுவே விசுவரூபம்.

யபிச்சுரிய மின்மையெனு நான்குகுண
முண்டாமென் றறிதி மாதே. எ.

தாமதகுணவிருத்திநான்கின்பயனும், அதர்மபேதம்பத்தும்.

மாதவத்தி லுயர்ந்திடுவே யஞ்ஞானத்
தானரகு மருவுந் தீப்பு
மல்குமதர் மத்தாலே *திரியக்கு
யோனிகவில் வதிந்தி யாணர்ப்
போதமிறந் தேதேதான்ற நேரிடும்வை
ராகமிலாப் போலிக் கோளாற்
பூப்பந்த மிகுமயிச்சு வரியமின்மை
யானிஞத்த புதுமை யேது
மேதினிமே லெய்தாது மேனுவன்ற
வதன்மமதை விரிக்கிற் பத்தாய்
விளங்குமவை சிவவதை பிறன்மனைவி
தனப்புல்லல் †விகிர்தம் பேசன்
மோதமின்மை குருவில்லாள் கமனமசுத்
தங்கோணன் மூர்க்க ¶நித்த
முறையீனம் பிறர்புரிந்த தீங்கினுக்கவ்
வாறுபுரி முரணின் முகும். அ.

ஒடுக்கம்.

ஆகியமுக் குணக்கூறும் பலபேதப்
படினுநல வமல மோக
மதிதுக்க மெனுமூன்றி லடங்குமிவை
கரணத்து ளடங்க லானே

---

* திரியக்கு=பசு பட்சி முதலியன. † விகிர்தம்=பொய்.

¶ நித்த முறையீனம்=நித்யகர்மாதட்டான லோபம்.

பாகியமாம் புறக்கருவி களினிறுத்தப்
பட்டவெனப் பணிப்பரா ராய்ந்தோர்
பாழ்த்ததா மதமொய்வி லிராசதமே
படருமந்தப் படர்ச்சி யோயில்
யோகிகளும் புகழுவுள சாத்துவிக
மெழுமதுவு மோயிற் றாய
யோகாந்த நாதாந்தம் போதாந்த
மாயவரு ளொளியைக் கூடித்
தகியெனுஞ் சொல்லிறந்து சிவமடையும்
பரமமுத்திச் செறிவுண் டாகுஞ்
சின்மயவச் சிவத்தினுடை யெண்குணமு
மருவியங்குச் சேர்ந்தா னிற்பான். கூ.

கீழாலவத்தையெனுங் கேவலாவஸ்தையின் காரியம்.

நிற்குநிலை யுணர்நலத்தாய் கருவிகளுங்
காரணமு நிகள வார்ப்பாய்
நிகழ்த்தாண வாதிகளும் பாசமெனுஞ்
சொலிலடங்கு நிகழ்பா லத்தி
லொற்கமிலாப் புருடதத்வ மிந்திரிய
முட்கரண முழுலும் வாயு
வுரப்புளதன் மாத்ராவச ரதியெனு
முப்பாணங் தொங்கல் *சாக்ர
நற்கலையார் கண்டமிசை முற்சொலிய
விந்திரிய ஞாட்பு நீக்கி
நவிலிருபத் தைந்துநிற்றல் கணவிதய
மதிற்பிராண னுடுஞ் சித்தந்

---

* இந்தச் சாக்ராவத்தை=கண்டு கேட்டுண்டுயிர்ப்பது நீங்கி மயங்கிநிற்குந் தருணமென்றும்.

தற்பிருடன் மூன்றுகிற்றல் சுழுத்தியுந்தி
தனி*வீரண்டு தூரிய மூலத்
தானமதிற் புருடனிற்ற லதீதமயி
சந்தமுநி யமிழ்தைச் சார்ந்தே. கo.

உரைப்பொடி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேலாலவத்தையெனுஞ் சகலாவஸ்தை.

உரைப்பொடி மெழுக்கிடை யொளித்தது போ
லொளியறு கேவலத் தமிழ்ந்தவுயிர்
நிரைப்படி சாக்கிர மடையுமவை
நிருமல மைந்துட னிடையா றுந்
தரைப்புவி முதலிய வைந்துமீரா
†சார்ந்து நிகழ்ந்திடு மிதைத்தானே
கரைப்பெறு முறைக்கணஞ் சகலமெனுக்
கழறிடு மருணைமு நுண்ணியனே. க.

சகலாவஸ்தையின்காரியமாகிய மத்தியாவஸ்தை.

பிணங்கிய யாதிதாரு பழங்கணிறுத்
பிராண னடங்கிய மூர்ச்சையக
முணங்கிய சாக்கிரா தீதமுயிர்
முளைப்பது சாக்கிர துரியமவை
ணுணங்கிய நினைவெழு மிடஞ்சுழுத்தி
யூகவி சாரமக் கனவெனமே

---

* இரண்டி==புருடன், பிராணன்.

† சார்ந்த=கேவலாவத்தையின் காரியத்துள்ள சாக்கிரகருவிகள் ஈடி - உடன் இந்த கரு - கருவிகளுஞ் சேர்ந்த என்பதொருள். இதனால் இவ்வனம் எல்லாக்கருவிகளு நிகழுமென்றும்.

யிணங்கிய விருவிழி நோக்காய
விடநடுச் சாக்கிர சாக்கிரமே. உ.

நின்மலாவத்தையெனுஞ் சுத்தாவஸ்தையின்காரியம்.

தீக்கைபெற் றிறைபாருன் மூன்றினையுந்
தெரிந்திரு பதுமொரு சோடசமு
நீக்க*வி சாரணை புரிவதுவே
நிருமல சாக்கிரங் கருவிகடாந்
தாக்கலு நீங்கலு மின்றிடையே
தபங்குத னிருமல கனவதன்மேல்
விக்கிய கருவிக ணீங்கி†மல
மினியைக் காண்டலச் சுழுத்தியரோ. கூ.

மலமெனுங் கேவல நீங்கியவண்
மன்னரு ளாற்றினை யருளினையே
பலமொடு கண்டருள் வசத்துறைதல்
பவமறு நிருமல துரியமொரு
கிலமுமி லாச்சிவந் தனைக்கண்டு
கிளரதன் மகிழ்ச்சியி லழுந்துவது
நலநிரு மலதுரி யாதீத
நவிலினை தூயவென் றுகுமரோ. சு.

பனாயோகம், பனாபோகம், பனாயதீதம்.

அருளினி லுறைவது நெகிழ்வதுமின்
றந்தர மமர்வது பனாயோகந்
துரிதமி லதனிரு பயனை
சுகவொலி யநுபவம் பனாபோகந்

---

* இந்த விசாரணை யொழுங்கை, ஓங்காரப்பதிகக் கடைக்கவியானறிக.

† இந்தவிடத்திலே மாயாமலமுங் கன்மமலமு நீங்கிவிட்டபடியால், ஆணவமுந் தேய்ந்த நிலைமையாய் நிற்குமென் றறியவேண்டும்.

தெருளுள வதுகடந் திடுநிலையே
சிவமரு ணறும்பரை யாதீதங்
கருளறு மஞனமொ னைந்தவத்தை
கண்டிடு மதனையுங் கழறுதுமால். ரு.

மேலான உத்தமாவஸ்தை யைந்து.

முத்திற மாயவிவ் வருட்பரைக்கு
முதற்பொரு ளாகிய பரமசிவ
மத்துவி தமெனவு ளிருந்திடுமோ
வல்லது புறம்பென விருந்திடுமோ
வெத்திற மாப்பினை யிருந்திடுமோ
வென்றெழு திகைப்பினில் வருமவத்தை
யுத்தம சாக்கிர முதலைந்தா
யுரைத்திடப் படுமது பவித்தமியே. சு.

சுகரூபம், சுகாதீதம்.

அப்பெருஞ் சாக்கிரா தீதமெனு
மறைந்திடு மொருபரை யாதீதத்
தொப்புறு வளிவெளி யொடுங்கிடல்போன்
றொடுங்கிடப் பரசிவ சுகரூபஞ்
சுப்பிர மெனத்தரி சனமாகுந்
துணிந்ததி லடங்கல் சுகாதீத
மிப்படி யறிபவ ரெவ்வையு
மென்குக தேவென விறைஞ்சுவலே. எ.

பாவனை யிலகுயி மிறந்துசும்மா
பதைப்பற விருந்திடு மொருநிலைக்கே
தாவருட் சிவசுக ரூபமது
தோன்றிடும் பதிபசு பாசமெனுக்

கூவிய பொருள்களி லெதையே னுங்
குறிக்கினு முண்டிலை யெனவெணினுஞ்
சிவசு பாவம துதிக்குமருஞ்
சிவசுக நிட்டையு நொடிக்குளறும். அ.

முக்கிய மின்னதென்பது.

இன்னணங் கருவிவி சாரமிலா
தேதிதாரு குறிமறு வுரையினின்றுற்
றன்னுடை நாயக மதையடையுந்
தன்னிச்சிவம் வருவதின் றதனதனுக்
கென்னவி ரவுளதோ வதுவதுவே
யெய்திடு மாகலி னிகலறுத்துச்
சொன்னதை மதியின வெவ்விதத்துஞ்
சோர்வற மருவவே துணிவரோ. கூ.

அருள்விளக்கமும், அருளுஞ் சிவமும் அபிந்நமென்பதும்.

நிகழு நபோமணி யொளிதனையே
நெருங்கின னெடுவுருக் காட்டிடல்போ
னிகழ்வறு மருட்பனை தனையடைந்தோ
னெழிலுரு வையுநனி காட்டுமதே
நிகழ்பரம் பொருளையு மேற்காட்டுஞ்
சிவமரு ளிரண்வடையுங் கதிரொளிபோற்
புகழ்பெறு வோய்திரிந் ததையடைதி
புகழ்ப்புத னிறையருட் பெருக்காலே. க0.

பொறி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொலிமு னூல்கள்பிர மத்தி லேபகுதி
பூக்கு மென்னினது மாயையின்
மறுவி லாக்கலையி லவ்வி யத்தமது
வருமெ னப்பொருள்கொ ளாயிடை
யிவ்வி ரதவலி யத்தமென் பதினு
மதிக மோர்புருட னென்னிலோ
தறுக ணைந்தினு மெழும்பி டும்*புருட
தத்வ மென்றதை யுணர்ந்துகொள். க.

ஓல மாமறைகள் புருட தத்துவ
மூனைத்த லாதனின் மூலமாங்
கால தத்வமுத லைந்து மைந்துடைய
காரணப்பொருளு மெண்ணிலாற்
கோல வாகம மறைந்த வாறுநடுக்
கூறு மோரிழனி லேவ யாமிது
மேல திர்த்தபடி மீவித சம்மத
மெனத்தெ ளிந்திடுவர் விழுமியோர். உ.

சுத்த மானபிர மத்தின் மாயையது
தோன்று மென்புழி விநாசமில்
சுத்த மாயையின் வியாத்த மூல்வலி
சுருங்கி நின்றவிடை மாயைதான்
பத்தி யாளிரித லென்று காணவிணர்
பகுதி தோன்றுபெனிற் காரண
மத்த னைக்குமொரு பகுதி யென்னுமொழி
யமைத லாலதுவு மாயையே. ங.

---

* தேசமாகிய புத்திலிருத்தலின், புருடனென்று சொல்லப்படுகிறது.

வழுத்து *நன்னடுவி னைன டுக்கணுள
மாயை மேமலமல மாயையொன்
றிழுக்கி லாமலுள தென்று காண்டலினு
மேலசி லைந்துசிவ தத்வமு
மழுத்த வாகம மறைந்த வாமுதிய
வார ணைச்சமத மாமிவை
யொழுக்க மாகவது விளக்கு மேலுலகி
லுறுவ துண்மேடாமறை யென்றமேர். ச.

அசுசி யாயபிர தான மானன
வதிர்க்க வுள்ளபிர கிருதியில்
விசர நீத்தமக தத்வ முங்குணம்
விரித்தி டாதவவி யத்தமு
முசித மென்னவுயர் வாயி ருப்பதுபோ
லுச்சி மாயையினு முண்டுகீ
ழசுசி யிற்சான விரண்டு †மாவரண
மடல்விட் சேபமென வாகுமால். ரு.

ஆர ணம்பெரு மகத்து மேனிலவு
மவ்வி யத்தநிலை தாண்டியோர்
பூர ணப்புருட னுண்டெ னிற்சொலிய
போகக் கூற்றிலுள புருடனன்
றீர மிக்குடைய சுத்த மாயையெனு
மெல்லை தாண்டியவிர் கின்றமா

---

* இம்மூ பாசவறிவாலும் பசுவறிவாலுஞ் சிலர் காட்டிய நிராதாரப் போலிநடுக்கஞப் போன்ற தன்று ; "ஆகமமே யாப்தவாக்கியம் அது முக்கியப்பிரமாணம்" என்று ரௌரவாகமஞ் சப்திக்குமாறு பதிஞான பரமேசுரனு லருளிச்செய்த சிவாகமங்கட்கியைந்த வேதார்த்தமென்பதை விளக்குவான் இவ்வன நன்னடுவென்றார்.

† ஆவரணத்தை அவ்வியக்தத்திற்குக் கொள்க.

காரணப்பரம புருட னென்றவனை
யறிவர் காந்தனெறி கண்டுளார். சு.

இந்த வாறுநனி நோக்கும் வேலைநில
மெனும்வி சேடமுத லாமகத்
தந்த முப்பதுமொ ராறு மோகசக
மாகு மென்பரற வோரிதி
யெந்தை யாகமெசித் தாந்த மற்றனையு
மிதி*லி ழிந்தமுடி வாமனை
வந்த வீசனறி யப்ர மாணமிவ
ணுற்று வேமென வறிந்துகொள். எ.

தக்க விந்தெறி நிற்கு மைந்தகிவ
சம்பு வாந்தனுரு குகனேய
சொக்கி நாடியறி யாது ளோர்குநில
துங்க வங்கைமது வுண்டிடா
தக்கை யானது திருப்பி நக்குமதி
யாகு மாலய னறிந்திடாச்
சேக்கர் மேனியை யுளைய றிந்தனனு
மப்பர் †வாக்குமிது தேர்ந்துபார். அ.

ரூப வீசனை யுளத்தி னைக்குமொரு
நேரி லாதுபுற நோக்குதல்
காய வெள்ளிடை தனைச்சு ருட்டவிவர்
கருத்தை முப்புவது போலனை
‡வாயு சங்கிதையு மோலி யும்பெரிய
மறைக ளின்றுளிவும் வேறிலை

---

* இதிற்ற முடிவுகளைப் பரமென்னும் பதிகத்தானறிக.

† அப்பமூர்த்திகள் தேவாரத்தில் "தேடிக்கண்டுகொண்டேன்" என்றெழுத் திருப்பாட்டு.

‡ வாயுசங்கிதை ஞானநிலைமையுரைத்த வத்தியாயத்தில் "கரலம்" என்று தொடங்குஞ் செய்யுள்.

நீயு முன்குகனை நாடி முத்தியி
னிறீஇ நிற்கமுயல் வாயரோ. சூ.

சாம வேதமொழி சவண முந்தலைம
சாற்றும் வேதமொழி மனனமு
மேம விற்றுமொழி நிதித்தி யாசனமு
மெசுரின் மாமொழி சமாதியு
மாமெ னப்புக லொழுங்கு மிந்தவரு
ளாற்றி னுக்கயல தன்றென
நீம னத்திடை யுணர்ந்த ணுமலை
நிருத்த னச்சிவணி வாழியே. கo.

திருமறை.

கலிவிருத்தம்.

திருமறை யெத்துனை நினைக சிறந்துகமன்
மருணைறி நோக்குபு மலைவி லிருந்தவெனைக்
கருணையி னுற்கடை சியின்மெய் கமழ்ந்துளவிவ்
வருணைறி சேர்த்தனை யமிர்த பரம்பொருளை. க.

மூடமி குத்திருண் முழுகி யிருந்தவெனைப்
பாடவி தித்துமெய் பதிய நினைந்ததுபோற்
றேடல றுத்திதாரு சிவமை டையும்படியென்
றோடக மத்தியி லசைவை சுதந்தரனை. உ.

நனவினி னின்றவெவர் நலனஃ தெதாழிந்துவருங்
கனவினு நின்றிடி லுறுதி கலந்திடுமேமற்
சொனநல னின்றென வறிவர் சுகஞ்சுதத
மெனதத முங்கொள லெவித நிரந்தரனை. ங.

அவத்தைக ணித்தறி யமல சிதம்பரமாப்
புவிப்புல னோக்கினு மெவர்கள் பொருந்துவரோ
வவர்க்கித மாற்றுவ ரடியி லிருந்துதிருந்
துவக்கறு தூட்குமொர் துகளளி யன்றரமே. ச.

கிரியையு ஞானமுங் கிளரொ ரிரண்டடியாத்
திரிதரு தேசிகன் றிருவடி யன்புடையா
ரரியடி யானதென் றலையி லழுந்திடினும்
பெரியவொர் பாடவம் பெறுவ னெனங்குகனே. ரு.

ஏறுந டக்கணி லிறைநினை வாமமபம்
வேறுநி னைப்பது தழைய விடாதுசெயும்
பேறுடை யுத்தமர் பெருமை யெனுலகக்
காறுந டைட்டுமெ னமல கலாவலனே. சு.

அருண்முத லாமுனை யகில வுயிர்த்தொகைதாங்
கருதொரு பேறுறி னிழிவு கணித்ததிரோ
பொருநம னார்நகர் புதல்கண் முனைத்திடுமென்
றிருருமுடி வோதவை யுளதோ வுயிர்த்துணையே. எ.

வாரியி னீர்முழு மையுமளி விட்டிடினுந்
சிரிடு நீயொரு சிறிது நடுக்கமுறு
யாரிய வாள்கெனு மளியில் வடித்திடுகண்
ணீரினி லேநினை வுறுவை நிரப்பிலியே. அ.

விரிந்திடு பூதிய முயினை விடுத்தவுடன்
சரிந்துமண் ணுயழி தரமென வத்தவுனைப்
பிரிந்துழல் பாவிகள் பெருமை யெவக்கருதாத்
தெரிந்தகண் ணாடை திரமு மெனக்குறுமே. கு.

ஊன்புதை வீழ்முனை முனது மதர்ப்படைவான்
மீன்படு வாரிதி சுலவும் விழுப்புவிமே
னன்பர தீதகியா யுளனெர் நயப்பையிடாய்
தேன்புகழ் பாடிய தெருள னுளப்பதியே. க0.

ஞாலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாயைக்குட்பட்ட பாசநிட்டை.

ஞாலம் புகழு மறுபத்து
நான்கு கலையுட் கற்றதிற்கார்
போலக் கவியு நிட்டையுமைம்
பொறிகெட் டிருக்கு நிட்டையுமூட்
காலை யிழுக்கு நிட்டையுமுட்
கரண மெருக்கு நிட்டையுமேமன்
சில மிறந்த பாசமெனுத்
தெரிக்குஞ் சைவசித் தாந்தமுறை. க.

பசுபேதமான பசுநிட்டை.

அணிமா முதலெண் சித்திகளுக்
காமெண் டிறத்து நிட்டையுமேமன்
றுணி*யெட் டொளியா நிட்டையுமூட்
டோ†யொன் பானு நிட்டையுமெட்

---

* எட்டொளி = பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இரவி, மதி, ஆன்மா.

† ஒன்பான் = பூப்புகழ்ப் பிரமனெனுந் திருப்பதிகத்துள சிவபேதமாகிய ஒன்பது மேனி.

டணிசேர் *நிறமா யதுபவமா
யலங்கு மிரண்டு நிட்டையுமால்
